
கல்கி
KALKI
10·3·1963
30



டெட் கொண்டு சலவை செய்த ஆடைகளிலுள்ள நம்பிக்கை



இதோ இந்த இணைபிரியாத விளையாட்டுத் தோழர்களின் கம்பீரத் தோற்றத்திற்கும், தன்னம்பிக்கைக்கும் காரணம் அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகள் பூப்போன்ற புதுமையுடன் பளிச்சென்று டெட் கொண்டு சலவை செய்யப்பட்டதால்தான்.

டெட் ஒரு செயற்கை சலவைப் பொருள். கண்ணுக்குப் பளிச்சிடும் பொருள் கலந்துள்ள டெட் ஒரு பூர்ண சலவைப் பவுடராகும். கறை மற்றும் வேசான தீர்வும் டெட் எளிமையாக துவைக்கிறது. மலிதமான ஆடைகளையும்—பருத்தி, சில்க், ரேயான், கம்பளி—வெள்ளை அல்லது பல வர்ணங்களிலுள்ள ஆடைகளையும்—எவ்வித அபாயமுமின்றி திறமையுடன் டெட் சலவை செய்கிறது.


டெட்டின் சலவை உங்களுக்குப் பெருமை.

டெட்டினால் சலவை செய்தால் அதிக வெண்மை கிடைக்கும்.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட். பம்பாய்-1.

பிரிட்டானியா
க்ளாக்ஸோ


தேனீர் அருந்தும் வேளைகளில் உங்கள் குடும்பத்தினருக்கு இனிய சுவையுள்ள க்ளாக்ஸோ பிஸ்கட்டுகளை வழங்கி மகிழ்ச்சி அடையுங்கள்! பிரிட்டானியாவின் க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் புஷ்டி தருகின்ற சிற்றுணவாகும். தேனீர், காபி, குளிர்ந்தபானம் ஆகியவைகளை அருந்துகையில் க்ளாக்ஸோ பிஸ்கட்டுகளை வழங்குங்கள்.



பிரிட்டானியா
பிஸ்கட்டுகள்

தி பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி லிமிடெட்

பாத்திரமறிந்து சாம்பலிடு



சிகரெட்டுச் சாம்பலைச் சுற்றுமுற்றும் சிந்தாமலிருப்பது உங்கள் ஒழுக்கத்திற்கு உதவும். சாம்பல் படிக்கம் (ஆஷ் ட்ரே) தென்படவில்லையெனில் கேட்டுப் பெறுவதே மேல். அதைவிட்டு. புகைத்த துணுக்குகளைத் தீப் பெட்டிக்குள்ளோ வேறு எதனுள்ளோ திணித்து வைப்பது ஆபத்தாக முடியலாம்.

உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனாமா



இழுக்க
இழுக்க
இன்பம்
இறுதிவரை

விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

கல்கி

பொருளடக்கம்

சுபகிருது, மாசி 26உ ★ மார்ச், 10உ 1963

பாரத ரத்தினம்



தோற்றம்:
3-12-1884

மறைவு:
28-2-1963



மலர் 22 | இதழ் 32

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

ராஜன் பாபு

ராஜாஜி

நம்மிடையே பூரண பரிசுத்த உள்ளத்தோடு பரமன் அடிகளில் ஒருவரைப்போல் வாழ்ந்து வந்த ஒரு உயிர், பிரமைகளும் துன்பங்களும் நிறைந்த இவ்வுலகிலிருந்து விடுபட்டு, மெய்ப் பொருளில் லயமாகிவிட்டது.

பழைய தலைமுறையில் மேலும் ஒருவர் மறைந்தார். மிகுந்து நிற்கும் பிரதமர் நேரு அவர்களும், நானுமோ அரசியலில் பரஸ்பரம் பிரிந்து நிற்கிறோம். ஆனால் எவ்வளவு சோதனைகள் ஏற்பட்டாலும், நம்முடைய குற்றங்கள் என்னவானாலும் ஆண்டவன் அருளால் நம் பாரத நாடு அவற்றையெல்லாம் சமாளிக்கும்.

ராஜன்பாபு போய்விட்டார்: ஆனால் வாழ்க்கையில் அவர் நடந்து காட்டிய வழி நமக்கு உதாரணமாக இருக்கிறது. அதை யமன் எடுத்துக்கொண்டு போக முடியாது. நம் குழந்தைகளுக்கு அவரை விடச் சிறந்த வழிகாட்டி யாருண்டு? பகட்டும் படாடோபமுமற்ற அழகும் அருளும், எளிமையும், தர்ம சிந்தனையும், மனிதப் பண்பும், சத்துவகுணமும் வாழ்க்கையில் உருக்கொண்டு அவற்றினுக்கு ஒரு மூர்த்தியாக விளங்கினர்.

மகாத்மாஜியின் மறைவுக்குப் பின் நம் நாட்டுக்கு ஏற்பட்ட மகத்தான நஷ்டம் இது. தேசத்தின் துயரத்தில் மற்றவர்களோடு நானும் பங்கு கொள்கிறேன். தனிப்பட்ட முறையிலும் என்னைப் பொறுத்த மட்டில் ராஜன் பாபுவுக்கு ஈடாக இன்னொரு நண்பர் ஏது? அரசியலில் ஈடுபட்ட நாளாக, பல இன்னல்களின் போது இருவரும் தோளோடு தோள் நின்று பணி புரிந்தோம். இந்த நீண்ட நெடிய காலத்தில் எங்களுக்குள் ஒரு சிறிதேனும் மனவேற்றுமை ஏற்பட்டதே கிடையாது. பரஸ்பரம் நாங்கள் கொண்டிருந்த அன்பும் மரியாதையும் மாறுதல் அறியாமல் வளர்ந்தது. பொன்போன்ற நண்பரை இழந்து நிற்கிறேன். எல்லா மக்களுக்கும் பெரும் துயரம் சம்பவித்திருக்கும் போது என்னுடைய சொந்தக் கிலேசத்தையெல்லாம் சொல்வதற்கு மன்னிப்பீர்களாக!

சந்தேகமில்லை; சவால்தான்!

ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்களின் புது பட்ஜெட்படி போடப்படும் வரிகளெல்லாம் யார்மீது நேரடியாக விதிக்கப்படுகிறதோ அவர்களைப் பாதிப்பதோடு மட்டும் நிற்காது. யார்மேல் வரி விதித்தாலும் அது பொதுமக்கள் மீது தான் இறுதியில் வந்து விழும். முதலாளியின் வருமானத்தை வரியால் குறைப்பதாக மந்திரி பிரமை கொள்ளலாம். ஆனால் லாபம் குறையுமானால் தொழிலாளிக்குரிய ஊதியமும் குறைந்து போகும் என்பதை நாம் மறக்கலாகாது.

புது வரிகளின் விளைவாக விலைகள் ஏகத்தாறாக உயர்வது நிச்சயம். சேமிப்பையெல்லாம் சர்க்கார் தங்களுக்கு ஆக்கிரகம் செய்துகொண்டுவிட்டால் தொழில்களுக்கு எப்படி மூலதனம் கிடைக்கும்? தொழில்களும் படுத்துப் போகும்.


வரிகள் போதாது என்று கட்டாய 'சேமிப்பு' வேறு மேற்கொள்ளப்படுகிறது. ஏற்கனவே கடந்த ஆண்டுகளில் சர்க்கார் அனுஷ்டித்து வந்த பல தவறான கொள்கைகளினால் விலைகள் உயர்ந்து, ரூபாயின் மதிப்புக் குறைந்து மக்கள் தவிக்கும் நிலையில் சம்பளத்தில் ஒரு பகுதியைக் கட்டாயமாகச் சேமிப்புச் செய்ய வேண்டும் என்றும் விதிகள் செய்யப்பட்டுள்ளன. இப்படி 70 கோடி ரூபாய் திரட்டச் சர்க்காரின் உத்தேசமாம்! இதற்குச் 'சேமிப்பு' என்று பெயர்.

ரூ. 275 கோடிக்கு வரி விதித்த பின்னரும் அரசாங்கத்தின் யானைப்பசி தீர்ந்தபாடில்லை. 150 கோடி பற்றாக்குறைக்கு நோட்டு அச்சடித்து வழங்கப் போகிறார்கள்! தங்கத்தை யெல்லாம் கரியாக்கி, ரூபாயின் மதிப்பை ஸ்திரமாக்குவதாக ஒருபுறம் முழங்கும்போதே மற்றொருபுறம் பணவீக்கம் உண்டாக்கப் போகிறார்கள்!

எல்லாம் சீன நெருக்கடியை முன்விட்டுத்தான் செய்யப்படுகிறது, என்

சீனப் போர் நிறுத்தம்; ஸ்திரீகளுடன் போர் தொடக்கம்






கிறார்கள். தேசத்துக்காகத் தியாகம் செய்ய வேண்டியது மக்கள் கடமை என்கிறார்கள். வாஸ்தவம்தான். ஆனால் சர்க்காரின் கடமையை அது செவ்வனே செய்ய வேண்டாமா? மக்கள் உயிருடன் இருக்க வேண்டுமல்லவா? இந்த அளவுக்குச் செலவும் மக்களுக்குக் கஷ்டமும் இல்லாமலே மேலை நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டு ராணுவச் செலவில் கணிசமான பகுதியைச் சமாளித்து விடலாமே!

இதை எதிர்த்துக் கண்டிக்கும் தைரியத்தைக் கூட மக்கள் இழந்து வருகின்றனர் என்பது தான் இதில் பரிதாபகரமான விஷயம். காந்தி மகான் அந்நியக் கொடுங்கோன்மைக்கு அஞ்சி நின்ற மக்களுக்குத் தீரமூட்டினார். இன்று உள்நாட்டின் அதிகார பூதத்துக்கு மக்கள் பயந்து வாழும் இழிநிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படியே மக்கள் எதிர்த்தாலும் மக்களின் அபிப்பிராயத்தை மூடி மறைப்பதே மந்திரிமார்களின் கைங்கரியமாக இருக்கிறது. தங்கக் கட்டுப்பாடு உத்தரவுகளுக்குப் பிரமாதமாக எதிர்ப்பு ஒன்றும் இல்லை என்று கூறும்மொரார்ஜியா மக்கள் கருத்தை மதிக்கப்போகிறார்?

மூர்க்கப் பிடிவாதம் பிடிப்பது நெஞ்சுறுதியைக் காட்டுவதாகும் என்று எண்ணிக் குழம்புகிறார் நிதிமந்திரி. இவ்வாண்டு பட்ஜெட்டை ஒரு சவால் என்கிறார். சவால்தான். ஆனால் அவர் கூறும் பொருளில் அல்ல. இத்தகைய கொடூர பட்ஜெட் போட்டு மக்களை வதைக்கும் ஒரு கூட்டத்தைப் பதவியிலிருத்திய மக்கள், இனியேனும் கண் திறந்து பட்டாளை வாபஸ் வாங்க வழி தேட வேண்டும் என்பதுதான் சவால்.

பர்மாவின் நிழல்?




என்ன சேதி?

மகிழ என்ன இருக்கிறது?

'தலைக்குமேல் ஒரு சாண் ஜலம் ஓடிக்கொண்டிருக்கும் நிலையிலுள்ள நம்மீது நம் தமிழக நிதி மந்திரி புது வரிகள் போட்டிருந்தால் தலைக்குமேல் ஒரு முழம் ஜலமல்லவா ஓடியிருக்கும்? அப்படிப் போடாமல் 'காப்பாற்றி' விட்டாரே' என்று எண்ணிச் சிலர் திருப்தி அடைகிறார்கள். புதிதாக ராஜ்ய சர்க்கார் வரிபோட என்ன இருக்கிறது? நிலத் தீர்வையை உயர்த்தி விவசாயிகளின் புண்ணியத்தை ஏற்கெனவே கட்டிக் கொண்டாயிற்று; நீர்த்தீர்வை விதித்தாகி விட்டது. விற்பனை வரி நம் ராஜ்யத்தில் ஏற்கெனவே மிகவும் கடுமையாக விதிக்கப்பட்டிருக்கிறது. நகர்ப்புற நிலங்களுக்கும் வரி வருவதாகப் பயமுறுத்தி யிருக்கிறது. வேறு சில வரிகளை இதர ராஜ்யங்களுக்குச் சமமாகச் 'சரி செய்ய'ப் போகிறார்களாம். 'சரி செய்வது' என்றால் உயர்த்துவது என்பது காங்கிரஸ் அகராதியின் பொருள். அதோடு மத்திய சர்க்காரானது, ராஜ்ய சர்க்கார்களின் வருமான இனங்களில் பலவற்றைத் தனதாக்கிக் கொண்டு வசூல் செய்து அவற்றை ராஜ்யங்களுக்கு விநியோகிக்கும்போது தமிழகமும் தனக்குரிய பங்கைப் பெறுகிறது. இதனால் ராஜ்யம் வரி விதிக்கக்கூடிய பல இனங்கள் தில்லிக்குக் கைமாறி அங்கே வரி உயர்வு பெற்றிருக்கின்றன. கழுத்து நெரியுமளவுக்கு வரி விதிக்கப்பட்ட ஒரு ராஜ்யத்தில் புதிதாக வரி இல்லை என்று மகிழ்வதில் சாரமில்லை.

முதன் மந்திரியின் குறுக்கீடு

தேசப் பாதுகாப்புக் குழுவில் சென்னை அரசாங்கம் கம்யூனிஸ்ட் அங்கத்தினரைச் சேர்த்துக் கொண்டிருப்பதை ஆதரித்துத் திரு காமராஜ் சட்ட சபையில் பேசியிருக்கிறார். மற்ற ராஜ்யங்களில் கம்யூனிஸ்டுகள் சம்பந்தப்பட்ட மட்டில் எப்படி நடந்து கொண்ட போதிலும் சென்னை அரசாங்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செய்த தேசப் பாதுகாப்புத் தீர்மானத்தின் பேரிலேயே கம்யூனிஸ்ட் அங்கத்தினரைச் சேர்த்துக் கொண்டதாகப் பேசியிருக்கிறார்.



தேசத்தின் மீது ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்கள் யார் என்பதைச் சென்னை முதன் மந்திரி கவனிக்க ஏன் தவறி விட்டார் என்பதுதான் புரியவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியினரிடையே நாட்டுப் பற்றை விடக் கட்சிப் பாசமும் வெறியும் அதிகம். கட்சிக்காக எதையும் செய்யக் கூடியவர்கள் என்பது உலகறிந்த உண்மையாயிற்றே.

சீனக் கம்யூனிஸ்டுகள் ஆக்கிரமிப்புச் செய்துள்ள போது இந்தியக் கம்யூனிஸ்டுகளைச் சாதுக்கள் என்று நம்புவது அறிவுடைமை யாகுமா? இவையெல்லாம் தமிழக முதன் மந்திரி திரு காமராஜ் அவர்களுக்குச் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

ஜனநாயக மரபு

ஜனநாயகம் நல்லசம்பிரதாயங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவதால் தான் நல்ல முறையில் வளர்வது சாத்தியமாகிறது. பிரிட்டன் ஒரு நல்ல ஜனநாயகநாடாக விளங்குவதற்குக் காரணம் அங்கு இன்றும் அத்தகைய நல்ல சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருவதுதான்.

சார்லஸ் பெட்சர் குக்ஸ் என்ற ஒருமந்திரி தமது பதவியை ஓர் அற்ப காரணத்தின் மீது தாமே ராஜிநாமா செய்து விட்டிருக்கிறார். அவர், பத்தொன்பது வயதான ஓர் இளைஞனுக்குத் தமது காரை இரவல் கொடுத்தார். அந்த இளைஞன் ஏதோ தவறாக ஓட்டிப் போலீஸில் பிடிபட்டான். போலீஸ்காரர்கள் அந்த இளைஞனை விசாரித்ததில், ஏற்கனவே தவறுகள் இழைத்ததன் காரணமாகக் கார் ஓட்டும் லைசென்சு அடியோடு மறுக்கப்பட்டவன் என்பது தெரிய வந்திருக்கிறது. இந்த விஷயத்தை இளைஞன் மந்திரியிடம்தான் கூறவில்லை என்று ஒப்புக்கொண்டிருக்கிறான். மந்திரியின் மீது தவறு ஒன்றுமில்லை. எனினும் தான் ஒருவனைத் 'தவறாகக் கணித்த' குற்றத்துக்காக ராஜிநாமா செய்ய விரும்புவதாகக் கூறி பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். பிரதமர் மாக்மில்லனும் அந்த மந்திரியின் ராஜிநாமாவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் தேசத்தில் ஜனநாயகத்தை எவ்வளவு அழகாகப் பேணி பாதுகாக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கும் போது மெய்சிலிர்க்கிறது.

கலைமகளுக்கு ஒரு கோயில்

கலாக்ஷேத்திரத்தில் கலைத் தெய்வத்துக்கு எழுப்பியுள்ள பல சந்நிதிகளில் ஒன்று டாக்டர் சாமிநாதய்யர் நூலகம். கலாக்ஷேத்திரம் அடையாற்றிலிருந்து திருவான்மியூருக்கு இடம் மாறும்போது இந்தச் சந்நிதியும் இடம் மாறும். இப்போதிருப்பதை விடப் பெரிய அளவில்,



வசதிகள் பொருந்திய அழகிய கட்டிடத்தில் அருந்தமிழ் நூல்கள் பொலிவுடன் விளங்கும். இந்த நூல் நிலையக் கட்டடத்துக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. உத்தமமான பணி. இதற்களிக்கும் உதவி உத்தமமான தானமாகும். கரையான்கள் வாயிலிருந்து உத்தமதானபுரம் சாமிநாதய்யரவர்கள் நமக்குக் காத்துக் கொடுத்த கலைச் செல்வங்களை நாம் பின் தலைமுறையினருக்கு நன்முறையில் காத்துத் தருவது தமிழன்னைக்கு மிகவும் உகந்த சேவையாகும். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத அய்யரவர்களுக்கு தாக்ஷிணாத்ய கலாநிதி என்ற பட்டத்தைச் சூட்டிய காமகோடி பீடாதிபதிகள் இந்த நன் முயற்சிக்குத் தமது நிறைந்த ஆசிகளை நல்கியிருக்கிறார்கள். தமிழ்த் தாத்தாவின் திருப் பெயரைத் தாங்கியுள்ள நூல் நிலையத்துக்குத் தமிழ்ப் புத்தாண்டு பிறக்கு முன்பே, தேவைப்படும் நிதியம் அவ்வளவும் கிடைக்கத் தமிழன்பர்கள் தாராளமாக உதவ வேணும். நன்கொடை அனுப்ப வேண்டிய விலாசம்: **கௌரவ அமைச்சர், டாக்டர் சாமிநாதய்யர் நூலகம், அடையாறு, சென்னை-20.**

அய்யாஸ்வாமி அய்யர் மறைவு

இசைத் துறையில் மற்றொரு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. சென்ற தலைமுறையைச் சேர்ந்த கர்நாடக சங்கீத வித்வான் ஸ்ரீ எஸ். அய்யாஸ்வாமி அய்யர் அவர்கள் காலமானது பழங்கால ரசிகர்களுக்குப் பெருவருத்தம் அளிக்கிறது.

கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர் முதலிய சங்கீத சிம்மங்களுடன் நெருங்கியிருந்து இசைப்பணி புரிந்தவர் அவர். தாஸர் கிருதிகளில் எல்லாம் மிகுந்த ஈடுபாடு கொண்டு இசையுலகுக்குச் சேவை புரிந்தவர். தமது புதல்வி ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரி அவர்கள் இசைத்துறையிலேயே பெயரும் புகழும் பெற்று விளங்குவது கண்டு மனத் திருப்தி கொண்டார் ஸ்ரீ அய்யர். அவரது குடும்பத்தினருக்கு நமது அநுதாபங்கள்.

TRAYONS

ட்ரேயான்ஸ் ட்ரேயோபேன்

கொண்டு நவீன முறையில் பொருள்களை பாக் செய்து உங்கள் விற்பனை பிரச்னையை தீர்த்து கொள்ளவும்



ஒரு பொருளை வாங்கு முன், அதைக்கையிலெடுத்து நன்கு பரிசீலனை செய்யாமல் யாரும் முடிவுக்கு வருவதில்லை. வாடிக்கைக்காரரின் பரிசீலனைக்கேற்ப, கைக்கெட்டியவாறு பொருள்களைக் கடையில் வைப்பது சிறந்த முறை தான். ஆனால், அடிக்கடி "கைபடுவதால் பொருள்களின் மேல் அழுக்கும், கறைகளும் பட்டு விடுகிறது. பிறகு அதை வாங்குவார் யார்? இக்காரணத்தினால்தான் பெரும்பாலான உற்பத்தியாளர்கள் தம் பொருள்களை ட்ரேயான்ஸ் ட்ரேயோபேன் கொண்டு பாக் செய்கின்றனர்.

ஸ்டாக்கிஸ்டுகள் :

ரேயான் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்

61, செம்புதாஸ் தெரு,
சென்னை-1.
போன் 21641-தந்தி CELYARN.

கிளைகள் :

போன் 3253-தந்தி CELYARN 68/416 மெயின் ரோடு, செவ்வாய்பேட்டை, சேலம்.

போன் 2598-தந்தி CELYARN 114/A, தெற்கு மாசி வீதி, மதுரை.

போன் 3441-தந்தி RAYONS யுனைடெட் இந்தியா பில்டிங், அவனாசி ரோடு, கோயமுத்தூர்.

RT31SA

அறிவுக் கனலே, அருட் புனலே!

நரேந்திரநாதன் தனது சகாக்களைக் கல்கத்தாவிலுள்ள முக்கியமான இடங்களுக்கு இட்டுச் செல்வான். கல்கத்தாவின் சுற்றுப்புறங்களுக்கும் அவர்கள் செல்வதுண்டு. ஒருநாள் நரேன் தனது கோஷ்டியுடன் மிடியாப்ரஸ்ஸில் உள்ள நவாப் மிருகக்காட்சிசாலைக்கு — சோலைக்கென்றே சொல்லலாம் — சென்று கங்கா நதியில் படகு மார்க்கமாகத் திரும்பிக் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு பையனுக்கு உடல் நலம் குறைந்து ஆபத்தாகிவிட்டது. பையன்களை இறங்கும்படி வற்புறுத்தினர் படகோட்டிகள். இரு மடங்கு கட்டணம் தருவதாகச் சிறுவர்கள் படகோட்டிகளிடம் கெஞ்சினர். ஒருவாறுகப் படகை வலித்து வந்து கல்கத்தாவில் குறிப்பிட்ட கட்டத்துக்குக் கொண்டு விட்ட படகோட்டிகள் சிறுவர்களிடம் மீண்டும் தகராறு செய்தனர். அவர்களைப் படகிலிருந்தே இறங்கக்கூடாதென மிரட்டிச் 'சிறை'ப்படுத்தி விட்டனர். அப்போது நரேன் யாரும் கவனியாதபடி படகிலிருந்து கரையில் குதித்தான். சற்று தூரத்தில் உலவிக் கொண்டிருந்த ஆங்கிலேயச் சிப்பாய்களை அணுகினான். தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் தனது கோஷ்டிக்கு நேரிட்ட கதியை அவர்களிடம் முறையிட்டான். தன்னுடைய சின்னஞ் சிறு பூங்கைகளை வளைத்து அவ்விருவரின் முரட்டுக் கைகளுடன் கோத்துக் கொண்டு அவர்களைப் படகு நின்ற கட்டத்துக்கே தள்ளிக் கொண்டு வந்துவிட்டான்! நரேனின் செயலும் சொல்லும் அவர்களின் மனசைத் தொட்டது. அப்பிள்ளைகளை விடுவிக்குமாறு அவர்கள் படகோட்டிகளிடம் கடிந்து கூறினர். அந்த நாளில் வெள்ளைக்காரச் சிப்பாயின் உத்தரவு என்றால் சும்மாவா? படகோட்டிகள் மறு பேச்சின்றிப் பையன்களை இறங்கிச் செல்ல விட்டனர்.

நரேனைக் களியாட்டம் பார்க்க அழைத்தனர் சிப்பாய்கள்.

''மெத்த நன்றி ஐயா, நான் வருகிறேன்!'' என்று விடைபெற்றுக்கொண்டான் அவன்.

பிஞ்சு நரேன் பாபு ரொம்பவும் பெரும்போக்கானவர்.


நரேந்திரனுக்கு அப்போது பிராயம் பதினொன்று.

ஸிராபிஸ் என்ற ஆங்கிலப் போர்க்கப்பல் கல்கத்தா துறைமுகத்துக்கு வந்திருந்தது. ஏழாவது எட்வர்ட் மன்னர் வேல்ஸ் இளவரசராக இந்தியாவுக்கு விஜயம்செய்தபோதுதான் இந்த யுத்தக்கலமும் வந்திருந்தது.

நரேனுடைய தோழர்கள் தாங்கள் எல்லாரும் அந்தக் கப்பலைக் காண்பதற்கு எப்படியேனும் ஓர் அநுமதிச் சீட்டுப் பெறுமாறு தங்கள் தலைவனை நரேனிடம் கேட்டுக் கொண்டனர். ஆங்கிலேய அதிகாரியிடமிருந்துதான் இந்தச் சீட்டைப் பெற முடியும். ஆங்கிலேய அதிகாரி என்றால் சிம்ம சொப்பனமாக இருந்த காலம் அது. ஆனால் நரேனின் துணிச்சல்தான் நமக்குத் தெரியுமே! அதிகாரியைக் காண்பதற்கு விண்ணப்பத் தாளும் கையுமாகப் புறப்பட்டான் நரேன். துரையை அவ்வளவு சுலபமாக 'இண்டியன் டாட்' ஒருவன் கண்டுவிட முடியுமா? அலுவலக வாசலில் இருந்த 'நந்திகேசுவரன்' நரேனை உள்ளே அனுப்ப மறுத்துவிட்டான்.

'என்ன செய்யலாம்? தோல்வியுடன் திரும்பி வழக்கமே இல்லையே!' என்று நரேந்திரன் யோசிக்கலானான். அதிகாரி

ரா. கணபதி



இருக்கும் இடத்துக்குச் செல்ல வேறு ஏதேனும் வழி இருக்குமா என்று துழாவலானான். அதிருஷ்ட வசமாகக் கட்டிடத்தின் பின்புறத்தில் ஒரு மாடிப் படிக்கட்டும் இருந்தது. யாரும் அறியாதபடி அதில் பதுங்கிப் பதுங்கி ஏறலானான் பாலகன். படிக்கட்டு முடியும் இடத்தில் ஒரு திரை.

திரையை விலக்கினால்......

என்ன விந்தை! நரேந்திரன் தான் காண விரும்பிய துரையின் அறைக்குள்ளேயே நிற்கிறான்! அவனுக்கு முன்பு இன்னும் சிலர் விண்ணப்பத்தாளுடன் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் பின்னோடேயே நரேனும் சென்றான். தன் முறை வந்தபோது விண்ணப்பத் தாளை அதிகாரியின் முன்பு வைத்தான். ஓர் ஆட்சேபணையும் எழுப்பாது அவர் அந்த விநாடியே அதில் கையெழுத்திட்டார்.

துரையின் அறையிலிருந்து நரேன் வெளிவருவதைக் கண்ட 'நந்திகேசுவர' னுக்கு அப்படியே தூக்கி வாரிப் போட்டது.

"நீ எப்படித் தம்பி, உள்ளே போனாய்?" என்று அவன் நரேந்திரனைக் கேட்டான்.

"நான் மந்திரவாதியாக்கும்!" என்று கண்களைச் சிமிட்டினான் நரேன்.

நவகோபால் மித்ராவின் வியாய மண்டலத்தில் நரேனும் அவனது நண்பர்களும் 'ட்ரபீஸ்' என்ற தேகப் பயிற்சி சாதனத்தைக் கூரையில் பொருத்தப் பெருமுயற்சி செய்து கொண்டிருந்தனர். இதைக் காண ஒரு சிறு கூட்டமே சேர்ந்துவிட்டது. அதில் ஓர் ஆங்கிலேய மாலுமியும் இருந்தான்.

சிறுவர்கள் சிறிதுசிறிதாக 'ட்ரபீஸை' உயர்த்திக் கொண்டிருந்தார்கள். பளு தாங்கவே முடியவில்லை. அப்படியே அதனை விட்டு விட்டார்கள். தடாலென்று கீழே விழுந்தது 'ட்ரபீஸ்'. அதுவும் குறிபார்த்து அந்த ஆங்கில மாலுமியின் மீதே விழுந்து தொலைத்தது. அவன் பிரக்ஞை இழந்து தரையில் சாய்ந்தான்.

கூட்டத்தினர் அவ்வளவு பேரும் சிதறி ஓடிவிட்டனர். ஆங்கிலேயன் ஒருவன் இந்தியாவில் இந்தியர்களின் அஜாக்கிரதையினால் சாகப்படுமா? அந்த அஜாக்கிரதை வியாபாரத்தைப் பார்த்துக்கொண்டிருப்பது கூடப் பயங்கரமான குற்றமல்லவா? எனவே மாலுமி மயங்கி விழுந்ததும் அவன் மாண்டே விட்டதாக எண்ணிப் பார்வையாளர்கள் ஓட்டம் பிடித்தனர். நரேந்திரனும் ஓரிரு நண்பர்களும் மட்டுமே மூர்ச்சித்து விழுந்த மாலுமியுடன் தனித்து விடப்பட்டனர். நரேந்திரன் மக்களின் செய்கையால் சிறிதேனும் மனசு கலங்கவில்லை. காயமுற்று விழுந்த ஆங்கிலேயனைக் கண்டுதான் இரக்கத்தால் மனசு கலங்கினான். எனினும் அவனுக்கு உரித்தான மன உறுதியும், தெளிவும் உடனேயே பிறந்தன. தன் ஆடையைக் கிழித்து மாலுமியின் காயத்தைக் கட்டினான். அவனுடைய முகத்தில் நீரைத் தெளித்து மெல்ல விசிறினான்.

மாலுமிக்கு மயக்கம் தெளிந்தது. நரேன் அவனைத் தூக்கலாகப் பிடித்தவாறே அருகில் உள்ள பள்ளி ஒன்றுக்கு இட்டுச் சென்றான். வைத்தியரும் வரவழைக்கப் பட்டார். ஒரு வாரத்தில் ஆங்கிலேயன் சொஸ்தமானான். அவன் பூரண குணமாகிக் கிளம்பும்போது நரேந்திரன் அவனிடம் சிறிய பண முடிப்பை அன்புடன் கொடுத்தான்.

நரேந்திரனே தன் நண்பர்களிடம் சேகரம் செய்து தன் பங்கையும் செலுத்தியிருந்த தொகைதான் அது!

விளையாடித் திரிந்த இந்தப் பருவத்திலும் நரேந்திரனின் துறவற விருப்பம் உள்ளூற விம்மிக் கொண்டேதான் இருந்தது. தன்னுடைய கையிலுள்ள ஒரு ரேகையைக் காட்டி அவன் நண்பர்களிடம் சொல்வான்: "நான் நிச்சயமாக ஒரு சந்நியாசியாகத்தான் ஆகப் போகிறேன். ரேகை சாஸ்திரி ஒருவர் அப்படிச் சொல்லி யிருக்கிறார்" என்று.

கையில் மட்டுமா ரேகை? அவனுடைய இதயத்திலுமல்லவா ஏதோ ஒரு ரேகை இருந்தது? அந்த ரேகை மேலும் மேலும் ஆழ்ந்து சென்று, அந்தப் பிள்ளையின் மூலமாக அவனுடைய இரத்தமே மனித குலத்துக்காகக் கசிவதற்கல்லவா துடித்துக் கொண்டிருந்தது?

சிறுவன் நரேந்திர நாதனின் மீது வாலிபத்தின் சாயை வீசத் தொடங்கியபோது அவனுடைய மனோபாவங்களும் மாறுதல் கண்டன. கடினமான விஷயங்களை விழுந்து விழுந்து படித்தான் அவன். அறிவாராய்ச்சிகளில் அதிகமாக ஈடுபட்டான். இலக்கியத்திலும் சரித்திரத்திலும் தனியானதோர் ஆர்வம் காட்டினான். செய்தித் தாள்களைத் தவறாமல் படித்தான். பொதுக் கூட்டங்களுக்குச் சென்று வரலானான். தான் காண்பதையும் கேட்பதையும் குறித்துப் புதுப் புதுக் கோணங்களில் விமரிசிக்கும் திறனால் தன் சகாக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினான்.

நரேந்திரனுக்குப் பதினைந்தாவது வயசு நடக்கும்போது, அவனுக்கு ஓர் ஆனந்தாதிசய அநுபவம் கிட்டியது.

நரேந்திரன் உயர்தரப்பள்ளியில் மூன்றாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது விசுவநாத தத்தர் மத்தியப் பிரதேசத்தில் உள்ள ராய்ப்பூரில் சில ஆண்டுகள் குடிபெயர்ந்திருக்க நேர்ந்தது. தத்தர் முதலில் ராய்ப்பூர்சென்று விட்டார். பிறகு குடும்பத்தினருடன் நரேந்திரனும் கல்கத்தாவை விட்டுக் கிளம்பினான்.

அந்த நாளில் இன்று போல் நாடெங்கிலும் ரயில் வசதி கிடையாது. எனவே அல்லஹாபாத், ஜபல்பூர் வழியாகக் கட்டை வண்டிகளிலேயே நீண்ட பயணம் நடைபெற்றது. வழி நெடுக எத்தனையோ வன வனாந்தரங்கள், ஜன சஞ்சாரமற்ற பல பாட்டைகள்! ஆங்காங்கே கிராமங்கள், வயல்கள், நீர்நிலைகள். ஆடி ஆடிக்கொண்டு மாட்டு வண்டியில் சென்ற நரேந்திரன் மாறி மாறி வரும் இயற்கை காட்சிகளையும், மக்களையும் ரசித்துக் கொண்டே சென்றான்.

அன்று என்னவோ வானமே கழுவி விட்டது போல 'மொரமொரக்க'ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதிசயமான ஒரு தெளிவுடன் ஆகாசத்தில் நீல நிர்மலம் கமழ்ந்து கொண்டிருந்தது. காற்றிலும் ஓர் அதிசயமான தெளிவும், தெளிவில் விளைந்த சுகமும் இனித்தன. அந்தத் தூய வானத்தைப் பின்னணியாகக் கொண்டு, தூய காற்றில் மர்ம ஒலி என எழுப்பிய மரங்களின் இலைகளிலும், கொத்துக் கொத்தாகப் புஷ்பித்திருந்த மலர்களிலும் என்றுமில்லாத ஒரு தூய்மையும், பசுமை ஒளியும் ததும்பின. அவற்றில் எங்கிருந்து அவ்வளவு தெளிவு வந்திருந்தது? கிளைகளிலிருந்து கூவும் பட்சியினங்களின் கீதத்திலும் அற்புதமானதொரு பரிசுத்தம் பளிச்சிட்டது. அவை தங்கள் கீதத்தின் எதிரொலி அலைகளைப் பரம ரசிகனை நரேந்திரனின் உள்ளத்தில் எழுப்பி நிரப்பின. இத்தனை அழகுகளுக்கும் எல்லை கட்டி வரையறை செய்தன சாலையின் இருபுறத்தையும் நெருக்கிய விந்திய பர்வதத்தின் உன்னதமான



தொடர்கள். புள்ளினங்களின் நூறு நூறு சப்த ஜாலங்கள். அவற்றின் இறகில் நூறு நூறு வண்ண ஜாலங்கள்; நூறு நூறு மென்மைச் சாயல்கள். அதற்கும் மிஞ்சி மரங்களிலும், கொடிகளிலும் பூத்துக் குலுங்கிய புஷ்பங்களில் எத்தனை எத்தனையோ நிற பேதங்களும், மென்மை பேதங்களும். புஷ்பங்கள் தாம் தங்கள் தேனின் இனிமையைக் குரலாக்கிக் கொண்டு, பட்சிகளாக உரு மாறிப் பறக்கின்றனவா? அல்லது பட்சிகள்தாம் தம் இன்னொலியைத் தேனாக்கிக் கொண்டு மலர்களாக உரு மாறி மோனத் தவம் புரிகின்றனவா? பட்சிகளின் வண்ணத்திலுள்ள பல நூறு பேதங்களும், புஷ்பங்களின் சுகந்தத்திலுள்ள பல நூறு பேதங்களும் போதாவென்று அவற்றைச் சுற்றி 'ஜிவ்' என்று ரீங்காரமிடும் தேனீக்களின் இசையில் எத்தனை எத்தனையோ ஸ்வர பேதங்கள். நரேனும் ஒரு தேனீயாகி இந்த இயற்கை எழிலில் ஊறும் தேனை மாந்திக் கொண்டிருந்தான்.

எத்தனை ஆயிரம் வண்ணபேதமிருந்தாலும் அவற்றுக்கெல்லாம் ஆதாரமான ஒரே ஒரு வண்ணமுண்டு. வண்ணமென்று சொல்ல முடியாத வெண்மையே அது. எவ்வளவு வண்ணங்களிலிருந்தாலும் அவை கூடும்போது அந்த வெண்மைதான் பிறக்கும். அதே போல் எத்தனை ஸ்வரபேதமிருந்தாலும் அவை இசையும்போது ஒரே சங்கீதம் தான் உண்டாகி, அந்த ஒன்றிலேயே அவ்வளவு ஸ்வரங்களும் முழுகிக் கரைந்து விடும். இப்படிப் பேதங்களுக்கெல்லாம் ஆதாரமாகவும், இறுதியாகவும் உள்ள ஏதோ ஒன்றைப் பற்றிப் பஞ்சுத் தும்புகள் போல நரேனின் எண்ணங்கள் அவனே யறியாத நிலையில் பிசிர் விட்டுக் கொண்டிருந்தன.

ஆகா, இத்தனை சௌந்தரியங்களுக்கும் சிகரம் வைத்தது போல அதோ அந்த மலைச் சிகரங்களிடையே அது என்ன அற்புதக் காட்சி! ஒரே சிகரம் பிளந்து இரு சிகரங்களாக நிற்பது போன்ற அந்த இடை வெளியில் எத்தனை பெரிய தேன்கூடு! அடேயப்பா, எத்துணைப் பெரியது! அவ்வளவு உயரத்



தில் இவ்வளவு பெரிய தேன் தேக்கத்தை எழுப்ப எத்தனை காலம் பிடித்திருக்கும்? இவ்வளவு பெரிய கூட்டை நிர்மாணிக்க எத்தனை ஆயிரம், பதினாயிரம் தேனீக்கள் தேவையாகியிருக்கும்? இசைச் சுவையும், இன்சுவையுமே வாழ்க்கையாகக் கொண்ட கலை ஜந்துக்கள் கோடானுகோடியாக இசைந்து எழுப்பிய அற்புதம் அல்லவா, அதோ அந்த மலைச்சிகரத்தில் தொங்கும் பிரம்மாண்டமான தேன்கூடு!

மேலே விரிந்து பரந்த நிர்மலமான ஆகாசம்! அந்த ஆகாசத்தின் நீலத்திலிருந்து பிரிக்கமுடியாத நீலமான மலைமுகடுகள்! மலைமுகட்டில் சின்னஞ் சிறிய ஜீவராசிகளின் மகோன்னதமான, நிர்மலமான ஒத்துழைப்பு! இவ்வளவு நேரம் கண்ட தூய்மைகளை எல்லாம் விடத் தூய்மையான, தெளிவுகளை எல்லாம் விடத் தெளிவான அன்பினால்தான் அந்த அற்ப ஜந்துக்கள் ஒன்றுகூடி இந்த அற்புதத்தை உண்டாக்கி யிருக்கின்றன. அத்தகைய அன்பு எங்கிருந்து வந்தது?

எங்கிருந்து? எங்கேயிருந்து?

எங்கிருந்து இந்த சுந்தரமயமான பெருமைகள் உதித்தனவோ அங்கே யிருந்துதான்! அந்த அன்பின் எல்லையை எண்ணி அதிசயித்தான் நரேந்திரன்! எல்லையற்ற கடல் அது என்று ஒருவாறு புரிந்தாற் போல் புரிந்து கொண்டு அந்தக் கடலிலேயே ஆழ்ந்து அமிழ்ந்துவிட்டான் நரேந்திரன். பிசிர் விட்ட எண்ணங்கள் முறுக்கேறி ஒன்றாக இழைந்து விட்டன. மலரின் மென்மையும், மணமும், அதில் ஊறும் தேனின் இனிமையும், அந்தத் தேனைப் பருகும் வண்டினங்களின் அன்பான உழைப்பும், மரங்களின் பசுமையும், கொடிகளின் நளினமும், பட்சிகளின் மதுர மோகன கீதமும், மலைகளின் மோனமும், வானத்தின் காம்பீர்யமும் எந்த ஒரு மகாமதியின் கற்பனையில் உதித்தனவோ, அந்த மகாமதியிலேயே மூழ்கிவிட்டான் நரேன். சிறிய ஒலியைப் பேரொலி அமுக்குவது போல, சிறிய ஒளியைப் பேரொளி மங்கச் செய்வது போல





நரேந்திரன் கண்ட அதிசயப் பிரபஞ்சத்தை அதிசயமற்றதாக்கும் ஆதாரத்தில் அவன் மூழ்கிக் கொண்டிருந்தான்!

பரம்பொருளை 'சாந்தம், சிவம், சுந்தரம்' என்பார்கள்; பரம்பொருளே அமைதி, அன்பு, அழகு என்பார்கள். அழகின் வழியே அன்பைப் புரிந்து கொண்ட நரேந்திர நாதன் அமைதியில் திளைக்கலானான்.

நரேந்திரன் எவ்வளவு காலம் சுய நினைவிழந்து கட்டை வண்டியில் கிடந்தான் என்று நாம் சொல்ல முடியாது. அநுபவம் செறிந்த அகவாழ்வுக்குக் கடிகாரத்தைக் கொண்டு காலம் கணிக்க முடியுமா, என்ன?

நறும்புனலில் நீராடி விட்டுத் திரும்பும் போது உடலில் புதுப் பொலிவு காண்பது போல, அழகுப் பொழிலில் முக்குளித்து உள்ளத்தில் புதுப் பொலிவுடன், சாந்தியுடன், சௌந்தரியத்துடன் நரேந்திரன் கண்விழித்தபோது கட்டை வண்டி ஆடி அசைந்து கொண்டு பல கல்கள் கடந்து விட்டன.

இதுவே நரேந்திரனுடைய முதலாவது பரவச நிலை.



'அநித்தியமான பொருளைக் கொண்டு நித்தியப் பொருளை அடைந்தேன்' என்று உபநிஷதத்தில் வரும். அநித்தியமான எல்லாப் புறத் தோற்றங்களிலும் நித்தியமான அக அழகும், அன்பும் இருப்பதால்தான் அவை நித்திய வாழ்வுக்கு வழி கூட்டுகின்றன. இயற்கையிலுள்ள இந்தச் சாகாத அழகையும், உயிர்க் குலத்தில் உள்ள சாகாத அன்பையும் நரேந்திரன் புரிந்து கொண்டுவிட்டான்! அமர ஜீவனத்துக்கு முதற்படி எடுத்து வைத்து விட்டான்!

சிறு வயதிலிருந்தே நரேந்திரனுக்கு இன்னொரு விசித்திர அநுபவம் ஏற்படுவதுண்டு. இதைப் பற்றிப் பிற்பாடு ஸ்வாமி விவேகாநந்தர் கூறியதையே இங்கு பார்ப்போம்:

''என்னுடைய பாலியத்திலிருந்து நான் ஏதேனும் ஒரு பொருள், மனிதன் அல்லது இடத்துடன் தொடர்பு கொள்ளும் போது அந்தப் பொருளையோ, மனிதனையோ, இடத்தையோ முன்பே அறிந்திருந்தது போலச் சில சமயங்களில் தோன்றும். எப்போது அவ்வாறு பரிசயம் கொண்டிருந்தோம் என்று எவ்வளவு சிந்தித்தாலும் விடை கிடைக்காது....

''எவ்வாறோ, நான் பிறப்பெடுக்கும் முன்பே, இந்த ஜன்மத்தில் தொடர்பு கொள்ளப் போகும் பொருள்களையும், மனிதர்களையும் கண்டிருக்கிறேன் என்பதே என் நம்பிக்கை.''

ராய்ப்பூரில் நரேந்திரன் படிக்கக் கூடிய பள்ளி ஏதுமில்லை. இதனாலும் அவனுக்கு ஒரு லாபம் கிடைத்தது. உயர்மதி படைத்த விசுவநாத தத்தருடன் நெருங்கிப் பழகும் பேறுதான் அது. பற்பல விஷயங்களைத் தனயனுடன் பரிமாறிக் கொள்வார் தந்தை. பிள்ளையின் மீது எந்தக் கருத்தையும் திணிக்காமல் அவனுக்குப் பூரணமான சிந்தனை சுதந்திரம் அளித்தார் விசுவநாதர்.

தமது பகுத்தறிவுக் கண்ணோட்டத்தின் காரணமாக விசுவநாத தத்தர் சநாதன பாரத தர்மத்தின் ஆசார அநுஷ்டானங்களைப் பின்பற்றவில்லை. புவனேசுவரி தேவி இந்திய உணர்வுக்கு உறைவிடமாக இருந்தாளெனில் விசுவநாத தத்தரோ மேநாட்டு அறிவையே முக்கியமாகக் கொண்டிருந்தார்.

'இக உலக வாழ்க்கையை ரம்மியமாக நடத்த வேண்டும்; தீய நெறியில் செல்லாமல் உலகில் இன்பமாகவாழ வேண்டும்' என்பது தான் விசுவநாதரின் கொள்கை என நாம் ஊகிக்கலாம். வாழ்க்கையின் ரமணீயமான அம்சங்களில் ஒன்றாகச் சங்கீதத்தை மதித்தவர் விசுவநாதர். தாமே இனிய சாரீரத்தில் பாடும் திறன் படைத்திருந்தவர். ஒருவருக்கும் ஒரு விதமான தீங்கும் செய்யாமல் இன்பம் துய்ப்பது இசை வழியாகவே என்று கருதியவர் அவர். இது காரணமாக அவர் நரேந்திரனும் இசைப் பயிற்சி பெறச் செய்தார்.

ஆஹா, நரேந்திரரின் அமுத கானத்தைப் பருகியவர்கள் அதன் இனிப்பையும், உள்ளுருக்கும் உணர்ச்சியையும் பற்றி எவ்வளவு கூறியிருக்கிறார்கள்? பிற்பாடு, அப்படிப் பாடியவரே அல்லவா பரமஹம்ஸ ராமகிருஷ்ணரின் ஞான மயமான மோன அநுபவத்தை மேதினி யெல்லாம் புல்லரிக்கப் பாடிய சங்கீதமாகி விட்டார்! **(தொடரும்)**


அகாதமி பரிசு பெற்ற 'அக்கரைச் சீமை'



மூன்றாவது முறையாகக் கல்கியில் வெளியான ஒரு நூலுக்குச் சாகித்திய அகாதமியின் பரிசு கிடைத்திருப்பதை வாசக நேயர்களுக்குப் பெருமிதப் பூரிப்புடன் தெரிவித்துக் கொண்டு மகிழ்ச்சி அடைகிறோம். ராஜாஜியின் 'சக்கரவர்த்தித் திருமகனும்' பேராசிரியர் கல்கி அவர்களின் அலை ஓசையும் சாகித்திய அகாதமி பரிசு பெற்றன. இப்போது திரு சோமு அவர்கள் இந்தப் பத்திரிகையில் தொடர்ந்து எழுதி வந்த 'அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்' என்ற நூலுக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு அளித்துள்ளனர். பாரதப் பிரதமர் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு அவர்கள் பரிசுத் தொகையைத் தேசிய பாதுகாப்புப் பத்திரங்களாக இம்மாதம் முப்பத்தோராம் தேதியன்று வழங்குவார்கள். திரு சோமு அவர்களுக்குக் கல்கி வாசகர்கள் சார்பிலும் கல்கி ஸ்தாபனத்தின் சார்பிலும் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"வந்தேன், பார்த்தேன் வெற்றி கொண்டேன்" என்றாராம் ஜூலியஸ் ஸீஸர். அது போல் 'சென்றேன், கண்டேன், எழுதினேன்' என்று பிரயாணக் கட்டுரைகள் எழுதி விடுவது சுலபம். ஆனால் அவற்றைப் படிப்பது கடினம்! செல்லும் இடங்களிலெல்லாம் அந்த அந்த அரசாங்கங்கள் அந் நாட்டைப் பற்றித் தயாராக அச்சடித்து வைத்திருக்கும் விவரங்கள் மலை போல் குவிகையில் அவற்றை எதிரே வைத்துக் கொண்டு எழுதத் தொடங்குபவனுக்கு அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்கிற ஆசையைக் கட்டுப்படுத்திக் கொள்வது சிரமமான காரியம்தான். சோமுஅவர்கள் இதில் வெற்றி பெற்று, புள்ளி விவரங்களுடன் கூடிய பட்டியல் தயாராவதைத் தவிர்த்தது ஒன்றே போதும், யாத்திரைக் கட்டுரைகள் எழுதுவதற்குச் சகல விதத்திலும் தகுதியுடையவர் அவர் என்பதனை நிரூபிப்பதற்கு!

லண்டன் மாநகரத்தை ஒருவன் சென்றடைந்ததும் சாதாரணமாக அவன் கவனத்தைக் கவரக் கூடியன என்ன? பிரும்மாண்டமான அந்நகரின் எழில் மிகு கட்டடங்கள், விசாலமான வீதிகள், மாடி பஸ்கள், பாதாள ரயில்கள், இரவைப் பகலாக்கும் வர்ண விளக்குகள் இத்தியாதி. ஆனால் சோமு அவர்களை முதலில் கவர்ந்த விஷயம் அந்நாட்டினரின் கண்ணியம்! அடுத்து அவர் செல்லும் இடம் டாக்டர் ஜான்ஸனின் வீடு! அங்கு செல்கையில் அவருக்கு நினைவு வருவது திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் ஸ்ரீ டி. கே. சி.யின் வீடும் அங்கே நடைபெற்ற வட்டத்தொட்டி என்ற இலக்கியக் கழகமும்! இப்படி இலக்கியக் கண் கொண்டும், கலை உள்ளத்துடனும் ஒவ்வொரு இடமாகச் சென்று பார்த்து, பார்த்ததை மட்டும் எழுதாமல், விசாரித்தும், படித்தும் அறிந்தவற்றையும் அதற்கும் மேலாக அவ்விடங்களைப் பார்க்கையில் தமக்கு ஏற்பட்ட மன உணர்ச்சிகளையும், அவை தூண்டிவிட்ட நினைவுகளையும் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதே இந்நூலுக்குத் தனிச் சிறப்பாகும். இதனால் ஷேக்ஸ்பியர், ஜான்ஸன், போப் போன்றவர்களைக் குறித்துத்தான் எழுதியிருக்கிறார், சாமான்யமான விஷயங்களை விட்டுவிட்டார் என்பதில்லை. லண்டன் சாப்பாடு, உல்லாச மாளிகை போன்ற அத்தியாயங்களும் நூலில் இடம் பெறுகின்றன; நூலாசிரியரின் திறனால்



திரு சோமு

இலக்கிய அழகுடன் மிளிர்கின்றன. ஹாஸ்யத்தை அபரிமிதமாய்த் திணிக்காமல் அள்ளித் தெளித்தாற்போல் அளவுடன் பயன்படுத்திப் படிப்பவருக்கு அலுப்புத் தட்டாத வகையில் பிரிட்டனின் பல பாகங்களுக்கும் அழைத்துப் போகின்ற திரு சோமு அவர்கள் ஏதோ உருக்கமான நாவலைப் படிப்பதுபோல் வாசகர்களின் நெஞ்சை நெகிழவும் வைக்கின்றார் சில சந்தர்ப்பங்களில்.

அகில இந்திய ரேடியோவிலிருந்து மத்திய அரசாங்கத்தினரால் அனுப்பப்பட்டு லண்டனில் அமைந்துள்ள பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிலையத்தில் (பி. பி. ஸி.) பணியாற்றச் சென்ற திரு சோமு தமது அலுவல்களை மட்டும் கவனித்துக் கொண்டு திரும்பாமல், நமக்காக ஓர் அருமையான பிரயாண நூல் எழுதும் வேலையையும் இழுத்துவிட்டுக் கொண்டு சிரத்தையுடன் அந்தப் பணியை முடித்து வைத்ததற்காகத் தமிழர்கள் வாழ்த்துவார்கள்.

சுவை மிக்க இந்நூலைப் பல புகைப்படங்களுடன் அழகிய புத்தக உருவில் வெளியிட்டிருக்கிறார்கள் சென்னை பிராட்வேயிலுள்ள பாரி நிலையத்தார். இதன் விலை ரூபாய் ஐந்து.

''வெளியூர்களுக்குப் போகவே போகாதவனும் கடல் கடந்த தேசங்களைப் பற்றி மிகவும் குதூகலம் கொண்டவனுமாகிய நான்'' என்று தொடங்கி இந்நூலுக்குச் சின்னதாக ஒரு முன்னுரை வழங்கியிருக்கின்றார் ராஜாஜி. முன்னுரையை எழுதிய முகூர்த்தம் ஐரோப்பா மட்டுமல்ல, அமெரிக்காவுக்கே சென்று திரும்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது அவருக்கு!

இப்புத்தகத்தைப் படிப்பவர்கள் அனைவருமே பிரிட்டனையும், ஐரோப்பாவையும் சுற்றிப் பார்த்துத் திரும்பிய திருப்தி அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. சாகித்திய அகாதமி இந்த அரிய நூலுக்குப் பரிசளித்ததிலும் வியப்பில்லை.



புத்தக வியாபாரிகளுக்கு அநீதி

சென்ற வருடம் தங்கள் 'கல்கி' இதழில் பள்ளிக்கூடப் புத்தகங்களைச் சர்க்காரே வெளியிடுவதனால் உண்டாகும் தீய விளைவுகளைப் பற்றி எழுதினீர்கள். இப்பொழுது மேலும் தங்களுடைய வெளியீடுகளை விஸ்தரிப்பதனால் புத்தக வியாபாரத்தில் சிறு முதலீடு போட்டுத் தங்கள் வாழ்க்கையை நடத்திவரும் பல்லாயிரக்கணக்கான புத்தக வியாபாரிகளுக்கு அநீதி இழைக்க நமது சர்க்கார் முன்வந்துள்ளனர். டெண்டர் விளம்பரம்செய்து ஜில்லாவுக்கு ஒரு புத்தக வெளியீட்டாளர்வீதம் தேர்ந்தெடுத்து அவர்களிடத்தில் ஜில்லா முழுவதற்குமான வியாபாரத்தை ஒப்படைத்துள்ளனர்.

டெண்டர் விதிகளின்படி அவர்கள் ஒரு தாலூகாவுக்கு ஒரு கடை வைத்தோ அல்லது தங்கள் பொறுப்பில் ஓர் உதவி ஏஜண்டை நியமித்தோ வியாபாரம் செய்து கொள்ள வேண்டும். மேலும் ஏஜண்டுகளோ, உதவி ஏஜண்டுகளோ மற்றச் சில்லறை வியாபாரிகளுக்குப் புத்தகங்களை விற்பனை செய்யக் கூடாது. இதனால் சிறிய அளவில் வியாபாரம் செய்து வரும் வியாபாரிகள் ஒதுக்கப்படுகின்றனர். பணமும் செல்வாக்கும் படைத்த சிலர் மட்டுமே (ஏஜண்டுகளும் சப்—ஏஜண்டுகளும்) வியாபாரம் நடத்த முடியும். ஒரு ஜில்லாவுக்கு ஏஜன்சி எடுக்கச் சுமார் ரூ. 50,000 ரொக்க டிபாசிட்டும், இதர வசதிகளும் வேண்டும். எல்லாருக்கும் இது சாத்தியமா?

தயவுசெய்து இதற்குமுன் ஈ. எஸ். எல்.ஸி. புத்தகங்கள் விற்பனை செய்தது போல் சர்க்கார் தங்கள் வெளியீடுகள் எல்லாவற்றையும் சர்க்கார் அச்சக விற்பனை டிப்போ மூலம் விற்பனை செய்து எல்லா வியாபாரிகளுக்கும் புத்தகங்கள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

திண்டுக்கல்
10—2—63 என். கிருஷ்ணன்

அவசரகால நிலைமை

அவசரகால நிலைமையின் காரணமாக இந்திய விமானப் படையை மேலும் பலப்படுத்துவதற்காக அரசாங்கம் 'துணைவிமானப் படை' ரிஸர்விஸ்டுகளைச் சேர்த்தது.

இவர்களின் தற்போதைய 'சிவில்' வருமானத்துக்கு எந்த நஷ்டமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று அரசாங்கத்தின் சார்பில் பத்திரிகைகளின் மூலமும் அறிவிக்கப்பட்டது. திறமையான சேவை தேவைப்படும் நிலையில் நமது சர்க்கார் மேற்கண்டவர்களை அழைத்ததே தவிர சம்பளத் திட்டத்தைத் தெளிவாக இதுவரை அறிவிக்கவும் இல்லை; அமுல் நடத்தவும் இல்லை. 'சிவில் டிபார்ட்மெண்டில்' பதினைந்து அல்லது இருபது வருடம் சர்வீஸ் பார்த்தவர்களுக்குக் கூட விமானப் படையின் குறைந்த பதவி சம்பளமான 118ரூபாய் தான் கடந்த நான்கு மாதங்களாகக் கொடுத்து வருகிறார்கள். மேற்கண்ட நிலைக்கு ஆளான ஒருவரின் அபாக்கிய மனைவிதான் நான். எட்டுப் பேர்கள் உள்ள எங்கள் பெரிய குடும்பத்தை ரூ. 245 வருமானத்தில் மிக்க சிரமத்துடன் நடத்தி வந்தேன். தற்போது கிடைக்கும் 118 ரூபாயில் கணவரின் செலவு நீக்கி, நாற்பது ரூபாய் வீட்டுக்குக் குடிக்கூலி கொடுத்து மீதி உள்ள தொகையை வைத்து எப்படி குடும்பத்தை நிர்வகிக்க முடியும்?

கடந்த நான்கு மாதங்களாகக் குடும்பம் வறுமையில் தவிக்கிறது. இன்னும் எவ்வளவு காலம் அவசரகால நிலைமை நீடிக்குமோ? நாங்கள் முன்கூட்டியே எதுவும் சேமித்து வைத்தது மில்லை. எனது உள்ளக் குமுறலை என் கண்ணில் நீர் மல்க எழுதுகிறேன்.

8—2—63 அவசரகால விமானப்படை சேவைக்காக அழைக்கப்பட்ட ஒருவரின்மனைவி

இந்தியாவைச் சுற்றி இருபதாயிரம் மைல்கள்

அடர்ந்த அந்தக் கானகத்தினூடே அமைந்திருந்த சாலையில் ஒருவர் உல்லாசமாகச் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தார். குயில் ஒன்று 'கக்கூ கக்கூ' என்று உல்லாசமாய்ப் பாடிக் கொண்டிருந்தது. சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரின் மனம் ஆனந்த பரவசமடைந்தது. ஆனால் இது அதிக நேரம் நீடிக்கவில்லை! தொலைவில் நரி ஊளையிடும் சத்தமும் எழுந்தது. சைக்கிளில் சென்றவர் பயத்தினால் நடுங்கியபடியே 'பெடலை' வேகமாக மிதிக்க முயன்றார்!



பாதையோரத்தில் பசும் புல் தரையில் விழுந்து புரண்டு விளையாடிக் கொண்டிருந்தது ஒரு புலிக்குட்டி. பிரயாணி பயத்தை மறந்து அந்த அழகிய காட்சியினால் கவரப்பட்டு நின்று விட்டார். மரகதப் பச்சை நிறத்துக்கிடையில் அதன் மஞ்சள் நிற மேனி சூரிய ஒளி பட்டுப் பளபளத்தது.

அதைப் பிடித்துக் கொண்டு போய் வீட்டில் வளர்த்தால் என்ன? என்ற ஆசை உண்டாயிற்று பிரயாணிக்கு. இரண்டடி நடப்பதற்குள் புலிக்குட்டி மிரண்டு ஓடிற்று. விடாப்பிடியாக அதனைப் பின் தொடர்ந்தார் அவர்.

சிறிது தூரத்தில் ஒரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தது தாய்ப் புலி! மற்றக் குட்டிகளும் அங்கே விளையாடிக் கொண்டிருந்தன! இந்தக் குடும்பத்துடன் போய்ச் சேர்ந்து கொண்டு தைரியமாக அவரைத் திரும்பிப் பார்த்தது புலிக்குட்டி. அவ்வளவுதான்! சைக்கிள் பிரயாணி உடனே எடுத்தார் ஓட்டம்! நல்ல வேளை! தாய்ப்புலி அவரைத் துரத்தாது விட்டது!




பரந்த நமது நாட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டுமானால் ஆகாய விமானத்தில் பறந்து, அயல்நாட்டுத் தலைவர்கள் பார்ப்பதுபோல் ஒரே வாரத்தில் பார்த்து விடலாம். வேறு வேலை இல்லா விட்டால் நிதானமாகக் கால்நடையாகவும் சுற்றி வரலாம். ஆனால் மதுராந்தகத்தைச் சேர்ந்த இருபத்தோரு வயதே நிறைந்த இளைஞர் ராஜமாணிக்கத்தைக் கேட்டால் மற்ற ராஜ்யத்து மக்களைக் கண்டு பழகவும், அவர்களுடைய மொழிகளைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளவும், நமது பாரத கலாசாரத்தின் பல்வேறு தோற்றங்களையும் சாயல்களையும் பார்த்து ரசிக்கவும், ஒரு சைக்கிள் சவாரி செய்தால்தான் நல்லது என்பார்.

ஆகஸ்டு 1961-ல் ஒரு 'பிலிப்ஸ்' சைக்கிளை வாகனமாகக் கொண்டு சென்னையை விட்டுக் கிளம்பி, சுமார் பதினைந்து மாதம் நாட்டைச் சுற்றி 20,000 மைல்கள் சென்றிருக்கிறார் இவர். தினந்தோறும் எட்டு மணி நேரம் சைக்கிள் சவாரி செய்வாராம். நாளைக்கு ஐம்பது மைல்கள் போவாராம்!

ஒரு நாள் காட்டில் செல்லும்போது கள்வர் கூட்டம் ஒன்று அவரைச் சூழ்ந்து கொண்டது. சட்டைப் பையில் உள்ளதைக் கொட்டிக் கொடுக்கும்படி கள்வர் தலைவன் கேட்டான். ஆனால் ராஜமாணிக்கத்தின் பர்ஸில் ஐந்து ரூபாய் மட்டுமே சில்லறையாக இருந்தது. அனுதாபத்துடன் ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''கைச் செலவுக்கு நீயே வைத்துக் கொள்'' என்று அதை அவரிடமே திருப்பித் தந்து விட்டான் திருடர் தலைவன்!

இப்படி எவ்வளவோ அநுபவங்கள்.



அவர் சாகசச்செயலைப் பாராட்டிய பிலிப்ஸ் சைக்கிள் உற்பத்தி செய்யும் அம்பத்தூர் டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை நிர்வாகஸ்தர் திரு ஏ. எம். எம். அருணாசலம் அவருக்கு ஒரு புது பிலிப்ஸ் சைக்கிளைப் பரிசளித்தார்.



போகிற போக்கில்...

சிட்டுக்குருவி

சனிக்கிழமையன்று திடீரென்று பர்மியப் போலீஸார் ரங்கூனிலும் பர்மியப் பட்டணங்களிலும் உள்ள பாங்கிகளின் உள்ளே நுழைந்தார்கள். போலீஸார் வரவே பரபரப்பு ஏற்பட்டது. சிப்பந்திகள் திருதிருவென விழித்தார்கள்.

''கொடுங்கள், உங்கள் கணக்குப் புத்தகங்களை'' என்று போலீஸார் உத்தரவு போட்டார்கள்.

கணக்குப் புத்தகங்கள் கை மாறின. பிறகுதான் சொன்னார்கள், ''பாங்குகளை யெல்லாம் சர்க்கார் எடுத்துக் கொண்டு விட்டது'' என்று.

மின்னல் வேக நடவடிக்கை என்று பத்திரிகைகள் வர்ணிக்கின்றன. காதும் காதும் வைத்த மாதிரி படு ரகசியமாகக் காரியம் நடந்திருக்கிறது.

இந்தச் செய்தியை உலகத்திலேயே யார் மிகுந்த சந்தோஷத்தோடு வரவேற்றிருப்பார்கள் தெரியுமா? திருவாளர் சூ—என்—லாயும், மாவ்—ஸே—துங்கும்தான்! பர்மாவிலிருந்து ஜெனரல் நீ-வின் அவர்களைப் பீகிங்குக்கு அழைத்து விசேஷ விருந்து வைப்பார்கள். ஜெனரல் நீ—வின் கொழும்பு மகாநாட்டு ஆறு தலைவர்களில் ஒருவராவார். ஆகவே அவருக்கு இரட்டை விருந்து நடக்கும்.

ஃ ஃ ஃ

இந்தச் செய்தி யாரை அதிக துக்கத்தில் ஆழ்த்து மெனப் பார்க்கலாம். இந்தியரைத்தான் - அதிலும் குறிப்பாகத் தமிழர்களைத்தான் பெரிதும் பாதிக்கும்.



பர்மாவில் ஏற்கனவே நொந்துபோய்க் கிடப்பவர்கள் இந்தியர்கள். முன்பு நிலபுலமெல்லாம் சர்க்கார் வசமாயின. இதில் இந்தியருக்குக் கோடானு கோடி நஷ்டம். பிறகு கொள்ளைக்காரர்கள் தொல்லை ஏற்பட்டது. இதிலும் இந்தியர்கள் பட்ட அவதி கொஞ்ச நஞ்சமல்ல. சமீபத்தில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் தடைப்பட்டது. இதிலும் இந்தியர்கள் பாதிக்கப்பட்டனர். இப்போது பாங்குகளும் குளோஸ்!

நஷ்டஈடு தருவதாக ரங்கூன் அறிவிக்கிறது. முன்பு நிலங்களை ஆர்ஜிதம் செய்த போது நஷ்டஈடு தந்தார்கள். அது எப்படி இருந்தது என்றால், ஒரு லட்சம் ரூபாய்க்கு ஓராயிரமாக இருந்தது. அது போலவேதான் பாங்குகளுக்கும் இப்போது கிடைக்கும். பாங்குகளை ஆரம்பிக்கும்போது எவ்வளவு மூலதனம் போட்டு ஆரம்பித்தார்களோ, அந்த ஆரம்ப மூலதனத்துக்கு நஷ்டஈடு கிடைக்கும்.

இடையில் பெரும்பாடுபட்டு வளர்த்த மூலதனம் என்ன ஆவது என்கிறீர்களா? அது சோஷலிஸ பூதத்தின் கோரப் பசிக்கு நைவேத்தியமாகிறது.

ஃ ஃ ஃ

பர்மா இப்படி இருக்க நேபாளம் ஒரு பெரிய போடாகப் போட்டிருக்கிறது.

நம்மை ஏமாற வைத்த மோஷி மகாநாடு ஒன்று நடந்ததல்லவா? நேபாள சர்க்காரின் அதிகாரி ஒருவர் அந்த மகாநாட்டுக்குப் பிரதிநிதியாக வந்திருந்தார். இவர் மூன்று தீர்மானங்களை அங்கு பிரேரித்திருக்கிறார்.

1. இந்திய ராணுவத்தில் கூர்க்கர் சேருவதைத் தடுக்க வேண்டும்.
2. நேபாள வட எல்லையில் இருக்கும் இந்தியக் காவல் நிலையங்களை வாபஸாக்க வேண்டும்.
3. கல்கத்தாவில் இருக்கும் நேபாள வர்த்தகர்களுக்கு இடையூறாக இருக்கும் வெளிநாட்டு வர்த்தகத் தடைகளை அகற்ற வேண்டும்.

இத்தீர்மானங்களை யெல்லாம் சீனக்காரர்களின் தூண்டுதலின் பேரில்தான் நேபாளப் பிரதிநிதி கொண்டு வந்தார் என்று ''தெய்னிக் நேபாள்'' என்ற பத்திரிகை கூறுகிறது.

அண்டை நாடுகளை அரவணைத்துப் போகாதது நம்முடைய தவறுதல். இன்று சூ—என்—லாய்க்கு வசை பாடி என்ன புண்ணியம்?

ஃ ஃ ஃ

''நமது ராணுவத்துக்கு ஆயுதங்கள் போதவில்லை — துணிமணிகள் போதவில்லை என்று சொல்லுவது ராணுவத்தையே அவமானப்படுத்துவதாகும். நிறைய துணிமணிகள் இருந்தன. தானே இயங்கும் ஆயுதங்களும் இருக்கத்தான் செய்தன. ஆனால் போதிய அளவு இல்லை என்பதுடன் கொஞ்சம் பழையவையும் ஆகும்'' என்று பிரதமர் அவர்கள் ராஜ்ய சபையில் வேகமாகப் பேசியிருக்கிறார்.

இதில் ''கொஞ்சம் பழையவை'' என்று கூறுவதற்குத்தான் பொருள் விளங்க வில்லை. ஏனெனில் 'கொஞ்சம்' என்பது குபேரனுக்குக் கோடியாக இருக்கும். ஏழைக்கு அது கற்பனைக்கெட்டாத கணக்காகும்.

'ஓர் அங்குலம்' என்பதில்கூட இப்படித்தான் தகராறு இருந்து வந்தது.

திரு கிருஷ்ண மேனன் 'இனி சீனன் ஓர் அங்குலம்கூட இந்திய மண்ணில் முன்னேற முடியாது' என்று கூறினார்.



அதன் பிறகு பல்லாயிரக்கணக்கான சதுர மைல்கள் முன்னேறினான் அவன்.

அப்போதும்கூட நமது ஆட்சியாளர் 'ஓர் அங்குல'க் கணக்கை விட்டாரில்லை. 'அவர் கணக்கில் ஓர் அங்குலம் என்றால் எத்தனை ஆயிரம் சதுர மைல்களோ?' என்று திரு காஸா சுப்பாராவ் அவர்கள் கேட்டு எழுதியிருந்தார்.

அது போலத்தான் ''கொஞ்சம் பழையவை'' என்பதற்கும் விளக்கம் தேவை.

ஃ ஃ ஃ

துணிமணிகள் விவகாரம் பற்றி நாம் எதுவும் அதிகம் கூறுவதற்கில்லை. திரு நேரு அவர்கள் 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' என்ற பம்பாய் வார சஞ்சிகையின் ஆசிரியரான திரு ஏ. எஸ். ராமன் அவர்களுக்குக் கொடுத்த கேள்வி-பதில் பேட்டியை மட்டும் கீழே தருகிறோம்.

திரு ராமன்: நமது ஜவான்களுக்குப் போதுமான துணிமணிகள்கூடத் தராது நாம் அவர்களை எல்லைகளுக்குப் போக விரைந்து அனுப்பினோம் என்று வெளிநாட்டுப் பத்திரிகைகளில் பெரிதாகப் போட்டிருக்கிறார்களே, அது உண்மையா? அவர்களுக்கு நாம் கம்பளி ஆடைகளும் குளிருக்கு அடக்கமான போர்வைகளும் தந்தோமா...?

நேருஜி: அவர்களைப் போர்முனைக்கு யார் விரைந்து அனுப்பியது? புனிதத் தாயகத்தின் சுதந்திரத்துக்கு ஆபத்து வந்து விட்டது என்று அவர்கள்தான் சீனாவின் சவாலை ஏற்கத் துடிதுடித்தார்கள். தங்களின் தேசபக்தி ஆர்வத்தால் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாகவும் விரைவாகவும் போர்முனைக்குப் போக முடியுமோ அவ்வளவு விரைவாகப் போக ஆர்வப்பட்டார்கள். உடனே அவர்களுக்கு நாம் ஒரே ஒரு கம்பளி தான் தர முடிந்தது. பிறகு இரண்டொரு நாட்கள் கழித்துப் பாக்கிக் கம்பளி ஆடைகளை ஹெலிகாப்டர் விமானத்தின் மூலம் அவர்களுக்கு அனுப்பினோம். இந்த சப்ளையை விமானத்திலிருந்துதான் போட வேண்டும். இப்படிப் போடுவது கஷ்டமாகி, நாம் அனுப்பியவை அவர்களுக்குக் கிடைக்காது போய்விட்டன. நாம் விமானத்திலிருந்து போட்ட துணிமணிகளும் தளவாடங்களும் மலைகளில் உள்ள காடுகளிலும், மலைகளின் இடுக்குகளிலும் விழுந்து ஜவான்களுக்குக் கிடைக்காமல் போய் விட்டன.''

இந்தப் பேட்டி 1963 ஜனவரி 6-ம் தேதி 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' இதழில் வந்திருக்கிறது.

ராஜ்ய சபையிலும் வெளியிலும் ஆயுதங்களும் கம்பளிகளும் சரியாகத் தரப்பட வில்லை என்று கேட்கிறார்கள். இதைக் கண்டுதான் நேரு கோபப்படுகிறார். இப்படிச் சொல்லுவது அவமானப்படுத்துவதாகும் என்கிறார்.

திரு ராமனுக்கு அளித்திருக்கும் விடையைப் பார்த்த பிறகு அவர் கோபப்படுவது சரிதானா, நியாயமா என்று பாருங்கள். கம்பளியும் ஆயுதங்களும் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. அவை மலையில் விழுந்தாலும் புதரில் விழுந்தாலும் ஒன்றுதான். அவை கிடைக்கவில்லை. அதனால் ஜவான்கள் துன்பப்பட்டனர், புறமுதுகிட்டனர் என்ற உண்மையை இனி மாற்றமுடியாது. கோபப்படுவதில் என்ன லாபம்?

ஜய ஜய சங்கர

கி. வா. ஜகந்நாதன்

"யார் பெரியவர்?" இதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விடையளிப்பார்கள். ஆனால் திருவள்ளுவர் அதற்குக் கூறும் விடை இதுதான்: "செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர் — செயற்கரிய செய்கலாதார்" என்று அவர் சொல்கிறார். எல்லாரும் செய்கிற காரியத்தையே செய்து, 'தேடிச் சோறு நிதம் தின்று — பல சின்னஞ் சிறு கதைகள் பேசி' மாயும் வேடிக்கை மனிதர்களே இந்த உலகில் நிறைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இடையே எப்பொழுதோ எங்கோ அந்தச் 'செயற்கரிய செய்யும் பெரியவர்கள்' தோன்றுகிறார்கள்.

அவ்வாறு தோன்றிய மகான் ஸ்ரீ சங்கராசாரியர். முப்பத்திரண்டே ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்த அவர் மூவாயிரத்து இருநூறு ஆண்டுகளானாலும் நடக்க முடியாத காரியங்களைச் செய்தார்; எத்தனை நூறு ஆண்டுகளானாலும் மங்கி மறையாத நூல்களைத் தந்து, நிலையங்களை நிறுவி, வழி முறைகளை வகுத்தார். இன்று பாரத நாட்டின் தத்துவம் என்றவுடன் உலகத்துப் பேரறிஞர்களுடைய உள்ளத்தில் முதன் முதலில் சுடர் விடுவது ஸ்ரீ சங்கரர் தூண்டிப் பெரும் சுடராக ஒளிரச் செய்த அத்வைத வேதாந்தந்தான்.

இத்தகைய மகானுடைய வரலாறு அற்புதமானது; தெரிந்து கொள்வதற்குரியது. தெரிந்து கொள்வதற்கு உரியது என்பதனால் அதை யாவரும் தெரிந்து கொள்வார்கள்என்று சொல்ல முடியாது. இனிப்பான பண்டமானாலும் அதற்கும் அழகான வடிவும் வண்ணமும் ஊட்டி விற்கும் காலம் இது. ஆகவே இந்த மகானுடைய வரலாற்றை உள்ளம் கவரும் வகையில் எழுதினால் யாவரும் அறிந்து இன்புறுவார்கள்; பயன் அடைவார்கள். பயன் மாத்திரம்தந்தால் போதாது; அதற்குமுன் இன்பத்தைத் தர வேண்டும்.



சாஸ்திரத்துக்கும் காவியத்துக்கும் இதுதான் வேற்றுமை. இரண்டும் நல்ல பயனைத் தருவனவே. ஆனாலும் சாஸ்திரத்தை விரும்பிப் படிக்கிறவர் யார்? சுவை ததும்பும் காவியத்தைப் படிக்க வேண்டும் என்ற விருப்பம் எழுவது மனித இயல்பு. ஸ்ரீ சங்கரருடைய வரலாறு முன்பே இருந்தாலும், அதைக் காவியச் சுவையோடு இனிமை தவழத் தந்தால் பலர் படித்து மகிழ்வார்கள். இது ஒரு வகையில் எளிதிலே செய்ய முடியாத காரியம்.

ஆனால் இதைச் சாதித்திருக்கிறார் அன்பர் ஸ்ரீ ரா. கணபதி அவர்கள். 'கல்கி'யில் "ஜயஜய சங்கர" என்ற தலைப்பில் தொடர்ச்சியாக ஆசாரிய சங்கரரின் வரலாற்றை அவர் எழுதி வந்தார். அதை விடாமல் படித்து ஆயிரக்கணக்கான மக்கள் இன்புற்றனர். உணர்ச்சி மிக்குப் பாராட்டினர். இப்போது அந்த நூலைப் புத்தக வடிவத்தில் கலைமகள் காரியாலயத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தச் சரித்திரம் பழைமையும் புதுமையும் இணைந்த போக்கில் அமைந்திருக்கிறது. பழைய கதையைப் புதிய உருவத்தில் தருகிறது. பழைய கருத்துக்களுக்குப் புதிய விளக்கம் இருக்கிறது. பழைய காவிய ரீதியில் அமைந்த வருணனைகளும் புதிய அறிவுலகத்துக்கு ஏற்ற எடுத்துக்காட்டுக்களும் விரவி வருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாகக் கதையை உணர்ச்சியுடன் விறுவிறுப்புடனும் சுவையுடனும் சொல்லத் தெரிகிறது இந்த ஆசிரியருக்கு. ஆசாரியருடைய வாழ்க்கை நிகழ்ச்சியை ஒரு புது முறையில் சொல்லிக் காட்டும்போது அதில் தனியான சுவை எழுகிறது.

சங்கரர் ஆதிரையன்று திரு அவதாரம் செய்கிறார். அப்போது அவருடைய தந்தை சிவபூஜை செய்து கொண்டிருக்கிறார். இதை இந்த ஆசிரியர் சொல்கிறார்: "அன்று ஆதிரை நட்சத்திரம். 'நனைக்கப்பட்டது' என்ற பொருள் கொண்ட 'ஆர்த்ரா' என்பதன் திரிபல்லவா ஆதிரை? அதற்கிசையத் தலையால் நனைந்த பிரானை உண்மையாகவே நீராலும் நனைத்து அபிஷேகம் செய்து கொண்டிருந்தார் சிவகுரு. அண்ட பிண்டம் யாவற்றையும் ஈசுவரனாகக் காணும் ஸ்ரீ ருத்ரத்தை ஜபித்தபடி திரு முழுக்காட்டிக் கொண்டிருக்கிறார்." இரண்டு ஈரத்தையும் இவ்வாறு இணைத்துக் காட்டுகிறார்.

சங்கரர் தாம் துறவியாக அநுமதிக்க வேண்டும் என்று அன்னையை வேண்டுகிறார். "அம்மா என் உள்ளத்தில் இருப்பதைச் சொல்கிறேன். இப்போது நான் உண்மையில் எனக்கு மட்டும் துறவு கேட்க வில்லை. உனக்கும் சேர்த்துக் கேட்கிறேன். நீ என்னைத் துறந்தால்தான் உனக்கும் பாசபந்தங்கள் விலகும்" என்று சங்கரர் கூறுவதாக அமைக்கிறார். இதில் சாமர்த்தியமாக இரண்டு துறவுகளை இணைக்கிறார்.

இப்பெருமானுடைய மாணாக்கரில் ஒருவராகிய ஆனந்தகிரியைப் பற்றி மற்றவர்கள் சற்றுத் தாழ்வாக எண்ணினார்களாம். அப்போது அந்தக் கிரி தோடக விருத்தத்தைப் பாடிக் கொண்டே வந்து அந்த மாணாக்கர்களை வியப்பில் ஆழ்த்தினார். சிருங்ககிரியாகிய மலைக்கருகில் இருந்த அந்த மாணாக்கர்கள் இழிவாக எண்ணியதை 'அறிவு விஷயத்தில் இந்தச் சிருங்ககிரியும் சிஷ்யகிரியும் ஒன்றுதான். அவனுக்காகக் காலம் தாழ்த்தலாமோ' என்று சமத்காரமாக எழுதுகிறார்.

காவியங்களில் வரும் இனிய வருணனையைப் போன்ற அழகிய பகுதிகள் பலவற்றை இந்தப் புத்தகத்தில் காணலாம். இதோ தக்ஷிணாமூர்த்தியின் வருணனை: "காடு மண்டிய இமாலயத்தைப் போலவே அடர்ந்த

ஜடாபாரம். ஆலவிருட்சத்திலிருந்து விழுதுகள் தொங்குவது போல் அத்திரு முடியிலிருந்து குழல்கற்றைகள் தொங்குகின்றன. ...நெற்றிக் கண் என்ற செங்கமல மொட்டை மொய்க்கும் வண்டுகளாக முன்னுச்சி மயிர்கள் அம்மூர்த்தியின் அகன்ற நெற்றியில் நிழலாடுகின்றன. முக்குணங்களையும் பரிசுத்தம் செய்பவன் இவன் என்பதை 'நெற்றியில் எழுதி ஒட்டியிருப்பது போல்' தூய திருநீற்றுப் பூச்சு துலங்குகிறது.''

மூன்று வயசில் குழந்தைச் சங்கரன் பேசுகிறான். எப்படி? ''கலைவாணியின் நூபுரங்களும் மேகலையும் கங்கணங்களும் கலகலப்பது போன்ற மணிக்குரலில் பொரிந்து தள்ளினான்.''

காசியைப் பற்றி ஆசிரியர் சொல்கிறார்: ''ஞானியர் நோக்கில் அவனைத் தவிர மற்றவை யெல்லாம் அழிந்து விடும் மகா ஸ்மசானம் அது. சாவையே சாக வைத்து அமுத நிலையைத் தரும் மயானம் அது.''

இப்படி எத்தனை எத்தனையோ இடங்கள்.

வார்த்தைகளின் வெவ்வேறு பொருள்களை வைத்துக் கொண்டு சிலேடை நயம் பொருந்த அங்கங்கே சில துணுக்குகளை உதிர்க்கிறார் ஆசிரியர்:

''சு-வர்ணம் என்பது நல்ல வண்ணமுடைய பொன், அழகிய அட்சரம் இரண்டையும் குறிப்பது. முதலில் சங்கரனின் நாவிலிருந்து சுவர்ணமான சொல் மாரி எழுந்தது: அதன் விளைவாகப் பொன்மாரியும் பொழிந்தது.''

பல இடங்களில் படிப்பவருக்கு உணர்ச்சி ததும்பும்படி நிகழ்ச்சிகளைச் சொல்கிறார். சங்கரர் துறவு பூண்ட இடம் அவற்றில் ஒன்று. தம்முடைய கற்பனைகளால் பல நிகழ்ச்சிகளைப் பொருத்திக் காட்டுகிறார். சிவகுரு ருத்திரத்தை ஜபித்துக் கொண்டே அபிஷேகம் செய்கிறார். 'நம: சங்கராயச' என்ற மந்திரம் வரும்போது சங்கரர் பிறக்கிறார்.

சங்கராசாரியர் அன்னபூரணி தந்த பாலை உண்டு ஞான வளர்ச்சி பெற்ற வரலாற்றை 'த்ரவிட சிசு' என்று சௌந்தரிய லஹரியில் வரும் தொடரோடு ஒட்டும்படி அமைக்கிறார்.

இவர் அமைக்கிற உரையாடல் அவரவர்களுடைய உள்ளப் பாங்கையும் இயல்பையும் நன்கு தெளிவாக்குகிறது. சந்நியாசத்தை விரும்பிய சங்கரருக்கும் அவர் அன்னைக்கும் நடக்கும் சம்பாஷணை, பத்மபாதருடைய பழைய கதையில் வரும் வேடனுடைய பேச்சு என்பவற்றைக் காண்க.

அத்வைதக் கொள்கையைத் தெளிவாக எழுதியுள்ள இடமும், ஜைனம் முதலிய சமயங்களைப் பற்றிய குறிப்புக்களும் கலக்கமின்றிச் சொல்வதை விளங்கும்படி சொல்லத் தெரிந்தவர் இவர் என்பதைப் புலப்படுத்துகின்றன. இதற்கு அணிந்துரை வழங்கியிருக்கும் பிரம்மஸ்ரீ அனந்தராமதீட்சிதரவர்களே, ''மண்டன மிச்ரர் சம்வாதம், ஷண்மத ஸ்தாபனம், அத்வைத சித்தாந்தம் முதலிய விஷயங்களை ஆசிரியர் ஸ்ரீகணபதி அவர்கள் வெகு லளிதமாகவும் தெளிவாகவும் கையாண்டு எழுதியிருக்கிறார்'' என்று கூறும் போது நான் தனியே எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ?

சிவானந்தலகரி, சௌந்தரிய லகரி, சுப்ரமண்ய புஜங்கம் முதலிய தோத்திர நூல்களிலுள்ள கருத்துக்களை அழகாக எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

நுட்பமான பல கருத்துக்களை அங்கங்கே சொல்லிக் கொண்டு போகிறார். பல நூல்களை ஆராய்ந்தவர்களும் எளிதில் சொல்ல முடியாதவை என்று நாம் நினைப்பவற்றை இவர் எழுத்து நடையிலே இயற்கையாகத் தவழும்படி அமைத்திருக்கிறார்.

'ஜகன்மித்யை' என்பதற்கு இவர் கூறும் தெளிவான விளக்கம் இது: ''உண்மையில் ஆசாரியர் உலகத்தை அசத்தியம் என்று கூறவில்லை. மித்யை என்றுதான் கூறுகிறார். அதாவது உலகை நாம் எப்படிக் காண்கிறோமோ அந்தத் **தோற்றம்** பொய் என்று மட்டுமே கூறுகிறார். உண்மையில் இந்த உலகும் பிரம்மமே என்கிறார்.''

திரிபுடியில் ஒன்றிய ஞானம் வேறு: இறைவன் ஞானமாக இருக்கிறான் என்னும் போது சொல்லும் ஞானம் வேறு. இதை ஓரிடத்தில் ''அறிவது என்பது அனுபவிப்பதையே குறிக்கும்'' என்று தெளிவாக்குகிறார்.


அத்வைதக் கொள்கை கடமையைச் செய்யாமல் இருக்கும் சோம்பலுக்கும் இடம் செய்கிறது என்று சிலர் சொல்வதுண்டு. ஆசிரியர், ''உலகம் தோற்றமாயினும், அந்தத் தோற்றத்தை உண்மையாகக் கொண்டு வாழும் அளவும் நியதிக்கு உட்பட்டுத் தார்மிக வாழ்வே வாழவேண்டும். ஆத்மாவைப் பெறுவதோடு சமூகத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் ஒருவன் புறக்கணிப்பதற்கில்லை என்று வற்புறுத்துகிறார்'' என்று சங்கரருடைய கருத்தைத் தெளிய வைக்கிறார்.

வாழ்வே மித்யையாக இருக்கும்போது இந்த வாழ்வில் குருவினுடைய உபதேசமும் அதனால் உண்டாகும் பயனும் மித்யையே அல்லவோ! இந்தச் சந்தேகத்தை ஆசிரியர் ''குரு உபதேசிப்பதும் மித்யை உலகில்தான். அதனால் என்ன? நாம் காணும் கனவில் ஒரு சிங்கம் வருகிறது; கர்ஜிக்கிறது. நாம் விழித்துக்கொள்கிறோம். கனவில் வந்த சிங்கம் நிஜ விழிப்பைக் கொடுத்துவிட்டது. இதே போல் மித்யா உலகில் வரும் குரு அமர நிலையில் ஜீவனை விழிப்புறச் செய்கிறார்'' என்று உதாரணங்களைக் காட்டிப் போக்குகிறார்.

படித்துக் கொண்டே போக வேண்டும் என்ற ஆர்வத்தை எழுப்பும் விறுவிறுப்பு, அங்கங்கே திருப்பித் திருப்பிப் படித்துச் சுவைத்துப் பார்க்கும் வருணனை, சாமர்த்தியமாகப் பொருத்தும் நிகழ்ச்சிகளின் அமைப்பு, நுட்பத்தையும் திட்பமாகவும் தெளிவாகவும் விளக்கும் முறை — இவை யாவும் இந்தப் புத்தகத்தை மிகவும் நயமும் பயனும் உள்ளதாகச் செய்கின்றன. நல்ல புத்தகம்; சுவையான புத்தகம்.

புத்தகத்தின் அச்சம், மணியம் தீட்டியுள்ள அட்டைப்படமும் புத்தகத்தைப் படித்துப் பார்ப்பதற்கு முன் கையில் வைத்துக்கொண்டு அழகு பார்ப்பதற்கும் ஏற்றபடி இணைந்திருக்கின்றன.

[வெளியீடு: கலைமகள் காரியாலயம் மயிலை, சென்னை-4; விலை ரூபாய் இரண்டு.]



உழவருக்கு உதவ உரச்சாலை


சென்னை மாநிலத்தின் தொழில் முன்னேற்றத்துக்குச் சின்னங்களாக விளங்கும் தொழிற்சாலைகள் வரிசையில் எண்ணூரில் இரண்டு வாரங்களுக்கு முன்பு மத்திய அமைச்சர் திரு வி. சுப்பிரமணியத்தினால் தொடங்கி வைக்கப்பட்ட இ. ஐ. டி. – பாரி கம்பெனியாரின் ரசாயன உரச்சாலை முக்கியமானது.

பாரி கம்பெனிக்கும் உரத்துக்கும் உள்ள தொடர்பு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலானது. 1906ம் ஆண்டிலேயே உர–உற்பத்தியை இக் கம்பெனியார் ஆரம்பித்து நாட்டுக்கு வழி காட்டினார்கள். அப்போது அவர்களுடைய தொழிற்சாலை சென்னைக்கு எழுபது மைல் தொலைவில் உள்ள ராணிப்பேட்டையில் மட்டும் இருந்தது. எலும்புச் சத்து, எலும்பு உரத் தூள் மட்டுமே தயாரித்தனர். பின்னர் இந்தத் தொழில் விரிவடைந்து தாடப்பள்ளி, கடலூர், திருச்சி, மேட்டுப்பாளையம், கோட்டயம், மைசூர், ஸ்ரீராம்பூர், ராஜேவி முதலிய பல இடங்களில் உரக்கலப்புச் சாலைகள் அமைத்துச் சென்னை மாநிலம் மட்டுமின்றி, தென் மண்டலத்துக்கே உர விநியோகம் செய்து வருகின்றனர்.


இந்தத் தொழிலின் முன்னேற்றத்தில் மற்றொரு படிதான் இப்போது எண்ணூரில் நிறுவப்பட்டுள்ள ரசாயன உரச் சாலை. இது பல விதத்திலும் ஓர் அசாதாரணமான சாதனை. காங்கிரஸ் அரசாங்கத்தின் சோஷலிஸ பாணி அமைப்பில் ரசாயன உர உற்பத்தி சர்க்கார் துறைத் தொழில். தனியாருக்கு இதுவரை இத்தொழிலை ஏற்று நடத்த அனுமதி அளிக்கப்படவில்லை. இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி, தனியார் துறைக்கும் இடமளிக்கச் சமீப காலத்தில்தான் சர்க்கார் ஒப்புக் கொண்டனர். இதன் விளைவாகத் தோன்றியது இந்தத் தொழிற்சாலை. ஏராளமான அந்நியச் செலாவணி தேவைப்படும் இம்மாதிரி தொழிற்சாலைக்கு அயல் செலாவணித் தட்டு உள்ள இந்தக் காலத்தில் சர்க்காரின் உதவி யின்றியே, இங்கிலாந்திலுள்ள பங்குதாரர்களிட மிருந்தும், காமன் வெல்த் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கம்பெனியிட மிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் பெருமளவு மூலதனம், தவணைக் கடன் முதலியவை பெற்று அசுர வேகத்தில், தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சுமார் நாற்பத்தைந்து ஏக்கர் நிலப் பரப்பில் கடற்கரையை யொட்டி எண்ணூர் ரயில் பாதையோரத்தில் நவீன முறையில் பிரமிக்கத் தக்க விதத்தில் எல்லா வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலையின் முதல் கட்டத்துக்கு மட்டும் ஏறக்குறைய ஐந்து கோடி ரூபாய் பிடித்திருக்கிறது. இரண்டாவது கட்டத்துக்கு மேலும் ஐந்து கோடி பிடிக்கும்; ஆக பத்து கோடி மூலதனம் கொண்ட ஒரு தொழிற்சாலை நமது சென்னைக் கடுத்து அமைக்கப்பட்டிருப்பது நமக்குப் பெருமை அளிக்கிறது.

இங்கே தயாரிக்கப்படும் உரம் ஒரு கூட்டுப் பொருள். தாவர வளர்ச்சிக்கு இன்றியமையாத நைட்ரஜன், பாஸ்பரஸ், பொடாஷ் ஆகிய மூன்று அம்சங்களில் ஏதாவது ஒன்றைத்தான் சாதாரண ரசாயன உரங்கள் அளிக்கும். அம்மோனியம் பாஸ்பேட் என்று எண்ணூரில் தயாராகும் உரத்தில் நைட்ரஜனும் பாஸ்பரஸும் கலந்துள்ளதுடன், பொட்டாஷும் சேர்க்கப் பட்டிருக்கிறது. "பாமோபாஸ்" என்ற பெயரில் எண்ணூர் ரசாயன உரம் விநியோகிக்கப்படும். ஆண்டுக்கு 50,000 டன் அம்மோனியம் பாஸ்பேட் இங்கே தயாராகும்.

உணவு உற்பத்தியில் முன்னேற்றம் காண முயன்றுவரும் நம் நாட்டின் விவசாயிகளுக்கு பாரி கம்பெனியின் 'பாமோபாஸ்' பெரிதும் பயன்படும்.



அருணகிரி விலாஸ்
சீயக்காய் பவுடர்
REGD
BS
ARUNAGIRI VILAS SOAP NUT POWDER, KARAIKUDI.



உலக மார்க் ஷண்முகம் பட்டணம் பொடி
100
வருடங்களுக்கு மேல் பிரக்யாதி பெற்றது.
SHUNMUGAM
MADRAS
ORIGINAL SHUNMUGAM SNUFF (ESTD.1839) Co.,
POST BOX No.140. MADRAS-1

சொல்லித் தெரிவதில்லை

கையில் இருந்த கடிதத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தேன். மனம் இனம் புரியாத ஒரு வித நெகிழ்ச்சியாலும், அதேசமயம் வேதனையாலும் அலைக் கழிந்து கொண்டிருந்தது. திருநெல்வேலியை அடுத்த ஒரு கிராமத்திலிருந்து என் நண்பன் நாராயணன் எனக்குக் கடிதம் எழுதியிருந்தான். எத்தனையோ நாட்களுக்குப் பிறகு நாராயணனிடமிருந்து வந்த கடிதம் அது. ''எப்படியாவது உன் மனைவியை அழைத்துக் கொண்டு கிராமத்துப் பக்கம் வந்து நாலு நாட்களாவது இருந்துவிட்டுப் போக வேண்டும்'' என்று எழுதியிருந்தான். முற்றத்தில் சறுக்கி விழுந்து அவனுக்குக் காலில் அடிபட்டிருக்கிறதாம். டாக்டர் எலும்பு முறிந்திருக்க வேண்டும் என்று அபிப்பிராயப் படுகிறாராம். இந்தச் சமயம் என்னைப் பார்த்தால் அவனுக்கு நிம்மதியாக இருக்கும் என்று எழுதியிருந்தான். நானும் நாராயணனும் முதல் வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் ஒன்றாகப் படித்தவர்கள். அவனுக்குப் பண



வசதி இல்லாத படியால் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு ஏதோ ஒரு கம்பெனியில் குமாஸ்தாவாக வேலையில் ஈடுபட்டான். இப்படியாக இணை பிரியாமல் இருந்த நண்பர்கள் இருவரும் பிரிய நேரிட்டது. இருவர் வாழ்க்கைப் பாதையும் பிரிந்து விட்டது. நான் சென்னையில் கல்லூரியில் படிக்கும் போதே சினிமா, நாடகம், நாட்டியம் என்று என் கவனத்தைப் பல விஷயங்களில் செலுத்திப் பரீட்சையிலும் கோட்டடித்தேன். பிறகு படிப்பை விட்டு விட்டு ''கார்'' வியாபாரத்தில் இறங்கினேன். நான் வியாபாரத்தில் முன்னேறியதை விடக் காதல் துறையில் முன்னேறி நடிகை இந்திரா தேவியைக் காதல் மணம் புரிந்து கொள்ளும் அளவுக்கு வந்து விட்டேன். வீட்டில் என் கலியாணத்தில் என்னைத் தவிர வேறு யாருக்கும் விருப்பமில்லை. நான் உறுதியாக இருந்து இந்திராவையே மணந்து

கொண்டேன். அழகர்மலைக்கோயிலில் இந்திராவின் கழுத்தில் மாலையிட்டபோதும், மாலையில் நடந்த தேநீர் விருந்துக்குப் பட உலகப் பிரமுகர்கள் பலர் வந்து எங்களுக்கு வாழ்த்துக் கூறியபோதும், என்னை ஆசையுடன் வளர்த்து ஆளாக்கிய தாயும், தந்தையும், என் அன்பு சகோதரர்களும் அங்கு இல்லையே என்று நினைக்கத்தான் தோன்றியது. இருந்தாலும் என் பக்கத்தில் அழகுத் தேவதையாக அடிக்கொரு தரம் முத்துப் பல் வரிசை தெரிய என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த இந்திராவின் அழகு முகத்தைப் பார்த்ததும் என் கவலையெல்லாம் மறைந்து விட்டது.



அன்று சாதாரண நடிகையாக இருந்த இந்திரா தேவி இன்று முதல்தர நடிகையாகி விட்டாள். கார், பங்களா என்று சகல வசதிகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் வாழ்க்கையில் எனக்கு எந்தக் குறையும் இல்லை என்று நினைத்து நானே என்னை ஏமாற்றிக் கொண்டிருக்கிறேன் என்றுதான் தோன்றியது. சில சமயம் யோசனை செய்து பார்க்கும்பொழுது என் தாயார் சொன்னதுதான் சரி என்று நினைக்கக்கூடத் தோன்றுகிறது.

''போயும் போயும் சினிமாக்காரியும், நடனக்காரியும் குடும்பத்துக்கு ஒத்து வருமா? வேண்டாமடா இந்தக் கலியாணம்'' என்றாள் என் தாயார். அதெல்லாம் எனக்கு அன்று புரியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். யோசித்துக் கொண்டே இருந்தேன். 'உன் மனைவியையும் அழைத்துக் கொண்டு வா' என்று விஷயம் தெரியாத நண்பன் எழுதியிருக்கிறான். அப்படி நான் கூப்பிட்டவுடன் என்னுடன் வரக்கூடியவளா என் மனைவி? அவளுக்குச் சதா படப் பிடிப்புக்கும் அதற்கு வேண்டிய ஒத்திகைக்கும்தான் பொழுது சரியாக இருக்கும். என்னிடம் பேசக்கூட அவளுக்கு ஓய்வு இருக்காது. பணத்திலும் புகழிலும் முழுகியிருப்பவளை என் நண்பன் கிராமத்துக்கு வா என்று நான் எப்படிக் கூப்பிட முடியும்? நண்பன் நாராயணனைப் பற்றி நினைத்தேன். தன் சொந்த அத்தை பெண்ணையே கல்யாணம் செய்து கொண்டிருக்கிறானாம். நாலு குழந்தைகள் இருக்கின்றனவாம்.

''சாப்பாடு தயாராக இருக்கிறது'' என்று நினைவுபடுத்தினான் சமையற்காரன்.

''எனக்குப் பசியில்லை. அம்மாவும் வரட்டும்; பிறகு சாப்பிடுகிறேன்'' என்றேன்.

''அம்மாவுக்கு மறுபடியும் படப் பிடிப்பு இருக்கிறதாம். நடிகர் ராகவன் இன்று இரவே பங்களூருக்குப் போகிறாராம். ஆகையினால் இன்று இரவுக்குள்ளேயே அந்த செட்டை முடித்துவிட வேண்டுமாம். 'சாப்பாட்டை ஸ்டுடியோவுக்கே அனுப்பிவிடு' என்று போன் செய்தார்கள். சின்னக் காரில் சாப்பாட்டை அனுப்பி விட்டேன்'' என்றான்.

மறு பேச்சுப் பேசாமல் சாப்பாட்டு மேஜை அருகே போய் உட்கார்ந்தேன். வெள்ளிக் கிளாஸில் ஐஸ்வாட்டரை வைத்துவிட்டுத் தட்டில் பல விதமான கறி வகைகளுடன் சாப்பாட்டைப் பரிமாறினான் சமையற்காரன். என் நண்பன் எழுதியிருந்தான் 'என் மனைவி அதிகமாகப் படித்தவள் அல்ல. நன்றாகச் சமைக்கிறாள். அவள் வற்றல் குழம்பு வைத்தால் மிக அருமையாக இருக்கிறது. நீ இங்கு வரும்போது என் மனைவியின் சமையலைச் சாப்பிட்டு இன்னும் ஒரு சுற்று பருத்து விடு

ஜி. கே. பொன்னம்மாள்



ஞாபகமறதி !

பேராசிரியர் பிரகாசபாணி பிரபல விஞ்ஞானி. அவர் மேதை காரணமாக உலகமே அவரைப் பூசித்து வந்தது. ஆனால் அவர் தமது ஆராய்ச்சிச்சாலைக்குள் புகுந்துவிட்டால், தம்மைப் புகழும் இந்த உலகத்தின் நினைவையே மறந்து போய் விடுவார்.

அன்றும் அப்படித்தான். அவர் மனைவி அன்று வந்த பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தாள். அதில் பிரசுரமாகியிருந்த ஒரு செய்தி அவளுக்கு வியப்பை அளித்தது. உடனே அதைத் தூக்கிக் கொண்டு தன் கணவர் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த அறைக்கு ஓடினாள். "பார்த்தீர்களா, இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகி யிருப்பதை?" என்று வியப்புடன் கேட்டாள்.

"என்ன பிரசுரமா யிருக்கிறது?" என்று தலையை நிமிர்த்திக் கேட்டார் பேராசிரியர்.

"தாங்கள் இறந்து விட்டதாகச் செய்தி பிரசுரமாகி யிருக்கிறது!"

"த்ஸொ, த்ஸொ! மிகத் துக்ககரமான செய்திதான்!" என்ற பேராசிரியர், "எத்தனை மணிக்குச் சவ ஊர்வலம் புறப்படப் போகிறதாகப் போட்டிருக்கிறதோ?" என்று கேட்டார்.

"மாலை நாலு மணிக்காம்!"

"அடாடா! நாலு மணிக்கா? இன்று எனக்கு ஒழியாதே!" என்றவர் தமது ஆராய்ச்சியைப் பற்றி ஏதோ குறிப்பெடுத்த வண்ணம், "அப்படியானால் ஒன்று செய்! நீயே என் சார்பில் அவர் மனைவிக்கு அநுதாபச் செய்தியை அனுப்பி விடு!" என்றார்.

வாய்!' என்று அவன் கடிதம் என் ஜேபியிலிருந்து என் இதயத்தை அழுத்தியது. ஆசை மனைவி சமைத்து அன்புடன் வளையல் அணிந்த கைகளால் பரிமாறுவதை நினைத்துப் பார்த்தேன். அது என் நண்பனுக்குக் கிடைக்கும் பாக்கியம். எனக்கோ...?

"மைசூர் ரசம் போடவா?" ஒரு முரட்டு ஆடவனின் கை கரண்டியுடன் என் இலையை நெருங்கியது. எனக்கு எரிச்சலாக வந்தது. "ஒன்றும் வேண்டாம். ஏதாவது வேண்டியிருந்தால் கேட்கிறேன்" என்று எரிந்து விழுந்தேன். மறு கணம் சமையற்காரன் சமையற்கட்டுக்குள் போய் விட்டான்.

ஒரே மின் விசிறி சுழன்று கொண்டிருந்தது. குளிர்ந்த தண்ணீரை மடமடவென்று குடித்து மனத் துயரத்தைத் தணித்துக் கொண்டு எழுந்து விட்டேன். எல்லாம் இருந்தாலும் எதுவும் இல்லாத ஒரு நிலை. கண்டிப்பாக இந்த நிலையிலிருந்து விடுபட்டே ஆக வேண்டும். பேசாமல் நாராயணன் கிராமத்துக்குப் போய் ஒரு வாரம் தங்க வேண்டியது தான் என்று நினைத்துக் கொண்டேன். இரவு ஏழு மணிக்கு ரயில். இந்திரா எப்பொழுது வீடு திரும்புகிறாளோ? நான் கிளம்பும்வரையில் வரவில்லை என்றால் போன் பண்ணிவிட்டுக் கிளம்பிவிட வேண்டியதுதான் என்ற முடிவுடன் பிரயாணத்துக்குத் தயாரானேன். என் உடைகளைத் தோல் பெட்டியில் திணித்துக் கொண்டிருக்கும்போது போர்டிகோவில் கார் வந்து நிற்பது தெரிந்தது. இந்திராதான் வந்துவிட்டாள். அவளுடன் இரண்டு பேர் பட விஷயமாகப் பேச வந்திருக்கிறார்கள். எல்லோரும் ஹாலில் சோபாவில் அமர, எல்லோருக்கும் சமையற்காரன் சர்பத்து வழங்கினான். ஏதோ சளசளவென்ற பேச்சும் சிரிப்பும் கேட்டன. படார் என்று பெட்டியைச் சாத்தி விட்டுக் கண்ணாடி முன் நின்று தலை வாரிக் கொண்டிருந்தேன். கதவுக் கர்ட்டனைத் தள்ளிக்கொண்டு இந்திராவே என் அறைக்குள் வந்தாள்.

"அப்பாடா! ஒரு மட்டில் அவர்களை அனுப்பிவைத்தேன். இன்று முழுதும் எனக்கு அழவேண்டிய சீன். கிளிசரின் போட்டுப் போட்டுக் கண்ணெல்லாம் வலிக்கிறது. அது சரி, நீங்கள் எங்கே கிளம்புகிறீர்கள்?" என்றாள் அதிசயமாக.

கலியாணமாகி இத்தனை நாட்களில் அவளுடன் அல்லாது நான் தனிமையில் இதுவரை எந்த ஊருக்கும் போனது கிடையாது. அது தான் அவள் வியப்புக்குக் காரணம். "நான் திருநெல்வேலி வரையில் போய்விட்டு வருகிறேன். வர ஒரு வாரமாகும்" என்றேன்.

"ஒரு வாரமா?" என்றபடி என்னை உற்றுப் பார்த்த அவள் கண்கள் கிளிசரின் போட்டுச் சிவந்து காணப்பட்டது. படப் பிடிப்பு முடிந்து 'மேக் அப்பை'க் கலைக்காமல் இருந்ததால் அந்த முகம் மிகவும் அழகாக இருந்தது. பாவம், காலையிலிருந்து படப் பிடிப்பில் அவதிப்பட்டிருக்கிறாள் என்பதை நினைக்க எனக்கே கஷ்டமாக இருந்தது. "வெளியூரில் ஒரு வாரம் என்ன வேலை என்று நான் தெரிந்துகொள்ளலாமா?" என்று சிரித்தாள். அந்தச் சிரிப்பில் என்கோபமெல்லாம் பறந்து, "ஒன்றுமில்லை இந்து, என் நண்பனைப் பார்க்கப்போகிறேன்" என்றேன். "அடுத்த வாரம் என் பிறந்த நாள். அதற்கு முன் வந்துவிடுங்கள்" என்றாள். நான் எதுவுமே பேசவில்லை. அந்த அழகு முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். "கண் வலிக்கிறது என்றாயே, இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று அவள் தாடையைப் பற்றினேன். "ஐயோ! மேக் அப்பைக் கலைத்துவிடாதீர்கள். இன்னும் இரவு இரண்டு காட்சிகள் எடுக்க வேண்டியிருக்கிறது" என்றபடியே துள்ளி விலகிக் கொண்டாள்.

மேஜை மேலிருந்த போன் அலறியது. பேசி முடித்துவிட்டு, "சரி போய் வாருங்கள். மானேஜரை விட்டு டிக்கெட் ரிசர்வு பண்ணி விட்டீர்களா? இல்லையென்றால் பெரிய காரை எடுத்துக் கொண்டு நேரே உங்கள் நண்பர் ஊருக்கே போய் வந்து விடுங்கள். எனக்குச் சின்னக் கார் போதும். நான் ஸ்டுடியோவுக்குப் போகிறேன். செட்டு ரெடியாகிவிட்டதாம். பையா! சாப்பாடு கொஞ்சம் தாராளமாகவே எடுத்து வை. டைரக்டர் வேறு என்னுடன் சாப்பிட வந்து விடுவார்" என்றபடியே மாடிப் படிகளில் இறங்கினாள். நான் நின்ற இடத்திலேயே நின்றிருந்தேன். எனக்கு எதுவுமே பேசப் பிடிக்கவில்லை. 'டைரக்டருக்குச் சாப்பாடு எடுத்து வைக்கச் சொல்லத் தெரிகிறது. தாலி கட்டியவனைச் சாப்பிட்டீர்களா என்று கேட்கத் தோன்றவில்லை' என்ற

நினைப்பு எழுந்ததும் எனக்குக் கோபம் தான் வந்தது. பேசாமல் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே நடந்தேன்.

''கார் தயாராக இருக்கிறது. போன் பண்ணிக் கேட்டதில் முதல் வகுப்பு டிக்கட்டு இல்லையாம். காரிலேயே போகச் சொன்னார்கள், அம்மா!'' என்றார் மானேஜர்.

''எனக்குக் கார் தேவையில்லை. என்னை ஸ்டேஷனில் விட்டு விட்டு வண்டியை ஸ்டுடியோவுக்குக் கொண்டு போகலாம்'' என்றேன். ஸ்டேஷனில் இறங்கிக் கொண்டு காரைத் திருப்பி அனுப்பி விட்டேன். மூன்றும் வகுப்பு டிக்கெட்டு வாங்கிக் கொண்டு முண்டி அடித்து இடம் பிடித்து உட்கார்ந்து கொண்டேன். மூன்றும் வகுப்புப் பிரயாணத்தில் நெரிசலும், கூச்சலும் என்னைத் திக்கு முக்காட வைத்தன.

அந்தச் சின்ன ஸ்டேஷனில் காலை பதினொரு மணிக்கு இறங்கி, ஸ்டேஷன் மாஸ்டரிடம் நாராயணன் வீட்டை விசாரித்துக்கொண்டு மாட்டு வண்டியில் உட்கார்ந்து பிரயாணமானேன். வழியெல்லாம் ஒரே குண்டும் குழியுமாக இருந்தது. வண்டிச் சக்கரம் ஒவ்வொரு பள்ளத்தில் இறங்கும்போதும் என் தலை வண்டிச் சட்டத்தில் மோதியது.

நாராயணனின் குழந்தைகளுக்காக பிஸ்கட்டும், மிட்டாயும், பொம்மைகளும் வாங்கி வந்திருந்தேன். தாழ்ந்த கூரைவேய்ந்திருந்த ஒரு வீட்டுக்கு முன்னால் வண்டி நின்றது. வண்டிக்காரனிடம் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு வாசலில் காலெடுத்து வைத்தேன். முன் அறையில் யாரையும் காணவில்லை. ''நாராயணன்!'' என்று குரல் கொடுத்தேன். ''அடேடே! கோபால்! வந்துவிட்டாயா? வருகிறேன் என்று ஒரு கார்டு போடக் கூடாதா? என் பிள்ளையை ஸ்டேஷனுக்கு அனுப்பியிருப்பேனே. வா உள்ளே வா'' என்றபடி வரவேற்றான். இருவரும் அவன் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டோம். நாராயணன் இளைத்துத் துரும்பாக இருப்பான் என்று நினைத்ததற்கு மாறாகப் பருத்து ஒரு யானைக் குட்டியைப் போல் இருந்தான். காலைப் பற்றி விசாரித்தேன். அடி பலமாக இல்லையென்றும் இன்னும் ஒரு வாரத்தில் குணமாகி விடும் என்றும் சொன்னான்.


அந்தச் சமயம் வாசல் கதவைத் திறந்து கொண்டு நாராயணன் மனைவி குளித்துவிட்டு ஈர உடையுடன் குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தாள். ''இதோ பார் மைதிலி! என் நண்பன் வந்திருக்கிறான். அவனுக்குப் பட்டணத்தில் காலை நாலு மணிக்கே காப்பி சாப்பிட்டுப் பழக்கம். சீக்கிரம் காப்பி கொடு'' என்றான். மைதிலியின் முகத்தில் புன்னகை அரும்பியது. நாகரிகம் இல்லாத பட்டிக்காட்டுப் பெண்ணாக இருந்தாலும், மஞ்சள் பூசிய அவள் முகமும் கட்டான உடலும் அழகாகத்தான் இருந்தன. நான் பெட்டியைத் திறந்து குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொம்மைகளையும் மிட்டாய்களையும் கொடுத்தேன். குழந்தைகள் மாமா என்று என்னிடம் ஒட்டிக்கொண்டன.

''காப்பி சாப்பிட்டுவிட்டு விளையாடடா!'' நாராயணன் குரல் கொடுத்தான். பித்தளை டம்ளரில் சூடான காப்பியைக் கொண்டு வந்தாள் மைதிலி. நான் சுவைத்துச் சாப்பிட்டுவிட்டு டம்ளரைக் கீழே வைத்தேன்.

''டேய், சீனு! மாமாவை ஆற்றுக்கு அழைத்துக்கொண்டு போடா — கோபால்! இங்கு குளிக்கக் குழாய் கிடையாது'' என்றான்.

''பலே பலே, எங்கே வெந்நீரைப் போட்டுக் குளி என்பாயோ என்று நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஓடும் தண்ணீரில் அமிழ்ந்து குளிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே?'' என்று தேங்காய்ப் பூ டவல், சந்தனச் சோப்பு முதலியவற்றை எடுத்துக் கொண்டு ஆற்றுக்கு விரைந்தேன்.

பளிங்கு போல் சலசலவென்ற சத்தத்துடன் ஓடும் ஆற்று நீரில் எத்தனை நேரம் திளைத்துக் கொண்டிருந்தேனோ தெரியாது. இரவெல்லாம் தூக்கம் விழித்த கண் எரிச்சலுக்கு அமிழ்ந்து குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம் செய்தது மிக இதமாக இருந்தது. குளித்துவிட்டு நாராயணன் சாப்பிடத் தயாராக எனக்காகக் காத்துக் கொண்டிருந்தான். சூடாகச் சாதம், கறிகள் இலையில் விழுந்தன. வற்றல் குழம்பும், கீரை மசியலும், கட்ட அப்பளமும்தான். அந்தச் சாப்பாடு எனக்குத் தேவாமிர்தமாக இருந்தது. நண்பனின் மனைவி பரிந்து பரிந்து உபசரித்ததும் எனக்கு மறக்க முடியாத நிகழ்ச்சியாக இருந்தது. தரையில் கோரைப் பாயில் படுத்ததுதான் தெரியும். மறுபடியும் கண் விழிக்கும்போது மணி நாலு. நண்பன் யாருடனோ உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தான். ''அதெல்லாம் இந்த மாதம் முடிந்துதான் பணம் தர முடியும். இத்தனை நாட்கள் பழகிவிட்டுப் பணம் தந்தால்தான் பால் ஊற்றுவேன் என்று ஒரு விருந்தாளி வேறு வந்திருக்கும் போது வந்து சொல்லுகிறாயே, இது உனக்கு நன்றாக இருக்கிறதா?'' என்று கடிந்து கொண்டிருந்தான்.



சென்னை, பெரம்பூர், கோச் பாக்டரி ஒர்க்ஸ் மானேஜர் ஸ்ரீ ஆர். விஸ்வநாதன் அவர்களின் குமாரி சௌ. நளினிக்கும், சிரஞ்சீவி (கேப்டன்) E. S. கிருஷ்ணமூர்த்தி B. E. (Hons) E. M. E. அவர்களுக்கும் சமீபத்தில் திருமலையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

''நான் என்ன பண்ணறதுங்க? வைக்கோல் வாங்கக் காசில்லே. ஒரு பத்து ரூபாயாவது கொடுங்கள்'' என்று பால்காரன் வேண்டினான். எனக்கு விஷயம் புரிந்து விட்டது. நிலைமையைச் சமாளிக்க நானாவது பத்து ரூபாய் கொடுத்து உதவலாம் என்று பர்சை எடுத்தேன். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. நான் பர்சில் வைத்திருந்த இருநூறு ரூபாய் மாயமாய் மறைந்திருந்தது. சில்லறை நாலு ரூபாய்தான் இருந்தது. ரயிலில் யாரோ பர்ஸிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு பர்ஸை அப்படியே திரும்ப ஜேபியில் போட்டிருக்கிறான். நான் இப்பொழுதுதான் பர்சைக் கவனித்தேன். வண்டிக்காரனுக்குக் கூலி கொடுக்கும்போதுகூட நான் சரியாகக் கவனிக்கவில்லை. திரும்ப ஊருக்குப் போகக் கூடப் பத்து ரூபாய் வேண்டியிருக்குமே?

நான் வந்து விளையாட்டுப் போல் நான்கு நாட்கள் ஆகிவிட்டன. சாப்பாடு, தூக்கம் என்று நாளை ஓட்டுவது மிகச் சிரமமாக இருந்தது. நாராயணனுக்கு எடுத்த இடமெல்லாம் கடன். குடும்பம் மிகக் கஷ்ட தசையில் இருக்கிறது என்பதை நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன். பணம் கொடுத்து உதவலாம் என்றால் என் பர்சும் காலி. அரிசி வாங்குவதிலிருந்து, சோப்பு வாங்குவது வரையிலும் நாராயணன் பணமில்லாமல் வாயால் பந்தல் போட்டு, கெஞ்சிக் கூத்தாடி வாங்குவதைப் பார்க்க எனக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. பணத்துக்குச் சென்னையில் என் மனைவிக்கு எழுதவும் எனக்குக் கூச்சமாக இருந்தது. இந்த நாட்களில் இந்த ஊரும் எனக்கு அலுத்துவிட்டது. வர வர அந்த வீட்டுக்கு நான் வேண்டாத விருந்தாளியாகி விட்டேனோ என்றுகூடச் சந்தேகம் எழுந்தது. அன்று காலையில்தான் வெட்கத்தை விட்டு நாராயணன் என்னிடம் நூறு ரூபாய் வேண்டுமென்று கேட்டிருந்தான். நானும் பணம் பறிபோன விஷயத்தை அவனுக்குச் சொல்லியிருந்தேன்.

நான் குளித்துவிட்டு வாசல் திண்ணையில் காலை வைக்கும்போது அறைக்குள்ளிருந்து பேச்சுக் குரல் கேட்டது. பேச்சில் என் பெயரும் அடிபடவே, நின்று கவனித்தேன். ''உங்கள் பேச்சைக் கேட்டு நான் நன்றாகத்தான் ஏமாந்துவிட்டேன். என் நண்பன் பணக்காரன், பெரிய நடிகையின் கணவன் என்றெல்லாம் சொன்னீர்கள். இவர் என்னடா என்றால் வந்து நான்கு நாட்கள் ஆயிற்றே, செலவுக்கு வைத்துக்கொள்ளுங்கள் என்று நயாபைசா கூடக் கொடுக்கவில்லை. இருக்கிற கஷ்டத்தில் அவருக்கு விதம் விதமாகச் சமைத்துப் போட வேண்டியிருக்கிறது. என்றால் இனிமேல் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது'' என்றாள் மைதிலி.

''மெதுவாகப் பேசு மைதிலி. கோபால் வரும் வேளை. நான்கூடக் கூச்சத்தை விட்டுப் பணம் கேட்டேன். பர்ஸிலிருந்த பணம் திருட்டுப் போய்விட்டது என்கிறான். வந்த நண்பனை எப்படிப் போகச் சொல்வது?'' — இது நாராயணனின் பதில்.

''அவர் பணம் தொலைந்து விட்டது என்பதை நீங்களும் நம்புகிறீர்களா? சுத்தப் பொய். அந்த நடிகை இவரை வீட்டை விட்டே துரத்தியிருப்பாள். இந்திரா தேவிக்கு லட்சக் கணக்கில் பணம் இருக்கிறது. அவள் கணவனை இப்படி ரயிலில் அனுப்பியிருக்க மாட்டாள். அவளுக்கு மூன்று கார்கள் இருக்கின்றனவாம். இவர் அலையக் குலைய வந்ததைப் பார்த்தாலே தெரியவில்லையா?'' என்று அழுத்தமாகச் சொன்னாள் மைதிலி. அவள் பேச்சு என் உள்ளத்தைக் கலங்க வைத்தது.

அதற்குப் பின் அந்த வீட்டில் இருக்கும் ஒவ்வொரு விநாடியும் எனக்கு முள் குத்துவது போல் இருந்தது. இரவு தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தேன். நாளைக்கு முதல் வண்டிக்கு இருக்கிற பணத்துக்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு எப்படியாவது இந்த ஊரை விட்டுக் கிளம்பிவிடவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். உயிர் நண்பனுக்கும் என்னிடம் பணம் இல்லை என்று தெரிந்ததும் அலட்சியம் வந்துவிட்டது. அவனைச் சொல்லிக் குற்றம் இல்லை. இந்த உலகமே பணத்தைத்தானே நம்பியிருக்கிறது? பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு அன்புதான் பெரிது என்று அளக்கலாம். ஆனால் வயிறு வாட, கையில் பணமில்லாமல் வாடும்போது பணம்தான் பெரிதாகத் தோன்றும். நான் பணக் கஷ்டத்தை அறியாதவன். ஆயிரம் ஆயிரமாகக் கையாளுபவன். இங்கு வந்து ஐந்து ரூபாய்க்குத் தவிக்கிறேன். என் மனைவி ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதித்து எனக்குப் பணக் கஷ்டம் என்று தெரியாமல் வாழ வைத்தவள்.

மனைவியைப் பற்றி நினைத்தவுடன் எனக்கு என்னிடமே கோபமாக வந்தது. இந்தப் பணத்தைச் சம்பாதிக்க இரவும் பகலும் காமிரா முன் நின்று வசனம் பேசி, நடித்து, அவள் எத்தனை கஷ்டப்படுகிறாள்? ஒரு நாள் இரவு தூக்கம் விழித்ததற்கே கண் எரிச்சலி



மறக்க முடியாத திரைப் படங்கள்

அடுத்த இதழில் தக்ஷயக்ஞம்





1. சாப்ரு மாளிகையில் அமெரிக்க ஸ்தானிகர் ஜான் கென்னத் கால்பிரெய்த் — உலகப் பிரச்னையை ஆராயும் இந்தியக் கழகத்தின் சார்பில் உரையாற்றுவதற்காக டாக்டர் ஏ. அப்பாத்துரை அவர்களோடு வருகிறார்.

2. திருச்சியில் சீதாலக்ஷ்மி ராமசாமி கல்லூரி ஹாஸ்டல் கட்டடத்துக்கு திரு ஆர். வெங்கடராமன் அஸ்திவாரக்கல் நாட்டினார்.

ளால் அவஸ்தைப்பட்டேன் நான். அவள் படப் பிடிப்புக்காக எத்தனை நாட்கள் இரவு தூங்காமல் இருந்திருக்கிறாள்? 'இன்று நான் ஒரு புலியுடன் நடிக்க வேண்டும், இந்தப் படத்தில் ஒரு யானை வருகிறது' என்று அவள் சொல்லும்போது நான் அவற்றைப் பொறுமையுடன் செவிமடுத்துக் கேட்டதுகூட இல்லை. அவள் என்னை மதிக்கவில்லை, கணவன் என்று கவனிக்கவில்லை என்றுதான் குறைப்பட்டுக்கொள்வேன். அவள் அத்தனை கஷ்டப்பட்டும் எனக்குத்தான் நன்றி யில்லை. அவள் பணத்தை அவளுக்கு வேண்டி மட்டுமா சம்பாதிக்கிறாள்? என் சுக வாழ்வுக்காகவும்தான். அவள் விஷயத்தில் நான் நடந்து கொண்டது தவறு என்பது வெட்ட வெளிச்சமாக எனக்குத் தெரிந்து விட்டது.

எப்பொழுது கண்ணயர்ந்தேனோ தெரியாது. ''எழுந்திருடா கோபால்! உன்னைத் தேடிப் பட்டணத்திலிருந்து ஒருவர் காருடன் வந்திருக்கிறார்'' என்ற நாராயணனின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தேன்.

''நமஸ்காரம்'' என்று கூப்பிய கைகளுடன் என் மானேஜர் என் முன் நின்றிருந்தார். நான் ஒன்றுமே புரியாமல் விழித்தேன். ''நாளை அம்மாவின் பிறந்த நாள். நீங்கள் இல்லாமல் நடக்கக்கூடாது என்று வெகு அவசரமாக என்னை அனுப்பினார்கள். நீங்கள் இங்கு வந்த பிறகு கடிதமும் எழுதவில்லை. அம்மாவுக்கு ரொம்பக் கவலையாகி விட்டது. விலாசமும் தெரியவில்லை. பிறகு தேடிப் பார்த்ததில் நீங்கள் கழற்றிப் போட்டு விட்டு வந்த சட்டை ஜேபியிலிருந்து உங்கள் நண்பர் அனுப்பிய கடிதம் கிடைத்தது. அதிலிருந்து விலாசத்தைத் தெரிந்துகொண்டு வந்தேன். சரி, நாழிகை ஆகிறது. பெட்டியை எடுத்துக் காரில் வைக்கவா?'' என்று அவசரப்படுத்தினார் மானேஜர்.

என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை. என் மனைவியை நினைக்க நினைக்க எனக்குப் பெருமை பிடிபடவில்லை. தெருவை அடைத்துக் கொண்டு கம்பீரமாக நின்ற அந்தக் காரைப் பார்த்து மைதிலியும், குழந்தைகளும் பிரமித்து நின்று விட்டார்கள். மானேஜரிடம் ரகசியமாக ''பணம் எவ்வளவு வைத்திருக்கிறீர்?'' என்றேன். ''அம்மா ஐந்நூறு ரூபாய் தந்தனுப்பி யிருக்கிறார்கள்'' என்றார். அவரிடமிருந்து முந்நூறு ரூபாயை வாங்கி நாராயணனிடம் கொடுத்தேன். அவனும் நன்றிப் பெருக்குடன் ஏதோ பேச வாயைத் திறந்தான். நான் அதை இடைமறித்து, ''சரி, நான் கிளம்புகிறேன்'' என்று வாசலை நோக்கி நடந்தேன்.


''இத்தனை சீக்கிரம் கிளம்பிவிட்டாயே கோபால்?'' என்ற நண்பனின் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே, ''நான் வருகிறேன்'' என்று கரம் குவித்தேன். நாராயணனும், மைதிலியும் வைத்த கண் வாங்காமல் காரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். புழுதியை வாரியடித்துக் கொண்டு கார் கிளம்பியது. என் உள்ளத்தில் இன்பம் நிறைந்திருந்தது.

பங்களா வாசலில் இந்திரா எனக்காகக் காத்திருந்தாள். ''நண்பனைப் பார்த்ததில் என்னையே மறந்து விட்டீர்களே'' என்றாள் கன்னம் குழியச் சிரித்துக் கொண்டே. அறைக்குள் நுழைந்ததும், ''பிறந்த நாளை நீங்கள் இல்லாமல் கொண்டாட எனக்குப் பிடிக்கவில்லை. போன இடத்தில் வண்டி அனுப்பி வரச் சொன்னேன் என்று உங்களுக்கு என் மேல் கோபமா?'' என்று குழைந்தாள்.


''கோபமா? உன்னிடமா? கிடையவே கிடையாது. நீ வண்டி அனுப்பவில்லை என்றாலும் நான் எப்படியும் வந்திருப்பேன்'' என்று அவள் முகத்தை நிமிர்த்தினேன். அவள் கன்னம் குழியச் சிரித்தாள்.


''இப்பொழுது மேக்கப் இல்லை. உனக்கு நான் பிறந்த நாள் பரிசு தர வேண்டாமா?'' என்றேன்.

அவள் முகம் சிவக்கச் சிரித்தாள். அப்பொழுது அவள் அழகிய கண்களில் என் உருவம்தான் தெரிந்தது.



ரெக்ஸ்
அருந்தி...
குளுமையுடன்
இருங்கள்
ORANGE SQUASH
இலவசம்! ரெக்ஸ் ஸ்குவாஷ் சிவப்பு மற்றும் பொன்னிற மூடிகள் ஆறு தருவோருக்கு அழகியதொரு ரெக்ஸ் ப்ளோ டிஸ்பென்ஸர் தரப்படும்.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.


நளினியின் திருமண ஏற்பாடுகள் துரிதமாக நடக்கலாயின.
நம் தகுதிக்குமேல் திட்டம் போட்டிருக்கிறீர்களே, சமாளிக்க முடியுமா நம்மால்?
அந்தப் பயல் துரையால் அன்று எத்தனை அகம்பாவமாகக் கேட்டான், நினைவிருக்கிறதா? நம்மாலும் முடியும் என்பதை அவன் முகத்திலடித்தது போல் காட்ட வேண்டும் கமலா.
சந்திரனே சாட்சி
12
கதை: கௌசிகன்
சித்திரம்: வினு-
அதற்காக, நம் கையைச் சுட்டுக் கொள்ள முடியுமா?
நான் எங்கும் கடன் வாங்கவில்லை கமலா. என் நண்பர் ஒருவர் நளினியின் கல்யாணத்துக்காக ஐயாயிரம் ரூபாய் அன்பளிப்பாக அனுப்பினார். அதைக் கொண்டுதான் இத்தனையும்...
துரைபுரத்தின் பெயர் கூறும் கல்யாணத்தை வெகு தடபுடலாக நடத்தினார் ராஜூ. தம்பதிகள் தேன் நிலவுக்குக் கிளம்பினர்.
மெதுவாகப் போனால் என்னவாம்..? எனக்குப் பயமாக இருக்கிறது!
ம்...ஹூம்! ஆசையைப் பாரு ஆசையை!
ஹ...ஹ...ஹா! உன் பயம் எனக்கு இன்பமாக இருக்கிறதே! இல்லாவிடில் என்னிடம் வந்து நீ இப்படி ஒட்டிக் கொள்ளுவாயா?
ஆமாம்! இப்படியே நாம் ஊர் சுற்றிக் கொண்டிருந்தால்...?
ஏன், அலுத்து விட்டதா உனக்கு?
ஆசைக்கு அலுப்பு உண்டா? தொழிற்சாலையைக் கவனிக்க வேண்டாமா என்று கேட்டேன்.


என் மாமாவின் நிர்வாகத்தில் உனக்கு நம்பிக்கை இல்லையா?
அதுவா பேச்சு? தான் பெற்ற குழந்தையைத் தானே வளர்ப்பது போலாகுமா, செவிலித்தாயிடம் ஒப்படைப்பது?
குழந்தையை வளர்க்கும் தகுதிபெற்ற தாய்க்கு இல்லையானால்...?
போதுமே! உங்களை நீங்களே குறைத்துக் கொள்ள வேண்டாம்.
மாமாவின் காரிய திறமையைச் சொல்லுகிறாயா?
மனைவியை இழந்தவர் என் மாமா.
ஐயே, போதுமே! உங்கள் காம்ராக் கண்ணின் லட்சணம் ரொம்ப நன்றாக இருக்கிறது.
தேன் நிலவு முடிந்து ஊர் திரும்பிய பின் ஒரு நாள்...
என்ன அப்படிக் கேட்கிறே!
போகாதே, போகாதே என் கணவா! பொல்லாத சொப்பனம் கண்டு விட்டேன்...!
உன் நடிப்பு அபாரம் நளினி!
ஜெயராமனின் வார்த்தையை நளினி விளையாட்டாக எடுத்துக் கொண்டாலும் அவன் தீவிரமாக இருந்தான்.
மாமா நான் ராணுவத்திலே சேரப் போறேன். அதுலே...
என்ன தம்பி இது..?


அத்தான், உங்களுக்கு ராணுவத்திலிருந்து ஆர்டர் வந்திருப்பதாகக் கேள்விப் பட்டேனே, அது உண்மை தானா?
முதலில் உன் கண்ணீரைக் கட்டுப் படுத்து. பிறகு நான் விவரமாகச் சொல்லுகிறேன்.
விளையாட்டென்று நினைச்சேன், வினையாக்கிட்டீங்களே அத்தான்.
அசடு மாதிரி அழக் கூடாது. யுத்த களத்துக்குப் போய்ப் படம் பிடிக்க என்னைக் கூப்பிட்டிருக்கிறார்கள். உன் கணவனின் புகழில் உனக்குப் பெருமை இல்லையா நளினி?
இப்படி விக்கி விக்கி அழுதால் எனக்குக் கெட்ட கோபம் வரும். உன்னைப் பிரிவதில் எனக்கு மட்டும் வேதனையில்லையா? எனக்குப் போர் வீரர்களைப் போல அதிக சிரமமும் கிடையாது. அதற்குள் உன்னைக் காண ஓடோடி வந்து விடுவேன். எங்கே, என்னைப் பார். சிரி பார்க்கலாம்.
உங்களைப் பிரியும் இந்த வேளையில் எப்படி அத்தான் சிரிப்பேன்?
அவர் போய்ப் பத்து நாளாக வில்லை. நாலு கடிதம் போட்டுவிட்டார். ஆனால் எனக்குத்தான் பத்தாண்டுகள் ஆகி விட்டது போலிருக்கிறது. பிரிவின் கொடுமையை இப்போது தான் உணர முடிகிறது.
ஹா, ஐயோ!
அத்தான், நீங்களா?
போதுமே பிரகாசம்! நானே வருவதாக அல்லவா எதிர்பார்த்தீர்கள்
அந்தக் காலத்தில் முறத்தாலடித்துப் புலியை விரட்டினார்களாம் பெண்கள். இப்போதோ மேலே ஒரு பூ விழுந்தால் கூட...
இன்றைக்கு வந்ததில் உனக்குச் சந்தோஷமில்லையா?
சந்தோஷமில்லாமலா? இப்படி ஓசைப்படாமல் வந்து...!
ஏன் பயந்து விட்டாயா?
இந்த நிலையில் திடுக்கிடும் படியாக எதுவும்...!
இந்த நிலை என்றால் - என்ன நளினி....?
அப்படியா சேதி? அட, மக்கு!
ஐயோ! இது என்ன குழந்தை மாதிரி! விடுங்கள் என்னை. அதை விட இது இன்னும் மோசம்!
தொடரும்-

உங்கள் கேசத்தை அழகுபடுத்த நிரூபணமான பாமாலிவ் வழி





பாமாலிவ் பெர்ப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்...

உங்கள் கேசத்திற்கு போஷாக்கு அளிக்கிறது. பாமாலிவ் உபயோகிப்பதால் நீண்ட, செழிப்பான கேசம் இயற்கையாக வளருகிறது. ரோஜா, லவண்டர் அல்லது மல்லிகை—இம்மூன்று வசீகரிக்கும் சுகந்தங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள்.



பாமாலிவ் கோகோனட் ஆயில் ஷாம்பு...

உயர்தரமான தேங்காய் எண்ணெய்யுடன் தனிப்பட்டு தயாரிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற கலவை. இது அழுக்கற சுத்தம் செய்யும் ஷாம்பு என்பதுடன், ஒரு கூந்தல் அழகு சாதனமும் ஆகும். பாமாலிவ்வின் செழிப்பான நுரை கூந்தலுக்கு ஊட்டத்தைக் கொடுப்பதுடன் உங்கள் தலையையும் கூந்தலையும் சுத்தமாக்கி பரிமள புத்துயிரூட்டுவதனால், புதிய ஆரோக்கியமான கேச வளர்ச்சி ஏற்படுகிறது.

நவநாகரிக இந்தியப் பெண்டிர் கூந்தல் அழகிற்கு விரும்பியெடுப்பது பாமாலிவ்

ஒன்பதாவது அத்தியாயம்

பொன் விலங்கு




அங்கயற்கண் அம்மை தன்னோடு ஆலவாய் நகரமாகிய மதுரை மாநகரத்தில் கோயில் கொண்டருளியிருக்கும் மதிப்புக்குரிய சொக்கநாதப் பெருமான் பல நல்ல முறைகளுக்கு முன் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்து புகழ் பெற்றார் என்பார்கள். இன்றைய மதுரையில் 'மூன்லைட் அட்வர்டைஸிங்' ஏஜன்ஸியோடும் அதன் விளம்பரப் பிரதாபங்களோடும் கோவில் கொண்டருளியிருக்கும் திருவாளர் கண்ணாயிரம் அவர்களோ தம்முடைய ஒவ்வொரு நாளிலும் எண்ணத் தொலையாத பல திருவிளையாடல்களைப் புரிந்து புகழ் பெற்றுக் கொண்டிருந்தார். கண்ணாயிரம் அவர்களுடைய ஒவ்வொரு விநாடியும் ஒரு திருவிளையாடலே. சொக்கநாதப் பெருமானுக்கு இந்த நூற்றாண்டில் அவதாரம் செய்து திருவிளையாடல் புரியும் உத்தேசம் ஏதாவது இருக்குமானால் அவர் அநாவசியமாக நம்முடைய கண்ணாயிரம் அவர்களிடம் தோற்றுப் போய்விட நேரிடும். தெரிந்துதான் முன்பே பெற்றோர்கள் அவருக்கு இப்படிப் பெயர் வைத்தார்களோ என்னவோ? கண்ணாயிரத்துக்கு ஆயிரம் கண்கள், ஆயிரம் மனம், ஆயிரம் திட்டங்கள். எதைப் பற்றியும் கவலைப் படாத வியாபார மனம் அவருடையது. இந்த விநாடியில் பார்த்த பார்வை அடுத்த விநாடி அப்படியே இருக்காது. இந்த விநாடியில் நினைத்த மனம் அடுத்த விநாடிவரை அப்படியே நினைக்காது. அவருடைய ஒரு திட்டத்தில் நூறு திட்டங்கள் அடங்கியிருக்கும். ''கண்ணாயிரம்! நீங்கள் பெரிய காரியவாதி'' என்றோ, ''நீர் பெரிய காரியவாதி ஐயா!''—என்றோ நண்பர்கள் தங்கள் தங்கள் பழக்கத்தின் தரத்துக்கேற்றபடி எப்போதாவது கண்ணாயிரத்தைக் குத்திக் காட்டினால் அதற்குக் கண்ணாயிரம் சொல்கிற மறுமொழி மிகவும் பிரமாதமாயிருக்கும்.

''நீங்கள் என்னைக் காரியவாதி என்று ஒப்புக் கொள்வதற்காக நான் பெருமைப்படுகிறேன். நாம் நம்முடைய அவசியத்துக்காகத்தான் வாழ வேண்டுமேயொழிய அநாவசியமாக ஒரு விநாடி கூட வாழக்கூடாது...நமக்கு நாமும் நம்முடைய தேவைகளும் தான் அவசியம்.... அதற்கு அப்பால் மற்றவையெல்லாம் அநாவசியம்...'' என்று அழுத்தம் திருத்தமாகப் பதில் சொல்வார் கண்ணாயிரம்.

''தன்னையும் தன்னுடைய தேவைகளையும் தவிர மற்றவர்களும், மற்றவர்களுடைய தேவைகளும் உலகத்துக்கு அநாவசியம் என்று ஒவ்வொருவருமே தங்களைத் தனித்தனியாகப் பிரித்துக் கொண்டு திருப்தியடைந்துவிட்டால் வாழ்க்கையே காட்டுமிராண்டித்தனமாகப் போய் விடாதா?'' என்று யாராவது விவரம் தெரிந்தவர்களோ, விவகாரம் தெரிந்தவர்களோ எதிர்த்துக் கேட்டு விட்டால் கண்ணாயிரத்துக்குக் கோபம் வந்து விடும். வாணக் குழாய் போன்ற பெரிய மூக்குக்குக் கீழே பக்கத்துக்கு ஒன்றாக இரண்டு வண்டுகள் ஒட்டிக் கொண்

மணிவண்ணன்

டிருப்பது போல் ஒட்டிக் கொண்டு தெரியும் இட்லர் மீசையும், அந்த மீசையோடு சேர்ந்து கோபமுமாகத் தெரியும் போது, கண்ணாயிரம் கண்ணாயிரம்தான். தான் எதையும் எதற்காகவும் கண்டிக்கலாம், கோபிக்கலாம்; ஆனால் தன்னை எதற்காகவும், யாரும் கண்டிக்கக் கூடாது, கோபிக்கக் கூடாது என்று எதிர்பார்க்கிறவர் கண்ணாயிரம். ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து மோனத்திருக்கும் முழுவெண் மேனியோடு சொக்கநாதப் பெருமான் எதிரே வந்து நின்றால்கூட, ''உம்முடைய திருவிளையாடல் பிரதாபங்களைப் பற்றி ஆறுக்கு நாலு — இரண்டு பத்தி மூன்று கலர் விளம்பரம் ஒன்று கொடுக்கிறீரா?'' என்று கேட்பதற்குக் கண்ணாயிரம் தயார். ஒவ்வொரு விநாடியையும் பணமாக்கிவிட வேண்டும் என்று தவித்துக் கொண்டு துறுதுறுவெனத் திரிபவர் கண்ணாயிரம். மூன்லைட் அட்வர்டைஸிங் ஏஜன்ஸி காரியாலயத்தின் நிலைப்படிக்கு மேலே, ''உங்கள் வரவு நல்வரவாகுக'' என்று எழுதியிருக்கும் வரவேற்பு வாசகத்தில் வரவு என்ற பதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் இரண்டு இடங்களிலும் அதற்கு 'வருமானம்' என்றுதான் பொருள்படும். 'மூன்லைட் அட்வர்டைஸிங் ஏஜன்ஸி' காரியாலயத்தில் 'நல்வரவு' அதிகமாயிருக்கலாம். ஆனால் செலவு என்னவோ வெறும் வார்த்தைகள்தான். கண்ணாயிரம் அங்கு வரும் வாடிக்கைக்காரர்களுக்குச் செய்கிற அதிகபட்ச மரியாதை ஒரு கப் காப்பி அல்லது வெற்றிலை+சீவல்+சுண்ணாம்பு (தேவையானால்)+பன்னீர்ப் புகையிலை. மிகவும் அதிகபட்சமாகச் செய்கிறமரியாதை போர்ன்விடா அல்லது ஓவல் என்று இப்படி ஏதாவது இருக்கும். வருகிறவர்களுக்குச் செய்கிற அதிக பட்ச அவமரியாதை என்னவென்று வாசகர்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்படலாம். மரியாதை, அவமரியாதைகளுக்கு அங்கே தனித் தனி இலட்சணங்கள் கிடையாது. அங்கே செய்யப்படுகிற மரியாதைகளிலும் அவமரியாதை இருக்கலாம். அதே போல் அவமரியாதைகளிலும் மரியாதை இருக்கலாம். வருகிறவன் புத்திசாலியாயிருந்தால் அவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள முடியும். புத்திசாலிகள் பெரும்பாலும் கண்ணாயிரத்தைத் தேடி வந்து மாட்டிக் கொள்ள மாட்டார்கள். தப்பித் தவறி யாராவது புத்திசாலிகள் வகையாக வந்து சிக்கிக் கொண்டாலோ கண்ணாயிரம் அவர்களைச் சீக்கிரமே முட்டாள்களாக மாற்றி விடுவதில் சமர்த்தர். கண்ணாயிரத்திடம் முட்டாள்களைப் புத்திசாலிகளாக மாற்றும் உலகத்துக்குத் தேவையான திறமை இல்லாவிட்டாலும் புத்திசாலிகளை முட்டாள்களாக மாற்றும் உலகத்துக்குத் தேவையில்லாத திறமை ஏராளமாக இருந்து தொலைத்தது. கண்ணாயிரத்தின் வாழ்க்கையில் வேகம் அதிகம். அவரிடம் அநியாயமான சுறுசுறுப்பு இருந்தது. மதுரைச் சீமையில் சுற்று வட்டாரத்துப் பட்டி தொட்டிகளைச் சேர்ந்த ஜமீன்தாரோ, மிட்டாதாரோ, மிராசுதாரோ, சம்ஸ்தானாதிபதியோ மதுரைக்கு வருகிறார் என்றால் அவர் தங்குவதற்கு இடம் முதல் அவர் கலந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகள் வரை எல்லாம் கண்ணாயிரத்தின் கையில் — கண்ணாயிரத்தின் பொறுப்பில் தயாராயிருக்கும். இப்படிப் பல பிரமுகர்களைக் கட்டிக் காக்கிற ஒரு பெரும் பிரமுகராயிருந்தார் கண்ணாயிரம். பிரமுகர்களை வரவேற்பதற்கும், வழியனுப்புவதற்குமாக முக்கால்வாசி நேரம் ரயில்வே பிளாட்பாரத்திலேயே நாட்களைக் கழிக்கிறவர் அவர். ஒரு காரியம் முடிகிற இடத்தில் இன்னொரு காரியம் ஆரம்பமாகிறாற் போல அவ்வளவு விரைந்த சுறுசுறுப்பான வாழ்க்கையை உடையவர் அவர். முடிந்த காரியத்துக்குப் பக்கத்தில், முடிய வேண்டிய காரியம் வந்து காத்துக்கொண்டிருப்பது அவருடைய வழக்கம். அன்று அதிகாலையில் யாரையோ இரயிலேற்றிவிட வந்தவர் அதே இரயிலில் மோகினியும் அவள் தாயும் அவர்களோடு அவர் முற்றிலும் எதிர்பாராத ஆளாகச் சத்தியமூர்த்தியும் வந்து இறங்கக் கண்டார். கூந்தல் தைல விளம்பரப் படத்துக்காக மோகினியின் தாயிடம் முன் பணம் கொடுத்துத் தேதி குறித்திருப்பது ஞாபகம் வந்தது அவருக்கு. உடனே 'இன்று காலையிலேயே அந்தப் புகைப்படத்தை எடுத்து முடித்து விட்டால் என்ன?' — என்று கண்ணாயிரத்தின் வியாபார மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. இந்தப் பையன் சத்தியமூர்த்தி எப்படி மோகினியோடும் அவள் தாயோடும் இரயிலில் சேர்ந்து வர நேரிட்டது ?' — என்ற சந்தேகம் அவருடைய மனத்தில் வந்து அலை மோதவே சத்தியமூர்த்தியிடமே நேரில் அதைக் கேட்டுவிட்டு அவன் ஆத்திரப்பட நேர்ந்ததால் இரயில் பிளாட்பாரத்தில் அவனிடம் சரியாக வாங்கிக் கட்டிக் கொண்டார். அப்புறம் அவர் இரயிலிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த மோகினியை அவள் தாயோடு சந்தித்ததும், அவளிடம் கூந்தல் தைல விளம்பரத்தை ஞாபகப்படுத்தியதும், தன் காரிலேயே



ஆதரவுடன் சீராட்டி
ஆஸ்டர்மில்க்
பாலூட்டி...
OSTERMILK
உங்கள் ஆசைக் கண்மணியின் பாக்கியம்: ஆஸ்டர் மில்க் அளிக்கும் ஆரோக்கியம். காரணம், தாய்ப் பாலுக்கு நிகரானது ஆஸ்டர்மில்க். பரிசுத்தமான பாலிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள ஆஸ்டர்மில்க், பாப்பாவின் பசிக்கும் ஜீரண சக்திக்கேற்பப் பிரத்தியேகமாகப் பக்குவப்படுத்தப்பட்டுள்ளது. தவிர, பற்களும், எலும்புகளும் திடவளர்ச்சிபெறுவதற்கான வைட்டமின் 'டி'யும் இரத்த சோகை தட்டாமல் காப்பதற்கான அயச்சத்தும் அதில் சிறப்புறச் சேர்க்கப்பட்டுள்ளன.
...தாய்ப் பாலுக்கு நிகரானது.
இலவசம்: 'ஆஸ்டர் மில்க் புத்தகம்' (ஆங்கிலப் பிரதி)... ...விரிவுமிக்க, குழந்தைப் பராமரிப்பு நூல் ...தபால் செலவுக்காக 50 ந. பைசாத் தபால் வில்லைகள் இணைத்து எழுதுக: 'ஆஸ்டர்மில்க்' தபால் பெட்டி எண் 2430, சென்னை-2.

அவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டதும் மிகவும் வேகமாக நிகழ்ந்தேறிய நிகழ்ச்சிகள். புறப்படுவதற்கு முன், ''இரயிலில் எங்களோடு இதே வண்டியில் வந்தவர் பேனாவைத் தவற விட்டுப் போயிருக்கிறார். அதை அவரிடம் கொடுத்துவிட வேண்டும். அவர் பிளாட்பாரத்திலேயே எங்காவது இருக்கிறாரா என்று பார்க்கிறேன்'' — என மோகினி பிளாட்பாரத்தின் மறுகோடிக்குப் போக முந்தியபோது, ''யார்? இந்தப் பயல் சத்தியமூர்த்தியைக் கேட்கிறாயா? அவனை நானும் வழியில் எதிரே பார்த்தேன். அவன் இதற்குள் போயிருப்பானே? பையன் அவசரக் குடுக்கை. உங்கள் வண்டியில் அவனும் கூட வந்ததை நானே பார்த்தேன். எங்கள் தெருவில் இருக்கிற பையன் தான். உனக்கு ஆட்சேபணை இல்லையென்றால் இந்தப் பேனாவை நானே அவனிடம் கொடுத்து விடுகிறேன் மோகினி! நீ எதற்கு வீணாகச் சிரமப்படவேண்டும்?'' என்று அவளைத் தடுத்தார் கண்ணாயிரம். தன்னிடம் அவர் பதில் சொல்லிய விதமே மோகினிக்குப் பிடிக்கவில்லை. ஆள் இல்லாதபோது மற்றவர்களைப் பற்றிப் பயல், பரட்டை என்றெல்லாம் பேசுவது கண்ணாயிரத்துக்கு வழக்கம். அப்படிப் பேசிப் பேசியே பெரிய மனிதரானவர் அவர்.

''நானே நேரில் சந்தித்து இந்தப் பேனாவை அவரிடம் கொடுக்க வேண்டும்'' என்று மோகினி உறுதியாகக் கூறியபோது அவளுடைய தாய் அவளை உறுத்துப் பார்த்தாள்.

''பைத்தியம் பிடித்துப் போய் அலையாதே...'' — என்று கடுமையான குரலில் மிரட்டினாள். காரியவாதியான கண்ணாயிரம் இந்த நிலையில் தமக்குச் சாதகமாக எல்லாம் முடிவதற்கு அப்போது தாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொண்டார். தாய்க்கும் மகளுக்கும் சண்டை வந்து ஒருவருக்கொருவர் முகத்தைத் தூக்கிக் கொண்டு நின்றால், 'மயில் தோகை மார்க் கூந்தல் தைலத்து'க்காக எடுக்க வேண்டிய புகைப்படம் பாழாகி விடுமோ என்ற பயத்தில் சாமர்த்தியமாக நடந்து கொண்டு சமாளித்தார் அவர். கௌரவத்தை விடக் காரியம் முக்கியமாயிற்றே அவருக்கு.

''புகைப்படம் எடுக்கிற இடத்துக்குப் போவதற்கு முன் அந்தப் பையனுடைய வீட்டு வாயிலில் காரை நிறுத்தி அவனை வெளியே கூப்பிடுகிறேன். நீயே பேனாவை அவனிடம் கொடுத்துவிடலாம். பாவம்! உன் ஆசையைத்தான் நாங்கள் கெடுப்பானேன்?'' என்று மோகினியைப் பார்த்துச் சிரித்தார் கண்ணாயிரம். நாகரிகமில்லாத அந்தச் சிரிப்பை எரித்துவிடுவது போன்ற பார்வையால் எதிர்கொண்டாள் மோகினி. கண்ணாயிரத்தின் காரில் அவர் உடன் இருந்து ஓட்டிக்கொண்டு வர அமர்ந்து செல்வதை நினைத்தபோது ஏதோ நரகத்தில் உட்கார்ந்திருப்பதைப் போல் அருவருப்பாகவும், வேதனையாகவும் உணர்ந்தாள் மோகினி. 'அம்மாவுக்கு இப்படியெல்லாம் இது நரகமாகத் தோன்றாது. ஏனென்றால் இந்தவிதமான நரகங்களில் உழன்று உழன்று பணம் சேர்த்துக் கொண்டு வாழ ஆசைப்படுவதுதான் அம்மாவின் வாழ்க்கை இலட்சியம். எனக்காகவே இந்த மாதிரி நரகங்களைப் படைத்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறாளே அம்மா? நான் கண்ணாயிரத்திடம் சிரிக்கச் சிரிக்கப் பேசினால் அம்மாவுக்குத் திருப்தியாயிருக்கும். கண்ணாயிரம் அறிமுகப்படுத்துகிற மஞ்சள்பட்டி ஜமீன்தாருக்கு என் கைகளால் சிற்றுண்டி கொடுத்தால் 'பெண் பிழைக்கத் தெரிந்தவளாக இருக்கிறாளே' என்று அம்மா மகிழ்ச்சி அடைவாள்.

''பணமும் பகட்டும் உள்ளவர்களுக்கு முன் எல்லாம் நீ தாராளமாகச் சிரித்து முகம் மலரப் பேச வேண்டுமடி பெண்ணே! உன்னுடைய சிரிப்புக்கு முன்னால் எந்தக் கொம்பனாக இருந்தாலும் மயங்கியே ஆக வேண்டும்'' என்று பச்சையாகவே வாய் கூசாமல் என்னிடம் சொல்கிற அம்மாவுக்கு முன் நான் நியாயம் பேசி என்ன பயன்? நானாக 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்று எந்த விதமாகவும் வாழ்க்கையைப் பற்றி நினைக்கக் கூடாதாம். நான் எப்படி வாழ வேண்டும் என்று அம்மா நினைக்கிறாளோ அப்படித்தான் நான் வாழ வேண்டுமாம். இன்னொருவர் நினைக்கிறபடி — சொல்கிறபடி — கட்டளையிடுகிறபடி அடிமைகள்தான் வாழ்வதாகச் சொல்வார்கள். அம்மா என்னைப் பெண்ணாகப் பெறவில்லை. பெண்ணாக வளர்க்கவும் இல்லை. அடிமையாகப் பெற்றாள். அடிமையாகத்தான் வளர்க்கவும் ஆசைப்படுகிறாள். தனக்கு மட்டுமல்ல; தனக்கும், தான் கையைச் சுட்டிக் காண்பிக்கிறவர்களுக்கும் அவர்களுடைய கீழ்த்தரமான விருப்பங்களுக்கும், எல்லாமாகச் சேர்த்து ஏதோ ஒருவிதத்தில் ஏதோ ஒரு காரணத்துக்காக நான் அடிமையாக இருக்க வேண்டுமென்று அம்மா ஆசைப்படுகிறாள். கைகளிலும் கால்களிலும் கனமான இரும்பு விலங்குகளைப் பூட்டிக் கொண்டு முரட்டு அடிமையாக இருப்

பதையும் விடக் கேவலமானது இப்படிப் பூவும், பொன்னும், பட்டும், பணமும், பகட்டுமாக அலங்கரித்துக் கொண்டு யார் யாருடைய விருப்பங்களுக்கோ, எப்படி எப்படியோ மிகவும் மென்மையான அடிமையாக இருப்பதுதான். இதை எப்படி நான் என் அம்மாவுக்குப் புரிய வைப்பேன்? அவளுக்குப் புரியவைப்பதைவிடப் பட்டப் பகலில் எல்லாரும் காணும்படி மீனாட்சியம்மன் கோவில் கோபுரத்தில் ஏறிக் கீழே குதித்து என் உயிரை மாய்த்துக் கொள்வது என்னுல் சுலபமாக முடிகிற காரியம். என்னுடைய இந்த அழகே எனக்குப் பெரிய பகை! நான் ஏன் இப்படி அழகாகப் பிறந்து தொலைத்தேன்? பார்த்தவர்கள் அருவருப்பு அடையும்படியான அவலட்சணமாகப் பிறந்திருந்தேனுனல் எவ்வளவு நன்ருயிருந்திருக்கும்? அப்போது நான் யார் கண்ணிலும் படமாட்டேன். என்னைப் பார்க்கிறவர்கள் மனமும் கலங்கித் தவிக்காது. ''பார்க்கிற கண்ணில் இலட்சணமாகத் தெரிய வேணுமடி, பெண்ணே!'' என்று கூச்சமில்லாமல் உபதேசம் செய்கிருள் அம்மா. அழகை முதலாக வைத்தும் ஒருவியாபாரமா? சீ! சீ! என்ன வாழ்க்கையோ? என்ன பிழைப்போ? போன மார்கழியிலே டான்ஸுக்காக மனப்பாடம் பண்ணின ஆண்டாள் பாசுரத்திலே, 'மானிடவர்க்கென்று பேச்சுப்படின் வாழகில்லேன்' என்று ஒரு வரி வந்ததே;—அந்த வரியை நெட்டுருப் போடுகிற ஒவ்வொரு தடவையும் எனக்கு அழுகையே வந்திருக்கு. அம்மாவோ, 'மானிடருக்காகவே பேச்சுப் பட்டு—ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவருக்குப் பேச்சுப்பட்டு' வாழ வேண்டும் என்கிருள்'—

> தன்னையும் தன்னுடைய தேவைகளையும் தவிர மற்றவர்களும், மற்றவர்களுடைய தேவைகளும் உலகத்துக்கு அநாவசியம் என்று ஒவ்வொருவருமே தங்களைத் தனித் தனியாகப் பிரித்துக் கொண்டு திருப்தியடைந்து விட்டால் அப்புறம் வாழ்க்கையே காட்டுமிராண்டித்தனமாகப் போய் விடாதா?

இப்படி மனத்தை அரித்தெடுக்கும் பல நினைவுகளோடு கண்ணுயிரத்தின் காரில் போய்க் கொண்டிருந்தாள் மோகினி.

போன மார்கழியில் இந்த ஆண்டாள் பாசுரத்துக்குத் தானே ஆண்டாள் வேடமிட்டுக் கொண்டு பக்தி சிரத்தையோடு அபிநயம் பிடித்த ஞாபகம் வந்தது அவளுக்கு. அதற்கும் முந்திய மற்ருெரு ஞாபகமாக ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோவில் திருவாடிப் பூரத் திருவிழாவில் தேர் அன்றைக்கு இரவு இதே பாசுரத்தைப் பாடி ஆண்டாளின் கால்கள் மிதித்து நடந்த புண்ணிய பூமியிலே ஆண்டாளுக்கு முன்பாகவே ஆண்டாள் வேடமிட்டு ஆடிய நினைவும் அவளுக்கு இப்போது உண்டாயிற்று. 'மனிதனுக்குப் பயன்படுவதற்காக என் வாழ்வைப் பேரம் பேசினுல் நான் வாழவே மாட்டேன்' என்றபொருள்படும் அந்த அழகிய பாசுரத்தை இரைந்து பாடிக் கொண்டே உயிரை விட்டுவிட வேண்டும் போல் மோகினி தன் வாழ்க்கையை ஒரு சுமையாகவும், கனமாகவும் தனக்குத் தானே பல முறை உணர்ந்திருக்கிருள். 'மானிடவர்க்கு என்று பேச்சுப்படின் வாழகில்லேன்' என்ற பாசுரத்துக்கு அபிநயம் பிடித்துக் கொண்டே மானிடர்களைக் கவர்ந்து காசு சேர்க்க வேண்டும் என்ற அம்மாவின் ஆசைக்கும், தன் அந்தரங்கத்துக்கும் எட்டு ஏணி வைத்தாலும் எட்டாது என்று அவள் உணர்ந்துதான் இருந்தாள். வாழ்வதற்கு ஏதோ ஓர் உயர்ந்தநோக்கமும் அர்த்தமும் இருக்க வேண்டுமென்று அவள் எண்ணி எண்ணிப் புழுங்கிக் கொண்டிருக்கிருள். வாழ்வதற்கு ஒரே நோக்கமும் ஒரே அர்த்தமும் பொருள் சேர்ப்பது தான் என்று அவளுடைய பேராசை பிடித்த அம்மா அவளிடம் வற்புறுத்துகிருள். 'என்னுடைய இதயத்தின் இருட்டு என்றைக்கு விடியப் போகிறதோ' என்று அவள் ஈரம் கசிந்திருந்த தன் கண்களைத் துடைத்துக் கொண்டு பெருமூச்சு விடவும், ''இதுதான் அந்தப் பையன் சத்திய மூர்த்தியின் வீடு! இறங்கிவா... அவனைக் கூப்பிட்டுப் பேனுவைக் கொடுத்து விட்டுப் போகலாம்'' என்று கண்ணுயிரம் காரை நிறுத்திக் கீழே இறங்கி மோகினி இறங்குவதற்காகப் பின்புறம் வந்து கதவைத் திறந்து விடவும் சரியாக இருந்தது. பயல், அவன், இவன் என்று ஆளில்லாத போது பேசி விட்டாலும் சத்தியமூர்த்தியிடம் கண்ணுயிரத்துக்கு ஏதோ ஒரு பயம் இருக்கிறது என்பதை, ''மிஸ்டர் சத்தியமூர்த்தி இருக்கிருரா?'' —என்று அவர் மரியாதையாக விசாரித்ததிலிருந்து தெரிந்து கொண்டாள் மோகினி. சத்திய மூர்த்தியிடம் பேனுவைக் கொடுத்து விட்டுச் சிறிது நேரம்



பினிக்ஸ் ஆடைகள்
வாயில்கள்
பாப்ளின்கள்
ஸூட்டிங்குகள்
பினிக்ஸ் மில்ஸ்
ஒரு ரூயா ஸ்தாபனம்
PPX-7 TAM

பேசிக் கொண்டிருந்தபின், ''என்னை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி விடை பெற்ற போது சத்திய வேட்கை நிறைந்த அந்த அழகிய கண்களின் பார்வையிலிருந்து விடுபட்டுப் பிரிந்து போகிறோமே என்ற ஏக்கம் தான் அவளிடம் மீதமிருந்தது. உலகத்தில் சாதாரணமாக எல்லாருடைய கண்களும் தன்னைப் பார்க்கிறாற் போல் பார்க்காமல் சத்தியமூர்த்தியின் கண்கள் தன்னைப் பார்க்கும் போது அவற்றில் ஓர் ஆழ்ந்த அநுதாபம் இருப்பதை அவள் உணர்ந்தாள். இப்படி ஓர் அநுதாபத்துக்காகத்தான் அவள் பிறந்ததிலிருந்து தவித்துக் கொண்டிருந்தாள். பேனாவைக் கொடுத்த பின் சத்தியமூர்த்தியின் வீட்டு வாசலிலிருந்து கார் புறப்பட்ட போது, ''பையன் தமிழ் எம். ஏ. தேறி விட்டு வீட்டோடுவறட்டு வேதாந்தம் பேசிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். திமிருக்கு ஒன்றும் குறைவில்லை. இந்தத் திமிர் பிடித்தவனுக்கு வேலை பார்த்துக் கொடுக்கச் சொல்லி இவனுடைய தந்தை என்னிடம் சிபாரிசுக்கு வேறு வருகிறார்'' என்று அலட்சியமாகச் சொல்லத் தொடங்கினார் கண்ணாயிரம். மோகினி முகத்தைச் சுளித்தாள். அவளுடைய அருமை அம்மாவோ கண்ணாயிரத்துக்குத் தலையாட்டிக் கொண்டு இதை உற்சாகமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். கண்ணாயிரத்திடமிருந்த அற்பத்தனமான புறம் பேசும் குணத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் மோகினி மனம் நொந்தாள்.

அதே வீதியில் நாலைந்து வீடு தள்ளிச் சென்றபின் கார் மறுபடியும் நின்றது. அதுதான் கண்ணாயிரத்தின் வீடு என்று அம்மா காதருகே முணு முணுத்தாள். மோகினி பதிலே சொல்ல வில்லை. கேட்டுக் கொள்ளாதது போல இருந்து விட்டாள்.

''முத்தழகு அம்மாள்! நம் வீட்டுக் காப்பி இந்த ஊரிலேயே தரமான காப்பி என்று பெயர் பெற்றதாக்கும். குடித்த பின் மோகினியே 'சர்டிபிகேட்' கொடுக்கப் போகிறாள், பாருங்கள்! இறங்கி வந்து பல் விளக்கிக் காப்பி குடியுங்கள். அதற்குள் நான் ஸ்டூடியோவுக்குப் ஃபோன் செய்து நாம் படம் பிடிக்க வரப் போவதை அவர்களுக்குச் சொல்லி விடுகிறேன்'' என்று கண்ணாயிரம் உற்சாகமான அரட்டைச் சொற்களில் அவர்களை அழைத்த போது, ''ஆகா! அதுக்கென்ன? உங்கள் வீட்டுக் காப்பியைப் பற்றிச் சொல்லியா தெரிய வேணும்? மனுஷாளைப் போலத் தானே பண்டமும் இருக்கும்?'' என்று ஒத்துப் பாடிப் புகழ்ந்து கொண்டே காரிலிருந்து கண்ணாயிரத்தோடு சேர்ந்து இறங்கி விட்டாள் அம்மா, கீழே இறங்கி நின்று கொண்டு அம்மா. மோகினியையும் இறங்கும்படி கையசைத்துக் கூப்பிட்டாள். மோகினி காரிலிருந்து இறங்கவே இல்லை. ''நீ போய் விட்டு வா, அம்மா! எனக்குக் காப்பியும் வேண்டாம்; டீயும் வேண்டாம்! சீக்கிரமாகப் படத்தைப் பிடித்துக் கொள்ளச் சொல். காலாகாலத்திலே வீட்டுக்குப் போய்க் குளித்து விட்டுக் கோயிலுக்குப் போகணும்....'' என்று கடுமையாகவும் கண்டிப்பாகவும் அம்மாவுக்குப் பதில் கூறினாள் மோகினி.


''இப்போ நீ இறங்கி வரப் போறியா இல்லியா?....ன்னமேது மரியாதை தெரியாமே....?'' என்று அம்மா மிரட்டினாள். பெண் அசைந்து கொடுக்கவே இல்லை. ''பரவாயில்லை! முத்தழகம்மா! நீங்கள் வாருங்கள். உங்கள் பெண்ணைச் சிரமப்படுத்த வேண்டாம். பாவம்! அவளுக்கு நம் வீட்டுக் காப்பி கொடுத்து வைக்க வில்லை போல் இருக்கிறது. மஞ்சள்பட்டி ஜமீன்தார் ரயிலிலேருந்து இறங்கறப்பவே, 'கண்ணாயிரம்! பிளாஸ்கிலே உங்க வீட்டுக் காப்பி கொண்டாந்திருக்கியா இல்லியா? அதை முதல்லே சொல்லு. நீ காப்பி கொண்டாரலேயின்னா இப்படியே ஊருக்குத் திரும்பிடறேன்.... நாளைக்கு மறுபடி இரயிலேறி வந்து காப்பியோட உன்னை எதிர்பார்க்கிறோம்-பாரு'' என்று பேச்சுக்குப் பேச்சு 'முத்தழகம்மா' என்ற பேரைக் குழைவோடு சொல்லி விளித்து நாசூக்காகக் குழைந்தார் கண்ணாயிரம். இப்படி நாலு தரம் யாராவது பேரைச் சொல்லிப் போலியாகக் கூப்பிட்டால் கூட அம்மாவுக்கு உச்சி குளிர்ந்து போய் விடும் என்று மோகினிக்கு நன்றாகத் தெரியும். இப்போது கண்ணாயிரம் அம்மாவிடம் குழைந்த குழைவினால் அம்மா தன்னைக் கோபத்தோடு பார்த்துக் கொண்டிருப்பதையும் அவள் புரிந்து கொண்டாள்.

''சொன்னால் கேள்! எனக்குக் காப்பி வேண்டாம். நீ மட்டும் போய் விட்டு வாம்மா...'' என்று இரண்டாம் தடவையாகவும் அழுத்திச் சொன்னாள் மோகினி. அவள் பிடித்தால் பிடித்த முரண்டுதான் என்று அம்மாவுக்கும் தெரியும்.

''நீ ஒரு நாளைக்கும் உருப்படவே போறதில்லை....'' என்று வயிற்றெரிச்சலோடு மகளைப் பார்த்துக் கைகளைச் சேர்த்துச் சொடுக்கி முறித்து விட்டுக் கண்ணாயிரத்தோடு படியேறி உள்ளே போனாள் அம்மா.

''காரியத்தைக் கெடுத்துடுவீங்க போல் இருக்கே. அதும் போக்குப்படியே

விட்டுப் பிடியுங்க முத்தழகம்மா! முதலில் போட்டோவுக்கு உட்கார்ந்து காரியம் முடியட்டும்.... அது முக்கியம். அப்புறம் மத்ததைப் பார்த்துக்கலாம்...'' என்று அம்மாவை உள்ளே அழைத்துப் போகும் போது கண்ணாயிரம் சொல்லிக் கொண்டு சென்றதைக் காரில் உட்கார்ந்தபடியே மோகினியும் கேட்கமுடிந்தது. 'என்ன நரக வாழ்க்கை இது? 'போட்டோ' முடிந்து வீட்டுக்குப் போனதும் முதல் வேலையாக அம்மாவிடம் கண்டித்துச் சொல்லிவிட வேண்டும். எண்ணெய் விளம்பரம், சீயக்காய் பொடி விளம்பரமென்று இனி மேல் என் உயிரை வாங்கப்படாது அம்மா! மானமாக ஏதாவது செய்து சம்பாதித்துப் போடுகிறேன். கோவில் திருவிழா, நல்லவர்கள் நடத்துகிற சபை ஆண்டு விழா என்று கௌரவமாக நாலு இடங்களில் நான் படித்திருக்கிற நடனத்தைக் கலையாக ஆடுகிறேன். அதில் கிடைக்கிற சம்பாத்தியம் நமக்குப் போதும். இந்த அல்ப ஆசைகளையெல்லாம் விட்டுவிடு. இனிமேலாவது என்னைப் புரிந்து கொள். மஞ்சள் பட்டி ஜமீன்தாரும்,



மயில் தோகை மார்க் கூந்தல் தைலக் காரனும் அவர்களைக் கட்டிக் கொண்டு அழுகிற கண்ணுயிரமும் எக்கேடு கெட்டு வேண்டுமானுல் போகட்டும். நீ என்னை அநியாயமாகக் கொல்லாதே. நான் இதற்கெல்லாம் ஆளில்லை....'' என்று அம்மாவிடம் எப்படி எப்படிச் சீற்றத்தோடு பேசவேண்டும் என்பதை நினைத்த போது அந்த நினைப்பே துணிவாகவும் கறுகறுப்பாகவும் ஓடியது அவள் மனத்தில். இரண்டு மாதங்களுக்கு முன் முதன் முதலாக இந்த மஞ்சள்பட்டி ஜமீன்தார் என்ற பெருங்குடி மகனைக் (நிறையக் குடிப்பவரை) கண்ணுயிரம் தன் வீட்டுக்கு அழைத்து வந்து அம்மாவுக்கு அறிமுகப்படுத்தியதையும் அம்மா தனக்கு அவரை அறிமுகப்படுத்திய போது தான் கனன்று சீறி விழுந்ததையும் இப்போது மீண்டும் நினைவுகூர்ந்தாள் மோகினி. 'அன்றைக்கு எங்கிருந்துதான் தனக்கு அவ்வளவு கோபம் வந்ததோ?' என்பதை இப்போது எண்ணுகிற வேளையில் அவளுக்கே வியப்பாயிருந்தது. அம்மாவும் சுற்றி யிருந்தவர்களும் கீழ்த்தரமாக நடந்து கொள்ள முயன்ற பல வேளைகளில் தான் முரண்டு பிடித்து நெருப்பாக இருந்து அவர்களைச் சுட்டிருந்த சம்பவங்கள் எல்லாம் ஒவ்வொன்றுக ஞாபகம் வந்தன அவளுக்கு. இப்படி ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும் மிகச் சிரமப்பட்டுத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருந்த காரணத்தால்தான் நடு நடுவே வாழ்க்கையை முடித்துக் கொண்டு ஒரேயடியாகப் போய்ச் சேர்ந்து விடலாமா என்ற அலுப்பும், சோர்வும், விரக்தியும் அவளுக்கு ஏற்பட்டன. சில நாட்களில் உயிர் வாழ்வதற்கே அலுப்பாகவும் சோர்வாகவும் இருந்திருக்கிறது அவளுக்கு.

''மோகினி! உனக்கு நானே காப்பி கொண்டு வந்து விட்டேன்.''

—கையில் டவரா டம்ளருடனும் வாய் நிறைய விஷமச் சிரிப்புடனும் கண்ணுயிரம் காரருகே வந்து நின்று கொண்டிருந்தார். ஏதேதோ யோசனைகளில் மூழ்கி யிருந்த மோகினி அவர் வந்து நின்றதைக் கவனித்துப் புரிந்து கொள்வதற்கே சில விநாடிகள் ஆயின.

''எனக்குக் காப்பி வேண்டாம் சார்! சீக்கிரமாக வந்து] ஸ்டுடியோவுக்கு



அழைத்துப் போய்ப் படத்தைப் பிடித்துக் கொண்டு அனுப்புங்கள். வீட்டுக்குப் போய்த் தலை முழுக வேண்டும்'' என்று அவள் கடச்சுடப் பதில் கூறிய விதமும் பதிலின் முடிவில் இரட்டுற மொழிதலாக இரட்டைப் பொருளில் 'தலைமுழுக வேண்டும்' என்று கூறிய வாசகமும், கண்ணாயிரத்தைப் பொசுக்கின. அவர் முகத்தில் ஈயாடவில்லை. காப்பியோடும் ஏமாற்றத்தோடும் வீட்டுக்குள் திரும்பிப் போனார் அவர். கால் மணி நேரத்தில் அவரும் முத்தழகம்மாளும் மறுபடியும் வெளியே வந்தார்கள்.

கண்ணாயிரம் அமைதியாக ஆனால் உள்ளே நீறுபூத்து அடங்கிய கோபத்தோடு காரை ஓட்டினார். அம்மா மோகினியை எரித்து விடுவது போல் பார்த்தாள். ''தள்ளி உட்கார்ந்து தொலை....இப்படி இடிச்சுக்கிட்டு உட்கார்ந்தால்தான் நீ என் வயத்திலே பொறந்த அருமை தெரியுமாக்கும்?'' என்று திரும்பி வந்து காரில் அமர்ந்ததும் காரணமின்றி அம்மா தன்னிடம் கொதித்துப் பேசியதிலிருந்தே அவள் மன நிலையை மோகினி புரிந்து கொள்ள முடிந்தது. தான் சொல்லியபடி பிறர் கேட்காதபோது வருகிற இந்த ஆற்றாமைக் கோபம் அம்மாவிடம் அதிகமாக உண்டு என்பது மோகினிக்குத் தெரியும். 'தான் கண்ணாயிரத்தின் வீட்டுக்குள் வரவில்லை' என்பதுதான் அம்மாவின் இந்தக் கோபத்துக்குக் காரணம் என்றும் மோகினி புரிந்து கொண்டாள்.

சிறிது நேரத்தில் கார் வெளி வீதியிலிருந்த பிரபலமான பெரிய ஸ்டுடியோ ஒன்றின் வாயிலில் போய் நின்றது. கண்ணாயிரம் தன்னோடு அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு ஸ்டுடியோவுக்கு உள்ளே சென்றார். சுற்றிலும் மலைப் பின்னணியோடு மயில் ஒன்று தோகை விரித்தாடுகிற ஸீன் கட்டிவிட்டு எதிரே காமிராவை நிறுத்தி மோகினியைப் புகைப்படம் எடுக்க ஏற்பாடு ஆகியிருந்தது. பெரிய அழகிய தோகையை விரித்துக் கொண்டு நிற்கும் மயில் போல் கட்டுக்கடங்காத கருங்குழல் அலைஅலையாக அவிழ்ந்து தொங்கிட, கூந்தலும் முகமும் சேர்ந்து படத்தில்விழுகிறாற்போல் காமிராவுக்கெதிரே அமர்ந்தாள் மோகினி. கண்ணாயிரம் ஏதோ சொல்ல அவள் அருகில் வந்தார். பதுங்கிப் பதுங்கி அவர் அருகில் வந்த விதத்திலேயே வியாபாரத் தந்திரம் தெரிந்தது. ஆனாலும் பயந்துகொண்டே தான் வந்தார்:

'இதோ ஒரு நிமிஷம்! படம் பிடிக்கிறதுக்கு முன்னாடி இந்தச் சேலையைக் கட்டிக்கிடணும். அப்பத்தான் எடுப்பாக இருக்கும்'' என்று கரைகளில் பளபளவென்ற தங்கச் சரிகையிட்டு மஸ்லினை விட மிக இலேசாக இருக்கும் புடைவை ஒன்றைப் பிரித்து மோகினியிடம் நீட்டினார் கண்ணாயிரம்.

''கண்ணாயிரம் சார்! எனக்கு ஒரு சந்தேகம்! உங்கள் மயில் தோகை மார்க் கூந்தல் தைலத்தைப் பெண்கள் தலைக்குத் தடவிக் கொள்வதற்காக விற்கப் போகிறீர்களா? அல்லது புடைவைக்குத் தடவிக் கொள்வதற்காக விற்கப் போகிறீர்களா? முதலில் அதைச் சொல்லி விடுங்கள். அப்புறம் நீங்கள் என்னைப் போட்டோ பிடிக்கலாம்!'' என்று ஆணியடித்தாற்போல் அழுத்தமாக ஒரு கேள்வியைக் கேட்டு விட்டு அந்த வெங்காயச் சருகுச் சேலையை அவர் கையிலிருந்து வலிந்து பறித்து ஒரு மூலையில் ஆத்திரத்தோடு வீசி எறிந்தாள் மோகினி. (தொடரும்)


ஏழு வைட்டமின்கள்
சேர்ந்தது, ஏற்றமிகு அமுல் பாலுணவு
Amul
புரதச்சத்து நிறைந்த அமுல் பாலுணவு வைட்டமின் ஏ, பி, பி, பி, சி, டி ஆகிய சத்துக்களும், நியசினமைடும் கொண்டது. இந்த வைட்டமின் சத்துக்கள் சீரிய, ஆரோக்கியமிக்க வளர்ச்சிக்கு உதவுவதோடு உங்கள் மழலைச் செல்வத்தை நோயிலிருந்து காக்கின்றன.
தயாரிப்பாளர்கள்:
கெய்ரா டிஸ்ட்ரிக்ட் கோவாப்பரேடிவ் மில்க் ப்ரொட்யூசர்ஸ் யூனியன் லிட்.
அகில இந்திய விநியோகஸ்தர்கள்: VOLTAS வோல்டாஸ் லிமிடெட்
ASP/ABF-24 TAM



லுப்னாவின் யாத்திரை

ஜோர்டான் என்ற தேசத்தில் இஸா ஸையத் என்ற ஓர் ஏழை வாழ்ந்து வந்தான். அவன் மனைவியின் பெயர் கமாரா. இவ்விருவரும் ரொட்டி வியாபாரம் செய்து பிழைத்து வந்தார்கள். இவர்களுக்கு லுப்னா என்ற ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்தது. கதைகளில் வரும் அரச குமாரிகளுக்கு ஏற்படும் அபாயங்களைப் போல் லுப்னாவுக்கும் ஏற்பட்டது. தங்கள் அழகிய ஐந்து வயது மகள் நாளுக்கு நாள் பொலிவிழந்து சோர்வடைந்து வருவதைக் கண்ட பெற்றோர் கவலை கொள்ளலானார்கள்.

தன் அருமை மகளின் நோயைக் குணமாக்கும் மந்திர மருந்தையுடைய வைத்தியரைத் தேடியலைந்தான் இஸா. ஆனால் பல நாட்கள் அலைந்தும் பலன் கிடைக்க வில்லை. வேதனையோடு வீடு திரும்பியவன் தன் மனைவியிடம் "என் லுப்னாவைப் பீடித்துள்ள நோயைக் குணமாக்கும் மந்திர சக்தி வாய்ந்த மாத்திரை இந்த ஜோர்டான் தேசத்திலேயே கிடையாது. ஆனால் கடல் கடந்து சென்றால், இங்கிலாந்து தேசத்தில் என் லுப்னாவைப் போன்ற சிறு குழந்தைகளின் நோயைத் தீர்க்கும் மாயா சக்தி வாய்ந்த வைத்தியர்கள் இருக்கிறார்களாம்" என்றான். பாவம், அவனோ ஏழை, அவனால் கடல் கடந்து அந்த விந்தை நாட்டுக்கு எப்படிச் செல்ல முடியும்? ஏதாவது அதிசயம் நிகழக் கூடாதா என்று கடவுளை உள்ளம் உருக வேண்டினான்.

அவன் பிரார்த்தனை வீண் போகவில்லை. 'மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிறைந்த மாளிகை' என்று புகழப்பட்ட ஜோர்டான் மன்னரின் அரண்மனையில் மன்னர் ஹுஸைன் அவர்களின் முன்னால் பிரதம மந்திரி சிரம் தாழ்த்தி ஏதோ கூறிக் கொண்டிருந்தார். அவர் கூறியது ராஜாங்க ரகசியம் ஏதுமில்லை. ஏழை ரொட்டிக்கார இஸா கொஞ்சம் கொஞ்சமாக இறந்து கொண்டிருக்கும் தன் மகள் லுப்னாவின் வியாதியைக் குணப்படுத்த இங்கிலாந்துக்குச் செல்ல வகையில்லாமல் கவலையும் கண்ணீருமாகக் கடவுளை வேண்டியபடி காலம் கடத்துவதைத்தான் குறிப்பிட்டார். குழந்தை லுப்னாவின் பரிதாபமான நிலையைக் கேட்ட அரசர், இஸாவை உடனே அரண்மனைக்கு வரவழைக்கும்படி உத்தரவிட்டார். ஜோர்டானின் தலைநகரான அம்மானில் மன்னர் மாளிகையில் இஸா நடுங்கும் உள்ளத்துடன் நுழைந்தான். என்னவோ ஏதோ என்ற கலவரத்துடன் கால்கள் தாளமிட நிற்கும் இஸாவிடம் வஸீர், "உன் மகள் லுப்னாவை நீ இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்று அவள் வியாதியைக் குணப்படுத்திக் கொண்டு திரும்பி வருவதற்கு ஆகும் அத்தனை பொருளையும் நமது மன்னர்பிரான் உனக்குத் தருவதாகச் சொல்லி விட்டார்" என்றார். இதைக் கேட்ட இஸாவுக்கு எப்படி இருக்கும்? கண்ணீர் பார்வையை மறைத்துக் கன்னத்தில் வழிந்தோடியது. இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை ஓடிப் போய்த் தனது கிராமத்து மக்களுக்குத் தெரிவிக்கத் திரும்பிய அவன் முன்னால் கருணையே வடிவான மன்னர் வந்து நின்றார். இஸா அவருக்கு முழந்தாளிட்டு வணங்கி, அவரது கையை எடுத்து முத்தமிட்டுத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். இனிமையான அன்பு நிறைந்த குரலில் அரசர், "இனி ஒரு விநாடியும் தாமதிக்காதே. உன் மகள் லுப்னாவுடன் உடனே இங்கிருந்து கிளம்பு" என்றார்.

அரசாங்க விமானம் ஒன்று குழந்தை லுப்னாவையும் அவள் பெற்றோரையும் ஏற்றிக் கொண்டு வெய்யில் காயும் ஜோர்டானை விட்டு, பனி மூடிய இங்கிலாந்தை நோக்கிப் பறந்து சென்றது.

லுப்னாவைப் பரிசோதித்த வைத்தியர், "உனக்கு மந்திர சக்தி வாய்ந்த ஒரு மாத்திரையைத் தரப் போகிறேன். அதனால் நீ அயர்ந்து தூங்குவாய். தூங்கி எழுந்ததும் உன்னைப் பீடித்துள்ள வியாதி பறந்து போயிருப்பதை உணர்வாய்" என்றார். குழந்தை லுப்னாவுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. அவள் பெற்றோருக்கும்தான். குழந்தை லுப்னா தனக்குக் கிடைக்கப் போகும் மந்திர மாத்திரையைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிறாள். அது மட்டுமல்ல, "என் இரு கண்களுக்கும் மேலாக என் மன்னரை நான் நேசிக்கிறேன். அவர் நீண்ட காலம் வாழ்வாராக. கடவுள் மன்னரைக் காப்பாராக" என்று தன் மன்னரை மனதார வாழ்த்துகிறாள் குழந்தை லுப்னா.

(இந்தக் கதையையும் குறிப்பையும் அனுப்பியது இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருக்கும் பத்து வயது இந்தியச் சிறுமி எஸ். ராதா. அவள் இந்தக் கதைக்கான சன்மானத்தை இந்திய நாட்டின் தேசியப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்து விடும்படி கூறி இருக்கிறாள். அவள் விருப்பப்படியே செய்து விட்டோம். —ஆசிரியர்)

கற்பனைக் கதையல்ல – உண்மை

ஓப்ஜூவின் யாத்திரை என்ற மேலேயுள்ள கதை கற்பனையல்ல. உண்மைச் சம்பவத்தையே கதை போல் இங்கு கூறி இருக்கிறது. மேல் பக்கத்தில் உள்ள படம் ஜோர்டான் மன்னரின் உள்ளத்தை நெகிழ வைத்த குழந்தை ஓப்ஜூவின் நிஜ உருவம்தான்.

குழந்தை ஓப்ஜூவுக்கு இதயத்தில் ஒரு சிறிய ஓட்டை ஏற்பட்டிருந்தது. இதனால் குழந்தையின் உயிருக்கே அபாயம் என்பதையும் அறிந்தார் தந்தை. ஆனால் அதற்கான ஆபரேஷனை ஜோர்டானில் யாராலும் செய்ய முடியாது. ஒரு நாள் லண்டன் பி.பி.ஸி. இம் மாதிரி ஆபரேஷனைப் பற்றி ஒலிபரப்பிய ஒரு நிகழ்ச்சியை ஓப்ஜூவின் தந்தை கேட்டார். உடனே லண்டனிலுள்ள அதன் தயாரிப்பாளருக்குத் தம் மகள் இதய நோயால் மெள்ள மெள்ள இறந்து கொண்டிருக்கும் பரிதாபத்தைப் பற்றி எழுதி, 'அவளைக் குணப்படுத்தும் ஆபரேஷனைச் செய்ய என்னிடம் பணமில்லை' என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதம் ஜோர்டான் மன்னர் ஹுஸைன் அவர்கள் பார்வைக்கு அனுப்பப்பட்டது. மன்னரும் உடனே குழந்தை ஓப்ஜூவின் ஆபரேஷனுக்கு ஆகும் செலவு அத்தனையும் தாமே ஏற்பதாகச் சொல்லிக் குழந்தையையும் பெற்றோரையும் லண்டனுக்கு அனுப்பி வைத்தார். மன்னரின் பிரத்தியேகமான ஹோட்டல் அறையொன்றில் குழந்தை ஓப்ஜூவுடன் இவா லனயத் தங்கி யிருக்கிறார். ஓப்ஜூவுக்கு நடைபெறும் இதய ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்து குழந்தை ஓப்ஜூ ஓடி விளையாட வேண்டும் என்று நாமும் பிரார்த்திப்போமாக.

திருடன் தப்பினான்...எப்படி?


முன்னொரு காலத்தில் ஒரு தேசத்தில் ஒரு புகழ்பெற்ற திருடன் வசித்து வந்தான். திருடன் என்பதற்காக அவனை நாம் வெறுக்கக்கூடாது. இவன் ஒரு விநோதமான திருடன். பணக்காரர்களிடம் இருக்கும் அதிகப்படியான பொருளை எடுத்து ஏழை எளியவர்களுக்கு வழங்க நினைத்தான். இதனால் இவன் திருடனானான். மக்கள் விரும்பும் திருடனை இவன் ரொம்ப சாமர்த்தியசாலி. மன்னரின் காவல்படை வீரர்களால் இவனைப் பிடிக்கவே முடியவில்லை. ஒரு நாள் இவன் தானே மன்னர் முன் நின்று, "அரசே! இதோ, நானே வந்திருக்கிறேன். ஆனால் நீங்கள் என்னை எங்கு சிறை வைத்தாலும் நான் தப்பிச் சென்று விடுவேன்" என்றான். மன்னர் அவனை அகழிகள் சூழ்ந்த ஒரு கோட்டையின் உச்சியிலுள்ள ஓர் அறையில் தள்ளிப் பூட்டினார். பலத்த காவல் போடப்பட்டது. திருடன் எப்படித் தப்பிக்கப் போகிறான் என்பதை நாடே எதிர்பார்த்துக் காத்திருந்தது. திருடன் பலசாலி. சிறைக்கு ஒரே ஜன்னல். அதன் கம்பியில் ஒன்றை மெள்ள மெள்ள நெம்பி அசைத்து வளைத்துத் தான் புகுந்து வெளியேற வழி செய்து கொண்டான். அத்தனை உயரத்திலிருந்து எப்படிக் கீழே குதிப்பது? சுற்று முற்றும் பார்த்தான். அவன் அதிர்ஷ்டம் இருட்டில் ஓர் உறுதியான துண்டுக் கயிறு கிடந்தது. ஜன்னலுக்கும் தரைக்கும் உள்ள இடைவெளியில் பாதி நீளம்தான் அதன் நீளம் இருந்தது. சின்னக் கயிறு. ஆனால் திருடன் ஒரு யுக்தி செய்து அந்த அறையிலிருந்து தப்பித் தரையில் குதித்தான். எப்படி? என்ன யுக்தி செய்தான் சொல்லுங்கள், பார்க்கலாம்!





உங்கள் ஆல்பத்துக்கு

ஆஸ்திரேலியாவை விடவும் ஐக்கிய அமெரிக்காவைக் காட்டிலும் பெரிய ஒரு நாடு. உலகிலேயே மிகப் பெரிய நதி மட்டுமல்ல, அதிகமான நதிகள் இந்தக் நாட்டில் ஓடுகின்றன. அடர்ந்த காடுகளை உடையது இந்த நாடு. இது எந்த நாடு? தென் அமெரிக்காவில் உள்ள பிரேஸில் நாடுதான் இது. உலகத்தில் விளையும் காப்பிக்கொட்டையில் பாதி இங்குதான் விளைகிறது. பிரேஸில் நாட்டுப் பழங்குடிப் பெண் இருவிழாவுக்கான நடன உடையில் இருப்பதையே நீங்கள் மேலே காண்கிறீர்கள்.





தர்மம் தலை காக்கும்

காந்தன்

தேவர் பிலிம்ஸ் தயாரிப்பு என்றால் அந்தப் படத்தில் யாரெல்லாம் நடிப்பார்கள் என்று கண்ணை மூடிக் கொண்டு கூறி விடலாம்.

எம். ஜி. ராமச்சந்திரன்: ஒரு டாக்டர். தம் வைத்தியத் தொழிலைப் பற்றிய நினைப்பே யில்லாமல் திருடர்களைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபடுகிறார்.

சரோஜா தேவி: தனவந்தர் சிவானந்தத்தின் மகள் சிவகாமியாக வந்து கல்லூரி மாணவிகளோடு ஆடிப் பாடி, சைக்கிள் சவாரி செய்து, டாக்டர் சந்திரனைக் காதலித்துப் பல அல்லல்களைக் கடந்து அவரையே மணந்து கொள்கிறார்.

அசோகன்: நல்லவன் மாதிரி ஆரம்பத்தில் தோன்றிப் பிறகு வில்லனாக மாறிக் கடைசியில் முகமூடி மனிதனாகவும் விளங்குகிறார்.

எம். ஆர். ராதா வழக்கமான பணக்காரர். பசுத் தோல் போர்த்திய புலி.

எம். வி. ராஜம்மா: பதியின் சொல் தவறாத பத்தினி. படத்தைக் கடைசி வரையில் இழுத்துச் சென்று 'வணக்கம்' போடும் வரையில் வளர வைக்கும் உத்தமி!

சாண்டோ சின்னப்பா தேவர்: படத் தயாரிப்பாளர்; வில்லனின் கையாள். தர்மம் தலை காக்க உதவுகிறவர்.

சரோஜா தேவி முதல் காட்சியிலேயே கவர்ந்து விடுகிறார். காதலன் காரில் ஏறிக் கொள்ளும் போது வீட்டு வாசலில் நின்று கொண்டு வனப்பின் வடிவமாய்க் காந்தப் பார்வையோடு வழியனுப்பும் காட்சியும், அம்மாவைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கடைசியில் தன் உள்ளத்தைத் திறந்து காட்டும் அழகும் மறக்க முடியாதவை.

எம். ஜி. ஆர். நிறையச் சண்டை போட்டிருக்கிறார். கஷ்டப்படாமல் காதலியின் கரம் பற்றுகிறார். சிவகாமியுடன் போய் அவள் வீட்டில் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவிக்கும் போது நாணிக் கோணி நன்றாய் நடிக்கிறார்.

படத்தின் ஆரம்பத்தில் நடக்கும் மர்ம நிகழ்ச்சிகள் அற்புதமாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன. அப்பொழுது பின்னணி கூட இல்லாமல் நிலவும் மௌனம் தமிழ்ப் படம் தான் பார்க்கிறோமா என்ற சந்தேகத்தை உண்டாக்குகிறது. படத்தின் ஒளிப்பதிவு மிக நன்றாயிருக்கிறது.

கதை, வசனம் இரண்டும் ச. அய்யாப் பிள்ளை எழுதியிருக்கிறார். தேவர் பிலிம்சுக்கு ஏற்ற கதை! வசனம் படத்துக்கு ஏற்ற மாதிரி இருக்கிறது.


''தர்மம் தலை காக்கும்'' என்ற தலைப்பைக் காப்பாற்றுவதற்காகக் கதாநாயகனுக்குப் பல ஆபத்துக்கள் வருகின்றன! அவைகளிலிருந்தெல்லாம் கதாநாயகன் தப்பி விடுகிறான்! (தப்பாவிட்டால் கதை என்ன ஆவது!)

பணக்காரரான சதானந்தத்தைக் காதலில் சிக்க வைத்து அதைப் படம் பிடித்து வைத்துக் கொண்டு அவரிடம் காட்டிப் பயமுறுத்துவது ரொம்ப ரொம்பப் பழைய கற்பனை. அசட்டுத்தனமானதும்கூட. என்ன செய்யலாம்!

காட்டில் சிறுத்தையும், கழுதைப் புலியும் போடும் ஆக்ரோஷமான சண்டை அருமையான காட்சி! மெய்சிலிர்க்க வைக்கிறது.

''பறவைகளே; பறவைகளே! எங்கே வந்தீங்க?'' ''தொட்டு விடத் தொட்டு விடத் தொடரும்'' என்னும் இரண்டு பாடல்களும் இனிமையாக இருக்கின்றன.

கதையில் கொஞ்சம் புதுமையையும், பாத்திரப் படைப்பில் சிறிது மாறுதலையும் புகுத்தி இப் படம் தயாரிக்க முயன்றிருந்தால் தேவர் பிலிம்ஸாரின் முயற்சி மிக மிகப் பாராட்டத்தக்கதாக இருந்திருக்கும்.



சித்தூர் ராணி பத்மினி

தமிழ்ப் படங்களின் தரம் ஓரளவு வளர்ந்திருக்கிறது என்று சந்தோஷப் படும்போது சித்தூர் ராணி பத்மினி வந்து ''தமிழ்ப் படங்களின் நீளம் குறைந்திருக்கிறதே தவிரத் தரம் ஒன்றும் உயர்ந்து விடவில்லை'' என்று நிரூபித்துக் காட்டிவிட்டது. புராணப் படங்கள் வந்து சக்கைப் போடு போட்டதை முன்பு பார்த்தோம். பிறகு அவை தலை குப்புறக் கவிழ்ந்ததையும் பார்த்தோம். அதே சோதனை தான் சரித்திரப் படங்களுக்கும் ஏற்பட்டு வந்திருக்கிறது. 'சூடுண்ட பூனை அடுப்பங்கரை அணுகாது' என்பது பழமொழி. ஆனால் அது பூனைக்குந் தானே! நம் படாதிபதிகளுக்கல்லவே!

இராஜபுத்திர வனிதாமணிகளின் வீரத்துக்கும், தீரத்துக்கும் மயிர் நீப்பின் வாழாக் கவரி மானைப் போன்ற அவர்கள் கற்பின் பெருமைக்கும் எடுத்துக் காட்டாக விளங்குவது சித்தூர் ராணி பத்மினியின் சரித்திரம்.

சரித்திரத்தைப் படித்துப் பெருமிதம் கொண்டவர்கள் படத்தைப் பார்த்து மகிழ்வதற்கில்லை.

அலாவுதீன் கில்ஜியின் தளபதியான மாலிக்காபூருக்கும் பீம்சிங்குக்கும் நடந்த வாட்போர் நகைப்புக்குரியது! அதற்கு இளவரசி பத்மினி வீர வாள் பரிசளிப்பது பரிகாசத்துக்குரியது! போர்க் காட்சிகளும் சிறப்பாயில்லை.

வைஜயந்திமாலா பத்மினியாக வருவதால் நடனத்துக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது போலும். ராணி பத்மினியின் எழில் வடிவைக் கண்ணாடியில் பார்த்தான் அலாவுதீன் கில்ஜி — அந்த எழில் உருவை நேரில் காண விழைந்து அவன் தீட்டிய சதித் திட்டம்தான் சித்தூரைச் சின்னா பின்னப் படுத்திவிடுகிறது. சரித்திர உண்மைகளைச் சிதைக்காமல் சிறப்பித்து வெளியிட்டிருந்தால் பலரும் பார்த்துப் பெருமைப்படலாம்.

படத்தில் பாராட்டும்படியான அம்சம் சீர்காழி கோவிந்தராஜனின் சிறப்பான இசைதான். ''பார்த்துக் கொண்டிருந்தாலே போதும்'' என்னும் பாட்டும், ''வானத்தில் மீனென்று கண்டான்'' என்னும் பாட்டும் கார்வைகள் நிறைந்த கோவிந்தராஜனின் கம்பீரமான குரலில் அமுத வெள்ளமாய்ப் பிரவாகம் எடுக்கின்றன. ஜி. ராமநாதனின் இசையமைப்பும் பாராட்டுக் குரியது.


'சித்தூர் ராணி நடனமாடுகிறாள்' என்று நினைத்தால்தான் மனசுக்குக் கஷ்டமாயிருக்கிறதே யொழிய, நம் ஆடல் அழகி வைஜயந்தியின் அபிநயங்களும், முக பாவங்களும் நெஞ்சில் அழியா ஓவியமாகப் பதிந்து விடுகின்றன. (படத்தை விடுத்து இந்த நடனத்தை மட்டும் பார்க்க முடிந்தால் நன்றாயிருக்கும்!) ராணி பத்மினி தன் நாட்டுக்கே எமனாகிவிட்ட தன் எழில் உருவை வெறுத்துத் தற்கொலை செய்து கொள்ள முயலும்போது வைஜயந்தியின் நடிப்பு உருக்கமாயிருக்கிறது. ஆனால் வசனம் பேசும் போது உணர்ச்சி இல்லையே!

சிவாஜி கணேசனின் சிறந்த நடிப்பைக் காண முடியாமற் போனது வருந்தத் தக்கது. இதில் நடிக்க எப்படித்தான் சம்மதித்தாரோ! சிவாஜிக்கும் ராஜா ராணி கதைகளுக்கும் ஏனோ ஒத்துக் கொள்வதில்லை! (''மனோகரா'', ''வீரபாண்டியக் கட்டபொம்மன்'' இரண்டும் இதற்கு விதிவிலக்கு.)

எம். என். நம்பியாரின் நடிப்பு நம்பிக்கையூட்டும் விதத்தில் இருக்கிறது. டி. எஸ். பாலையா தம் பொறுப்பைச் சரியாய் நிறைவேற்றி யிருக்கிறார்.

சரித்திரக் கதையென்று தயாரிக்கப் போகக் குளிக்கப் போய்ச்சேறுபூசிக் கொண்ட கதையாகிவிட்டதே!




பர்க்லி
WILLS
Berkeley
WILLS Berkeley
MADE IN INDIA
CIGARETTES
10
10 சிகரெட்டுகள்
30 ந.பை.
நல்ல சுவை
மணமுள்ள புகை
ஒவ்வொரு பர்க்லி பாக்கெட்டிலும் காணப்படும்
நட்சத்திரம் பிரசித்தி பெற்ற டபிள்யூ.டி. & எச்.ஓ. வில்ஸ் தாரத்தின் உத்திரவாதமாகும்
BKC-13 TM

தாரிணியின் கணவன்



காரியாலயத்துக்குப் போவதற்காகப் பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டிருந்தபோது தெரிந்த முகமாக ஒரு முகம் படவே சற்றுக் கூர்ந்து பார்த்தேன். தெரிந்த முகமென்ன? உறவு முகம் என்பதாலேயே அப்படி ஒரு வேக உணர்வு. நான் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு முன்னால் முகம் வேறொரு பஸ்ஸினுள் மறைந்து விட்டது. உடல், தோற்றம், அசைவு இவைகளை இயல்பாக மனம் பரபரப்புடன் கணித்தது. அவர் என் அக்காவின் கணவர்தான். என்னை அவர் பார்த்திருக்க முடியாது; பார்த்து விட்டு அலட்சியமாகப் போயிருக்க மாட்டார்.

''9-20 பஸ்ஸுக்கா வஸந்தி? 9-10க்கே போய் விடுவாயே? நிமிஷக் கணக்கில் ஆபீஸ் கணக்கைவிடப் புலியாயிற்றே!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். காரியாலயச் சிநேகிதி நின்று கொண்டிருந்தாள்.

நினைவுகள் வேறு மாதிரி கிளர்ந்து, நெய்யுருக்காகத் துயரம் நிறைந்து வந்ததால் பதில் ஒன்றும் சொல்லாமல் சந்தர்ப்பத்தை யொட்டிய ஒரு சம்பிரதாயச் சிரிப்புடன் நிறுத்திக் கொண்டேன்.

எதிரே பஸ்கள் திசை மாறிச் சென்று கொண்டிருந்தன. டாக்ஸிகளும், பிரைவேட் கார்களும், சைக்கிள்களும் காலை நேரத்தின் சுறுசுறுப்பை அறிவித்துக் கொண்டிருந்தன. எல்லா நகரங்களிலும் இந்த வேளையின் சுறுசுறுப்பு இந்த முறையில்தான். எனினும், பெங்களூர் எனக்கு இன்னும் புதுமையாகத்தான் இருந்தது. ஆறு மாதங்களாகப் பழகுகிறேன் என்றாலும், போகிற இடம் காரியாலயம், வருகிற இடம், வீடு என்று இருப்பதால் புதிய இடம் எனக்கு என்றைக்குமே புதிய இடம்தான்.

பஸ் வந்தது. நானும் சிநேகிதியும் ஏறிக் கொண்டோம். இருவருக்கும் வெவ்வேறு ஸீட்டுகளில் உட்கார இடம் கிடைத்ததால் அப்போதைக்கு என் மன நிலையை ஒட்டி நான் தனியானேன். அதையே மனம் விரும்பவும் விரும்பியது.

பஸ்ஸின் வெளியே பார்த்த போது ஒரு பர்லாங்கு தூரத்துக்கு அப்பால் மழை பெய்வது தெரிந்தது. மழை பாட்டுக்கு மழை; வெய்யிலும் கூடவே தன் ஒளியிலும் நிலையிலும் மாறாமல் காய்ந்து கொண்டிருந்தது. முன்பு நான் இருந்த ஊரில் இப்படி ஒருகாட்சியைச் சாதாரணமாகக் காண முடியாது; இங்கே இது மிகவும் சகஜமாக இருக்கிறது. என் மனத்தில் திடீரென்று துயரத்தின் அருவி பாயத் தொடங்கியது போலவே, வெளியில் வெய்யிலினூடே அந்த மழையும் தொடங்கியிருந்தது.

என் அக்கா ஒரு முறை இந்த மாதிரி மழை பற்றிக் கூறியிருந்ததைப் பெங்களூர் வந்த பிறகு அடிக்கடி நினைத்துப் பார்த்துக் கொள்கிற சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது மிகச் சாதாரணமான — குழந்தைகளுக்கும் தெரிகிற சொல் வழக்குத்தான். 'காக்காய்க்கும் நரிக்கும் கல்யாணமாம்!' அக்காவின் சொல் நினைவுக்கு வருகிறதே தவிர அவள் முகம்கூட இலேசாய்த் தேசலாவது போல் மறந்து வருவதை நினைத்தால் எனக்கே சிலிர்ப்பாக இருக்கிறது. புகைப்படத்தைப் பார்த்தால்தான் பளிச்சென்று என்னிடம் பேச வருகிறாற்போல் நினைவில் வருகிறாள். தாரிணி என்ற பெயரையும், தன் கணவரையும் எங்களுடைய வயதான தகப்பனாரையும் என் மனத்தில் அவள் நிலைக்கச் செய்திருக்கிறாள். எத்தனை முறை அவள் விளையாட்டாய்க் கேட்டிருக்

வை. சுப்ரமண்யன்

கிறாள்: 'ஏனடி வஸந்தி, மாப்பிள்ளையும் நானும் அப்பாவை உன் தலையில் கட்டினால் காப்பாற்றுவாயாடி?'

'ஓ' என்று தடையின்றி நான் ஒவ்வொரு முறையும் கூறியது நினைவுக்கு வருகிறது.

மாப்பிள்ளை அப்பாவை மட்டுமா கைவிட்டார்? அக்காவை?....

தாரிணி அவருக்கு வாழ்க்கைப்பட்ட பிறகு, வாழ்க்கையின் நிலையுள்ள ஒரு பொறியை யாவது மனதார உணர்ந்து பார்க்க வேண்டுமென்று தவித்திருக்கிறாள். கல்யாணத்துக்கு முன்புகூட அவள் வாழ்ந்து கொண்டுதான் இருந்தாள் என்றாலும், அவளுடைய கணவரின் உறவும் கலந்தபிறகுதான் வாழ்க்கையை முதல் துளிரினின்றும் புதுப்பித்துக் கொண்டாள். துளிர் தொடர்ந்து துளிர்க்க இடமில்லாமல், அவர் அக்காவுடன் முகம் கொடுத்தும் பேசாமலே இருந்தார். அவள் அருகே கூட வராமல், வீட்டுக்கு வருவதையே நிறுத்திக் கொண்டு விட்டார்.

காரியாலயத்திலும் எனக்கு ஒன்றும் ஓடவில்லை. 'டைப்' அடித்தால் 'எக்ஸிக்யூஷன்' மிக நன்றாகச் செய்வேன் என்று எனக்கு விசேஷமான மௌஸ் உண்டு; இன்று நான் 'டைப்' அடித்த முதல் காகிதமே அந்தச் சிறப்பை மாற்றி அமைக்கப் போதுமானதாயிருந்தது. என்னுடன் பஸ்ஸில் வந்த கிரேஸ் நிறைய சற்று நேரத்தில் வந்து சொன்னாள்: 'உனக்கு உடம்பு சரியில்லாதிருந்தால் காரியாலயத்துக்கே வந்திருக்க வேண்டாமே. மானேஜர் உன்னை லீவு எழுதி வைத்து விட்டுப் போகச் சொன்னார். தவறாக ஒன்றும் சொல்லவில்லை. மனப்பூர்வமாகத்தான் சொன்னார்' என்றாள் அவள். மத்தியானம் லீவு போட்டு விட்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

சமையல் அறையும் அதற்கு வெளியே ஆறடிக்கு ஆறடி கொண்ட புழங்குமிடமும் கொண்டதுதான் 'எங்கள் வீடு' என்பது. இதற்கே என் சம்பளத்தில் நாலில் ஒரு பங்கைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. சமையல் அறை என் சாம்ராஜ்யம்; அப்பாவுக்கு அந்த மற்றப் பகுதி ஓர் ஆசிரமம் போல. இரண்டு பேரும் முனிவர்கள் போல, அல்லது காக்கைகள் போல — எப்படிக் கொண்டாலும் ஒன்றும் பொருட்டாகி விடப் போவதில்லை— நாட்களைத் தள்ளிக் கொண்டு வந்தோம்.

காலையில் தாரிணியின் கணவரைப் பஸ் நிலையத்தில் கண்டதை அப்பாவிடம்கூறலாமா என்று ஒரு விநாடி என் மனம் யோசித்தது. தண்ணீர் தெறித்த இடங்களில் கரையான் புற்று மண் சரிவதைப் போல் ஏற்கனவே அவர் தம்முள் கலகலத்துக் கொண்டு வருகிறார். இந்தப் பேச்சு அவருடைய பலவீனமான உள்ளத்தில் துயர இதழ்களைப் புதிதாகப் பின்னும்; உடல் சாவோடு போராடுகிற அவருக்கு இந்த மனக் கரைசலும் சேர்ந்து அவரைப் பாடாய்ப் படுத்தும்.

தாரிணியும் அவருமாகக் காட்சியளித்த ஒரு புகைப் படம் புழங்குமிடத்துச் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது. நடு வகிட்டுக் கிராப்பு; வகிடு பிரியுமிடத்தில் இலேசான நரை; நீளமான சிரித்த முகம்; ஒளி கூடிய கண்கள் ஒரு கம்பீரத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன; அந்த நரையைக் கூட ஓர் அழகாக ஏற்றுக் கொண்டாளாம் தாரிணி. அவள் முகம் சிவக்க ஒரு முறை என்னிடம் தன் வார்த்தைகளிலேயே கூறியிருக்கிறாள். அவருடைய முகம் குறித்த பதவிசும், அமைதியும், ஆழமும், கம்பீரமும் அவரது நடைமுறையில் அப்படியே மர்மமாகத்தான் நின்றுவிட்டன. தாரிணியின் கல்யாணத்தைத் தொடர்ந்து அவருடைய தகப்பனார் எங்கள் தகப்பனாரிடம் ஏதோ வாக்குத் தொடர்ந்தார். அது மனக் கசப்பாக உருப் பெற்று நிலைத்து விட்டது. அதை யொட்டிய காரணத்தோடு விலகியிருப்பவர் போல் தாரிணியின் கணவர் அவளைப் புறக்கணித்து விலகியே இருந்தார். அதன் பிறகு காற்று வழி கிடைத்த செய்திகளிலும், அவரே அபூர்வமாக ஒரு முறை தாரிணிக்கு எழுதிய கடிதத்திலும் அதை அவர் காரணமாகக் காட்ட வில்லை; ஆனால் எதையுமே காரணமாகக் காட்டாமல் மௌனியாக இருந்து வதைக்கத் தொடங்கினார்.

மலரத் தொடங்கிய நிலையில் கருகத் தொடங்கினாள் தாரிணி. கலியாணம் ஆன புதிதிலேயே அவள் கணவர் தனிக்குடித்தனம் வைத்தார்; குடித்தனம் வைத்த சில நாட்களிலேயே அவர் தனியாகவும் ஆகி விட்டார். தம் வீட்டுக்கு வருவது கிடையாது; தாயார் தகப்பனார் இருந்த வீட்டுக்கும் போவது கிடையாது. தாரிணி தனியாகி விட்ட சமயங்களில் நான் போய்த் துணையிருப்பேன். என் துணை அவளுடைய மன ஆறுதலை ஓரளவுக்கு மட்டுமே உருவாக்கப் பயன்பட்டது. நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்ததால் பகல் பொழுதெல்லாம் தாரிணி தனிமையுடன்தான் உறவு கொண்டாட முடிந்தது.

கோயிலை ஒட்டியிருந்தது தாரிணி குடியிருந்த வீடு. வாசலில் வந்து அடைப்புத் தட்டிக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு தெருக் காட்சிகளைப் பார்த்தபடி யிருப்பாள் தாரிணி. வலதுபுறம் பார்த்தால் கோபுரம் எல்லாவற்றையும் அடைத்துக் கொண்டு நிற்பது ஒன்றுதான் தெரியும். கோபுர வாசலில் குறுக்கும் நெடுக்குமாகப் போவோரில் அவள் தன் கணவரை எதிர்பார்த்து நிற்பது எனக்குத் தெரியும். அவள் அப்படி நிற்கும் போதெல்லாம் அவள் நிலையில் சலனம் உண்டாக்கக்கூடாதென்று நான் உள்ளே போய் விடுவேன்.

ஒரு நாள், "வஸந்தி, வஸந்தி! சீக்கிரம் வாயேன்" என்ற அக்காவின் குரல் கேட்டு உள்ளிருந்து ஓடிவந்தேன்.

"அதோ பார், அவர் கோபுர வாசலில் நிற்கிறார். ஓடிப் போய் அவரை அழைத்துக் கொண்டு வாயேன். அக்கா அழைத்து வரச் சொன்னாள் என்று சொல்லு!" என்றாள். ஆடுகிற தலைப் பின்னலைக் கையில் இழுத்துப் பிடித்துக்கொண்டு ஓடினேன். அதற்குள் அவர் அந்த இடத்தை விட்டு நழுவத் தொடங்கினார். வேர்க்கடலை வாங்கிக் கொண்டு வேர்க்கடலைக்காரக் கிழவிக்குக் காசைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போய்க் கொண்டிருந்தார்.

"...அக்கா உங்களைக் கூப்பிட்டுக்கொண்டு வரச் சொன்னாள்..." என்றேன் மென்று விழுங்கிக் கொண்டு.

அரைத் திரும்பலாகத் திரும்பிப் பார்த்து, "ஓ! வஸந்தியா?... நீ இங்கேதான் இருக்கிறாயா?... வளர்ந்து போயிருக்கிறாயே...? பாவாடை மேல் மேலாக்கு வேறே... நீ அக்காவுக்குத் துணையா? வருகிறேன்..அப்புறமா வருகிறேன் என்று சொல்லு. அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறேன்...." என்று சொல்லிக் கொண்டு நடந்தார்.

"இந்தா—" என்ற அவர் குரல் கேட்டுத் திரும்பினேன். கொஞ்சம் வேர்க்கடலையை என் கையில் கொடுத்து விட்டுத் திரும்பி வேகமாகப் போய்விட்டார்.

ஏமாற்றத்தை எதிர்பார்த்துத்தான் இருப்பாள் தாரிணி. ஆனாலும் ஏமாற்றம் என்று எழுதிக் கையிற் கொடுத்தாற் போல் நிச்சயமானவுடன் காத்திருந்த கண்ணீர் முத்துக்கள் ஜவந்தி இதழ்கள் போல் உதிர்ந்தன. நான் கொடுத்த வேர்க்கடலைகளைத் தின்னாமல் நாலைந்து நாட்கள் வரை ஒரு கவர்ப் புரையுள் வைத்திருந்து எடுத்து எடுத்துப் பார்த்துவிட்டு மீண்டும் வைப்பாள். அதன் பிறகு என்னிடமே கொடுத்துத் தின்னச் சொல்லிவிட்டாள்.

நான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதி முடித்துவிட்டேன். இனி நிரந்தரமாகப் பகலிலும் அக்காவுக்கு அகலாத் துணையாக இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டேன். அப்படி எண்ணியதுகூட எத்தகைய குழந்தைத்தனம் என்பதையும் வருஷங்கள் சில கழித்துத் தான் தெரிந்து கொண்டேன்.

திருவாதிரையன்று தாரிணியும் நானும் கோவிலுக்குச் சென்றிருந்தோம். அக்காவின் தோற்றம் என்னைப் பரவசமடையச் செய்தது. அவளை அந்த நிலையில் பார்த்ததே அம்மனைத் தரிசித்து முடித்து விட்டாற் போன்றிருந்தது எனக்கு. அவள் மேனி சந்தன நிறம். சந்தனப் பொருளை ஒரு முறை பன்னீர் கொண்டு கழுவியது போல, குளித்த பிறகு துல்லியமாக விளங்கினாள் தாரிணி.

நாங்கள் தனியாகப் பெண்கள் கும்பலில் ஒருவருடனும் சேராமல், மேற்குப் பிராகாரத்தில் வந்து கொண்டிருந்தோம். எங்களைச் சிறிது முந்திக்கொண்டு வடக்குப் பிராகாரத்தில் திரும்பிய சிலரிடமிருந்து கேட்ட பேச்சொலியில் 'தாரிணி' என்ற சொல் கேட்டு நான் கூர்ந்து கேட்டேன். தாரிணியும் என் முகத்தை ஏறிட்டபடி கேட்டாள்:

"இந்தப் பொண்ணு தாரிணி எவ்வளவு மூக்கும் முழியுமா அழகா யிருக்கு! இவளை விட்டு விட்டு அவன் வேறே கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறானமே!"

"ஏன் இவளைப் பிடிக்கவில்லையாமா அவனுக்கு? அவனோடு அந்தப் பொண்ணு வாழவேயில்லியே!"

"அதை யார் கண்டா? அதனதன் தலையெழுத்து எப்படியோ அப்படி நடக்கிறது!"

எனக்கே இந்தச் சொல் தாளவில்லை. தாரிணியைப் பற்றி என்ன சொல்ல?

தைப்புதுமையின் சோபை ஊரெங்கும் பரவி யிருந்தது. எங்கள் ஊரில் தெருக்கள் நீள நீளமானவை. தெருவில் நடந்தால் நாலைந்து வீடுகளிலாவது கல்யாணப் பந்தல் போட்டிருக்கும். நாதசுரத்தின் ஒலி கேட்டபடி இருக்கும்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை; ஹெட்மிஸ்ட்ரஸ் வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தேன். வெய்யிலையே உற்று நோக்கிக் கொண்டு நடந்ததால் கண்ணை இருக்கத் தொடங்கியது. குனிந்து தரையைப் பார்த்துக் கொண்டு நடந்தேன். ஒரு வீட்டின் முன்னால் நரிக் குறவக் கூட்டத்தாரின் சத்தமும் அவர்களை மிரட்டுகிற குரலும் கேட்டு நிமிர்ந்தேன். மிரட்டிக் கொண்டிருந்தவர் தாரிணியின் கணவர். கல்யாணச் சாப்பாட்டு எச்சில் இலைக்கு அவர் அவர்களிடம் நேரம் குறித்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அவரை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தேன். புது உடைகள் மினுமினுக்க, மார்பில் சந்தனத்துடன், வாயில் வெற்றிலை பாக்குக் குதப்பலுடன் பாஷையே 'முழுமிழு'வென்றிருந்தது.

'வஸந்தி' என்று என்னை அழைத்தார். தயங்கி நின்றேன். அவர் பேசாமலாவது இருந்திருக்கக்கூடாதா என்று நினைத்தேன். நான் கேள்விப்படக் கூடிய செய்தி என்னை விடத் தாரிணியை என்ன செய்யுமோ என்ற நினைவு பயத்தையே முதலில் ஊட்டியது. 'சாப்பிடுகிறாயா?' என்று என்னைக் கேட்டார். 'நான் சாப்பிட்டுவிட்டுத்தான் கிளம்பினேன்' என்று சொன்னேன். உள்ளே போய்க் கொஞ்சம் பட்சணம் கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிட்டு, நான் போகத் தொடங்கியதும் என்னோடு சிறிது தூரம் வந்தார்.

அவருடைய நண்பர் ஒருவருக்குக் கல்யாணமாம். இவர் மாப்பிள்ளைத் தோழராம்.

"உங்கள் நண்பர் முதல் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாரா, இரண்டாவதா?" என்று கேட்டேன். எனக்குத் துணிவு பிறந்து விட்டது. அவருக்கும் தாரிணிக்கும் கல்யாணமான புதிதில் அவருடன் வம்பளந்திருக்கிற துணிவின் புனர்ப் பிறப்பு இது.

"ஏன் அப்படிக் கேட்கிறாய் வஸந்தி?" என்று, வாய்ச் சுமையை உமிழ்ந்துவிட்டுத் தெளிவாகவே கேட்டார்.

"நீங்கள் அவருக்கு நண்பராக இருப்பதனால் கேட்டேன்."

"அப்படியானால் நானும்... நானும் பண்ணிக்கொள்ளப் போகிற விஷயம் உங்களுக்குத் தெரியுமா?" என்று அவர் கேட்டார்.

"தெரியும். அதுதான் எப்போது? எனக்கும் தாரிணிக்கும் அழைப்பு அனுப்புவீர்களா இல்லையோ?" என்றேன்.

வந்தவர்: (புதிதாக டெலிபோன் வைத்த கடைக்காரரிடம்) ஸார்! உங்க டெலிபோன் நம்பரைக் கொடுங்கோ. டெலிபோன் செய்யச் சௌகரியமாயிருக்கும்!

கடைக்காரர்: டெலிபோன் புத்தகத்திலே இருக்கு, பார்த்துக்கிடுங்க.

வந்தவர்: உங்க பேரு?

கடைக்காரர்: அதுவும் அந்தப் புத்தகத்திலேயே இருக்கு!

நாகரிக யுவதி: என்னதான் டாக்டர் சொன்னார் என்றாலும் இப்போ எனக்கு இந்த ஆபரேஷன் செய்யறது அவ்வளவு உசிதமில்லேன்னு தோணுது!

அவள் கணவன்: ரொம்ப சரி! பழைய ஆபரேஷனைப் பற்றியே இன்னும் ஒரு வருஷம் நீ பேச வேண்டியது பாக்கி யிருக்கிறதே!

''அனுப்புகிறேன். கட்டாயம்! இப்போது தான் பெண் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் திகையவில்லை!'' என்றார்.

என் வயசுக்கு நான் மலையைப் பார்த்துக் கொக்கரிப்பது போல் அவரும் அவருடைய வயசுக்கு எலியோடு எதிர்க் குதியல் போடுகிறார். எனக்கு அப்போது பதினைந்து வயது முடிந்து பதினாறு தொடங்கி யிருந்தது.

அக்காவிடம் அவரைச் சந்தித்ததைப் பற்றிச் சொன்னேன். 'குதிரைக் கொட்டகை பற்றி எரிகிறது' என்று சங்கீதத்திலேயே இசைத்துச் சொன்ன பிரகஸ்பதி போலல்லாமல், 'கண்டேன் சீதையை' என்ற ரீதியில் அவரை மாப்பிள்ளைத் தோழராக முதலில் சொல்லி, பிறகு கல்யாண வீட்டில் கண்டதாகக் கூறினேன்...

''அவர் வருவதாகச் சொன்னாரா?''

''நான் வீட்டுக்கு வரும்படி அழைத்தேன். ஏதோ பிஸினஸ் விஷயமாக இன்றைக்கு மெட்ராஸ் போகிறாராம்; போய்விட்டுத் திரும்பியதும் கண்டிப்பாக வருவதாகக் கூறினார்'' என்றேன். ஆனால் நான் அவரிடம் துணிவாகப் பேசிய அவரது கல்யாணப் பேச்சைப் பற்றி அக்காவிடம் சொல்லவில்லை.

சித்திரை பிறந்தது. சித்திரைப் பிறப்பை அப்பா ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். எங்களுக்குத் தெரியாமல் தாரிணியின் ஜாதகத்தை அவர் ஜோஸியரிடம் காண்பித்துப் பலன்கள் கேட்டு வைத்துக்கொண்டிருந்திருக்கிறார். சித்திரை பிறந்ததும் தாரிணிக்கு வாழ்க்கை மலருமாம். அவள் கணவர் அவளுடன் சேர்ந்து வாழத் தொடங்குவாராம்.

தனியாக இருந்த அப்பா எங்களுடன் வந்து சேர்ந்திருக்கத் தொடங்கினார். தாரிணியின் போக்கிலும் ஒரு மாறுதல் கண்டு நான் மகிழ்ந்தேன். சிறிய வீட்டில் உள்ள எளிய பொருள்களை யெல்லாம் கூட இடம் மாற்றிப் புதுமை பூக்க அவள் வழி செய்து கொண்டிருந்தாள். அவளுக்கும் அவளுடைய கணவருக்கும் ஒரு தனி இடம்கூட உருவாகி, அந்த இடத்தையே வழிபடுவது போல் அதனுள் பயபக்தியுடன் சஞ்சரிக்கத் தொடங்கினாள் தாரிணி. நான் அந்த இடத்துக்குத் தடதடவென்று போய்க் கொண்டிருந்ததை மாற்றிக் கொள்ளப் பழகினேன்.

சித்திரை முடிவதற்குச் சில தினங்களுக்கு முன் ஒரு நாள் தாரிணி என்றுமில்லாத கலகலப்புடன் காணப்பட்டாள். 'ஒருவேளை இன்று ஜவந்திநாதன் — அக்காவின் கணவரது பெயர் அது — வந்து விடுவாரோ; தெய்வ சக்தி மூலமாக இந்தச் சூசகம் அக்காவுக்குத் தெரிகிறதோ' என்றுகூட நான் நினைத்தேன். ஆனால், அன்றைக்கு அக்காவே தெய்வமாகி விட்டாள்! ஒன்றுமே நேரவில்லை; மத்தியானம் இரண்டாந்தர வேளைக் காப்பியை அப்பாவின் முன் மேஜை மேல் வைத்துவிட்டு, ''காப்பியை எடுத்துக் கொள்ளுகிறீர்களா, அப்பா?'' என்று கேட்டவள்தான்; மேஜை மேல் பட்ட கை சாய்ந்து தொங்கியது. அவள் அறுந்த கொடி போல் சுருண்டு கீழே விழுந்தாள்.

வாழ்வுக்கு வேண்டுமானால் காரணங்கள் வேண்டியிருக்கின்றன; 'அதற்கு'க் காரணம் என்ன வேண்டிக் கிடந்தது? எண்ணாமல் விடுகின்ற மூச்சு இழைகளின் கடைசி இழை வெளிப்பட்டு, ஓர் எண்ணிக்கையுடன் நின்று விடுவதுதான் பிரத்யட்சமான காரணம்.

அந்த இடத்தைவிட்டு அப்பாவும் நானும் வேறு இடத்துக்கு வந்து விட்டோம். அவருடைய பென்ஷன் பணம் ஐம்பது ரூபாயில் தான் எங்கள் காலட்சேபம் நடந்து கொண்டிருந்தது. எங்களைச் சுற்றியிருந்த கடன்கள் முட்டு முட்டாக நின்று கொண்டிருந்தன. தாரணியின் கல்யாணத்துக்காக அப்பா பட்டிருந்த கடன் மலையாக இருந்தது. அது பெரிய அளவில் கரைந்து, அதன் அடையாளம் மட்டும் சில இடங்களில் நின்று விட்டன. நான் வேலை ஒன்று தேடத் தொடங்கினேன். பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்துப் பார்த்து மனு எழுதிப் போட்டுவிட்டு, பதில் வருகிறதா என்று தபால்காரனை எதிர் பார்த்து நிற்பேன்.

ஒரு நாள் 'தாரிணி' என்று தபால்காரன் கூப்பிடுவதைக் கேட்டு வியந்து ஓடினேன். கடிதத்தை வாங்கிப் பார்த்தேன். நாங்கள் முன்பு இருந்த ஊருக்கு எழுதப்பட்டு, இங்கே திரும்ப அனுப்பப்பட்டிருந்தது. கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்:

'அன்புள்ள தாரிணி,

நான் உனக்குத் துரோகம் செய்துவிட்டேன். இத்தனை காலமும் என்னைப் பிரிந்து நீ வாழும்படி செய்த முறையில் நான் பொறுப்பற்றவனாக இருந்திருக்கிறேன். இதற்கு ஒரு காரணமும் இல்லை. நானே அறியாத சக்தி ஒன்று என்னைப் பிடித்து ஆட்டி இந்த நிலையை ஏற்படுத்திவிட்டது. எனக்கு ஏதாவது 'பிஸினஸ்' செய்ய வேண்டும் என்ற தூண்டுதல் ஏற்பட்டு, அதற்காக வேண்டி யிருந்த முதல் வீட்டுத் தொகையை ஒரு கற்பனையாகக் கொண்டு அதைத் தேடி அலைந்தேன். என் வீட்டினர் என் முயற்சிக்கு எதிராக இருந்தனர். நான் பார்த்து வந்த ரெவின்யூ இலாகா குமாஸ்தா உத்தியோகமே என் வாழ்க்கை இலட்சியமாக இருக்க வேண்டுமென்று கருதினர்.

எல்லா எதிர்ப்புக்களுக்கும் இடையே முன்னேறி, இப்போதுதான் என் கனவை நனவாக்கி யிருக்கிறேன். நான் ஒரு பிஸினஸ் தொடங்கி விட்டேன். உன்னை வந்து அழைத்துப் போவதற்காக நமக்குச் சௌகரியமான இடம் பார்க்கச் செய்திருக்கிறேன். அதை இரண்டு நாட்களில் முடித்துக் கொண்டு நான் வருகிற தேதி, நேரம் பற்றித் தந்தி கொடுக்கிறேன்.

அன்புள்ள ஜவந்திநாதன்

பி.கு. வஸந்திக்குச் சொல்லவும்:

நான் இன்னும் மறுமணம் செய்து கொள்ளவில்லை. அவள் என் வாயைக் கிண்டியதால் நான் அவள் மனத்தைக் கிண்டி வைத்தேன்.'

கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு 'தாரிணி' என்று கதறினேன். அப்பா ஓடி வந்து என்னைச் சமாதானம் செய்யப் படாத பாடு பட்டது இன்னமும் நினைவிருக்கிறது.

ஆறு வருஷங்கள் விடாமல் முயன்ற பிறகு இப்போதுதான் ஆறு மாதங்களுக்குப் பிறகு எனக்குப் பெங்களூரில் வேலை கிடைத்தது. தாரிணியைப் பிரிந்த பிறகு ஏற்பட்ட கொந்தளிப்புக்கள் அடங்கி, எங்கள் வாழ்க்கை பெரும் வெள்ளம் வடிந்த பின் எஞ்சிய சிறு ஓடையின் தெள்ளிய நீர் ஓட்டம் போல் கடந்து கொண்டிருந்த சமயத்தில் இன்று மீண்டும் ஜவந்திநாதனைக் கண்டதும் என் உள்ளம் காட்டாறுகப் பெருகி விட்டது.

மறு நாள் நான் பஸ் ஸ்டாண்டையடைந்த பொழுது அங்கே ஜவந்திநாதனைக் கண்டேன். நான் காரியாலயத்துக்குப் போக வேண்டிய பஸ்ஸுக்குத்தான் அவரும் நின்றுகொண்டிருந்தார். வயது கொஞ்சம் முதிர்ந்திருந்தாலும் அந்தப் பழைய கம்பீரமும் கண்ணொளியும் இப்பொழுதும் சுடர் விட்டுக் கொண்டிருந்தன. முதலில் அவரே என்னைப் பார்த்துப் பேசத் தொடங்கினர்: ''வஸந்தியா! இங்கேயா இருக்கிருய்? எனக்குத் தெரியாதே!... அப்பா சௌக்கியமாக இருக்கிறுரா?'' என்று கேட்டு முடிக்குமுன்பே அவர் குரல் அழுகையில் திரும்பியது. சூழ் நிலையையும் மறந்து விசும்பி, அந்த ஒலியைத் தோள் துண்டு முனையில் அடக்கிக் கொண்டார். தாரிணி விஷயம் அவருக்குத் தெரியும் என்பதை அறிந்ததும் நான் அந்தப் பேச்சை எடுக்கவில்லை.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அவருடைய குரல் இயல்பாக ஒலிக்கத் தொடங்கியது. 'எங்கே வேலை பார்க்கிருய்?' என்று என்னைக் கேட்டார். நான் சொன்னதும் தன் பிஸினஸ் விஷயமாக என் மானேஜரையும் பார்க்க வேண்டியிருந்ததைக் கூறினர். நான் அவரை வீட்டுக்கு வருமாறு கூறினேன்.

அன்று மாலையே ஜவந்திநாதன் எங்கள் வீட்டுக்கு வ ந் த ா ர். அப்பா அவரை வாருங்கள் என்று அழைக்கவில்லை; அவரிடம் பேசவுமில்லை. ஜவந்திநாதன் தாரணியும் தாமும் இருந்த புகைப்படத்தைக் கூர்ந்து பார்த்து விட்டுக் கண்ணீர் வடித்தார்.

அவர் இரண்டு நாட்கள் எங்கள் வீட்டிலேயேதான் தங்கி யிருந்தார். எங்கள் காரியாலயத்துக்கு வந்து, எங்கள் மானேஜரைச் சந்தித்துத் தம் பிஸினஸ் விஷயமாகப் பேசிச் சென்றுர். நான் அவர் இல்லாத சமயம் அப்பாவிடம் வெகுநேரம் எடுத்துரைத்துச் சொன்ன பிறகு அப்பா அவரிடம் பேசத் தொடங்கினர்.

ஜவந்திநாதன் எங்களை டாக்ஸி வைத்து அழைத்துக் கொண்டு பெங்களூரில் பார்க்க வேண்டிய இடங்களைச் சுற்றிக் காண்பித்தார். 'கப்பன் பார்க்', விதான் ஸௌதா' மியூஸியம், லால் பாக் பூங்கா முதலிய இடங்களுக்குச் சென்றேம். லால் பாக் பூங்காவில் சாப்பிட ஏற்பாடு செய்திருந்தபடி நான் சித்திரான்னங்கள் எடுத்துச் சென்றிருந்தேன். ஜவந்திநாதன் சாப்பிட்டுக் கொண்டே, ''வஸந்தி! உன்னைப் பார்த்தால் தாரிணியின் நினைவுதான் வருகிறது. அவளை அப்படியே உரித்து வைத்திருக்கிறது!'' என்றுர். அக்காவின் நினைவு என்னைப் பூரிக்கச் செய்தது; மறு கணம் துயரினால் தலை குனியவும் செய்தது. அவர் என் முகத்தைக் கூர்ந்து கவனித்ததை உணர்ந்தேன். அப்பா கைகழுவுவதற்காக ஒரு செடியோரம் சென்றுர்.

''தாரிணியை என்னால் மறக்க முடியாது, வஸந்தி!'' என்றுர் ஜவந்திநாதன்.

''எப்படி மறக்க முடியும்? நீங்கள் மறக்கவும் கூடாது'' என்றேன் நான்.

''நான் மறு மணம் செய்து கொண்டுவிடுவேன் என்று நிஜமாக நினைத்தாயா?''

''நானுக நினைக்கவில்லை. ஊர்ப் பேச்சு நினைக்கும்படி செய்தது.''

''ஊர் இப்போதுகூடத்தான் பேசுகிறது.''

''என்னவென்று?''

''நான் ஏன் மறுமணம் செய்துகொள்ளக் கூடாது என்று! நீங்கள் முன்பு இருந்த வீட்டுக்கார அம்மாள் என் துக்கத்தையும் துடைத்துப் பிறகு உபதேசமும் செய்தாள்.''

''அப்படியானால் செய்துகொள்ளுங்களேன். தாரிணி போன பிறகும் கூட அவளுடைய கணவராக உங்களுடைய இந்த ஜன்மம் கழிய வேண்டுமென்று ஆசைப்பட்டேன்...''

''உன் ஆசைப்படி ஓரளவு நடக்க முடியும், வஸந்தி! அவளுடைய உயிரையும் தோற்றத்தையும் கொண்டு வந்திருக்கிற உன்னை நான்...'' அவர் முடிக்கவில்லை; நான் பேசி முடித்துவிட்டு எழுந்தேன்.


''எனக்கு... எனக்கு... அப்பா எங்கேயோ நிச்சயம் செய்துவிட்டார்!''

திடீரென்று தோன்றிய இந்தப் பொய்யைத் துணிந்துதான் கூறினேன். அவர் முன்பு என்னிடம் விளையாட்டாகத்தான் மறுமணம் செய்து கொள்ளப் போவதாகப் பொய் சொன்னர். நான் இப்போது கூறிய பொய் வினைக்காக.

மூவரும் வீடு திரும்பியபோது மௌனமாகவே சென்றேம்; மறு நாள் ஜவந்திநாதன் என்னிடம் விடைபெற்றுக்கொண்ட போதும் மௌனமாகவே விடையளித்தேன்.

விமானம் பறந்து கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல; அது தாறுமாறுகப் போய்க் கொண்டிருந்தது. அந்த விமானத்திலுள்ள பிரயாணிகளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. இந்தச் சமயத்தில் விமான ஓட்டி உரக்கச் சிரித்தார். கோபத்தோடு ஒரு பிரயாணி, ''எதற்காகச் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே என்னைக் காணுமல் டாக்டர்கள் தவிக்கிற தவிப்பை எண்ணிச் சிரிக்கிறேன்!'' என்றுர் அந்த விமான ஓட்டி!




மிகச் சிறந்ததினால்
தையுங்கள்
உஷாவினால்
தையுங்கள்
உஷா தையல் இயந்திரம் வெகுவாக விரும்பப்படுவது அதன் நவீன அமைப்பினாலும் கம்பீரமான உழைப்பினாலும். பாகங்கள் எளிதில்கிடைக்கின்றன. இடையே மாற்றிக்கொள்ளக்கூடியவை. மேலும் விற்பனைக்குப் பிறகு உஷாவின் சேவை மிகவும் தலைசிறந்தது. சுமார் ஐம்பது நாடுகளில் உள்ள பெண்மணிகள் உஷாவின் தொல்லையற்ற வேலைத்திறமைக்கும் சேவைக்கும் உத்திரவாதமளிக்கின்றனர்.
இன்றைய நாளில் தைப்பது என்பது மிகவும் வேடிக்கையானது.
எங்கள் வசீகர தவணையில் வாங்கும் முறைகளுக்கு உங்கள் அருகாமையிலுள்ள உஷா டீலரை அணுகுங்கள்.
உஷா
தையல் இயந்திரம்
தி ஜே என்ஜினீயரிங் ஒர்க்ஸ் லிமிடெட்., கல்கத்தா-31



அத்தியாயம் ஐம்பத்தைந்து

வேடத்தைக் கலைத்தான்



மன அமைதி இழந்த ஓவியன் கறுப்புத் திரையில் சேற்றைக் குழைத்துத் தீட்டிய சித்திரங்கள் போல் அந்த முன்னிரவு நேரத்தில் பல்லவபுரம் அரண்மனையும் அதனைச் சார்ந்த கோட்டை கொத்தளங்களும் பிறவும் உருவழிந்து இருண்டு காணப்பட்டன. அரண்மனைப் பகுதிகளிலே கட்டுப்பாடற்றுத் திரிந்து கொண்டிருந்த சளுக்கியக் காவல் படைவீரர்கள் ஆடிப் பாடிக் கும்மாளியிட்டுச் சிரிக்கும் ஒலிகள் அவ்வப்போது எழுந்து அங்கு நிலவிய இடுகாட்டு அமைதியை நொறுக்கிக் குதறின. அத்துடன் அந்த வசந்த மண்டபத்துக்கு மிக அருகிலிருந்து மதம் கொண்ட யானை ஒன்று மூர்க்காவேசமாகப் பிளிறும் ஒலியும் இடையிடையே கேட்டுக் கொண்டிருந்தது.



இலவந்திகைப் பள்ளியை நோக்கிச் சிவிகையில் புறப்பட்டு விட்ட ஆந்திர இளவரசி உத்தமசீலியையே இமைக்காமல் பார்த்தவாறு இடிவிழுந்த பனைபோல்நின்று கொண்டிருந்த வில்வேலி தம் தோள்மீது யாரோ கை போடுவதை உணர்ந்து சட்டென்று திரும்பினார்.

"தளபதியாருக்கு என்ன நேர்ந்தது? ஏன் இப்படித் தளர்ந்து சோர்ந்து நிற்கிறீர்?" என்று மமதை நிறைந்த மிடுக்கான குரலில் கேட்டுக் கொண்டே இருள் பூசிக் கிடந்த வசந்த மண்டபத்தில் வந்து அமர்ந்தான் அந்தப் போலித் துறவி.


சலிப்புடன் பெருமூச்சு விட்டுத் தோளைக் குலுக்கிக் கொண்ட வில்வேலி, ''எல்லாம் வீண் முயற்சியாகி விட்டது!'' என்று முணு முணுத்தவாறு அவனருகில் சென்று தூண் ஒன்றில் சாய்ந்து உட்கார்ந்தார்.

கடுவன் பூனைகள்போல் அவ்விருவரும் ஒருவரை யொருவர் விழித்துப் பார்த்துக் கொண்டு சற்றுநேரம் மௌனமாயிருந்தனர்.

''சொல்லுங்கள், தளபதியாரே! என்ன நடந்தது? ஏன் அவள் திரும்பிப் போய் விட்டாள்?'' என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டே முன்னால் நகர்ந்து வந்தான் வேடதாரி.

தளபதி வில்வேலி தம் முகத்தை வெடுக்கென்று திருப்பிக் கொண்டு, ''நான் தான் சொல்லி விட்டேனே, எல்லாம் வீண் முயற்சி என்று!'' என்றார் விரக்தி படிந்த குரலில்.

''ஏன் ஐயா! என்னை அவள் அடையாளம் கண்டு கொண்டு விட்டாளா? என் மீது எப்படிச் சந்தேகப் பட்டாள்?''



''எப்படிச் சந்தேகம் கொண்டாள் என்று சொல்ல முடியாது. ஆனால், நீங்கள் அகளங்க அடிகள் இல்லை என்பது மட்டும் ஆந்திர இளவரசிக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது'' என்றார் தளபதி வில்வேலி.

''அது எப்படித் தெரிய முடியும்? அவள் அந்தச் சமணத் துறவியைப் பார்த்ததே இல்லை என்றீர்களே?''

''எனக்கும் அதைப் பற்றித்தான் யோசனையாக இருக்கிறது...''

''என்னை இங்கே பார்க்க வரும்போதாவது அவளிடம் அந்த நம்பிக்கை இருந்ததா?''

''அகளங்க அடிகள் வந்திருக்கிறார் என்று நான் சொன்னதை நம்பி மிகுந்த உற்சாகத்தோடு புறப்பட்டு வருகிறார் என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் இங்கு வந்த பின் அவருடைய பேச்சும் பாவனைகளும் என்னைத் திக்குமுக்காட வைத்து விட்டன. நாம் நடத்த முனைந்த சதி நாடகத்தை ஏற்கனவே அறிந்

தவர் போலவும் அதை இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ள வந்தவர் போலவுமே நடந்து கொண்டார்..''

''அதாவது, அந்தச் சமண முனிவரின் பெயரிலே வேடமிட்டு வந்திருப்பது யார் என்பதை அறிந்து போக வந்தாள் என்று சொல்லுங்கள்?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''அவ்வாறானால் என்னை அவள் அருகில் நெருங்கிப் பார்க்க முயன்றிருக்க வேண்டுமே?''

''சமண சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும் சமணத் துறவிகளிடம் மிகுந்த மதிப்பும் வைத்திருக்கும் அவர், காவியுடை தரித்த ஒரு வேடதாரியைத் தம் கண்ணால் பார்ப்பதும் பாபம் என்று எண்ணியோ என்னவோ அம்மாதிரி முயற்சி எதுவும் செய்யவில்லை.''

காவல் படை வீரர்களின் ஆடல் பாடல் அட்டகாசச் சிரிப்பொலி எல்லாம் அடங்கி விட்டிருந்தன. ஆனால் அந்த யானைப் பிளிறல் ஒலி மட்டும் பயங்கரமாகக் கேட்டுக் கொண்டே இருந்தது.

கவலையுடன் பெருமூச்சு விட்ட போலித் துறவி,



''அது சரி, ஐயா! இந் நாட்டுக்கு வந்திருக்கும் விஷயமாக இப்போது அவள் என்ன முடிவில் இருக்கிறாள்?'' என்று வெகு அக்கறையாக வினவினான்.

''நம் சக்கரவர்த்தி விக்கிரமாதித்தர் பல்லவபுரம் வருவதற்கு முன் வரையில் ஆந்திர இளவரசி அவ்விஷயத்திலே மிகுந்த ஆர்வமும் உற்சாகமும் கொண்டிருந்தார் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. தமிழ் நாட்டை முழுக்க முழுக்கச் சமணமயமாக்கிவிட வேண்டுமென்ற வேட்கை அவரிடம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. ஆனால் இப்போதோ அவருடைய நாட்டம் அதிலே சிறிதும் இல்லை என்றே தோன்றுகிறது...''

''நீங்கள் எப்படி இந்த முடிவுக்கு வந்தீர்கள்?''

''அவர் இங்கு வந்திருக்கும் இலட்சியப் பணிக்கான திட்டங்களைத் தெரிவிக்கும்படி கேட்டேன். தம் பெரிய தந்தையாரை நேரில் சந்தித்த பிறகே அது

பற்றிப் பேச இயலுமென்று அலட்சியமாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டார்.''

''சளுக்கிய மன்னர் இங்கு வந்துசென்ற விஷயம் அவனுக்குத் தெரியாதா?''

''நானே அவரிடம் சொன்னேன்; ஆனால் அது ஏற்கனவே அவருக்குத் தெரியும்போல் இருக்கிறது!''

''அவள் எப்படி அதை அறிந்திருக்க முடியும்?''

''அவருடைய சிவிகை தூக்கிகளில் ஒருவனான நாகோதரன் என்பவன் மூலம் அவ்விஷயத்தை அறிந்திருப்பார் என்று நினைக்கிறேன்....'' எனத் தயக்கத்துடன் சொன்ன வில்வேலி சில விநாடிகளுக்குப் பின் மேலும் கூறினார்: ''நம் சக்கரவர்த்தியவர்கள் உறையூரிலிருந்து இங்கு வந்ததும் அந்தச் சிவிகைதூக்கி நாகோதரனால் பெருவள நல்லூரிலே எனக்கு ஏற்பட்ட சங்கடங்களைக் கூறினேன். அதைக் கேட்டுச் சினமுற்ற மன்னர்பிரான் அவனைச் சித்திரவதை செய்து கொல்லும்படி கட்டளையிட்டார். இலவந்திகைப் பள்ளி நந்தவனத்தில் வைத்து நம் வீரர்கள் அந்தத் தண்டனையை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். நாங்களும் அதே இடத்தில் நின்று பல முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பாண்டிய நாட்டின் மேல் படையெடுக்கவிருப்பது, அதன் பின் ஆந்திர நாட்டைச் சளுக்கிய சாம்ராஜ்யத்துடன் இணைத்துக்கொண்டு விஷ்ணுவர்த்தனரை முடியிழக்கச் செய்து விரட்டியடிப்பது; பழையாறைச் சோழரின் கூட்டுறவோடு பல்லவ அரசபீடத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டு, அவருடைய பெண்ணை எடுத்து உறவு கொள்வது முதலான விஷயங்களைப் பேசினோம். பிறகு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றோம். நாங்கள் சென்ற பின் எதிர்பாராத விதமாக அங்கு ஆந்திர இளவரசி வந்திருக்கிறார். அவரைப் பார்த்ததும் அந்தச் சிவிகைதூக்கியைச் சித்திரவதை செய்து கொண்டிருந்த நம் வீரர்கள் பயந்து அவனைக் குற்றுயிரும் குறையுயிருமாக விட்டுவிட்டு ஓடிவிட்டிருக்கிறார்கள். தம்முடைய அனுமதியின்றித் தம் பணியாளனுக்குத் தண்டனை வழங்கியதை அறிந்து சினமுற்ற இளவரசி, என்னிடம்கூடத் தெரிவிக்காமல் உடனே அவனைத் திரமிள சமண சங்கத்தார் நடத்தும் ஆதுர சாலைக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அதோடு நில்லாமல், மறு நாள் அந்த ஆதுரசாலைக்குப் போய் அவனைப் பார்த்து விட்டும் வந்திருக்கிறார். எனவே, சாகப் போகிறவன் தானே என்ற நினைப்பில் அச் சிவிகை தூக்கியின் காதுபட நாங்கள் பேசியதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த அவன் அவற்றைத் தன் இளவரசியிடம் சொல்லி விட்டிருப்பான் என்றே எனக்குத் தோன்றுகிறது....''

கோபாவேசத்துடன் தரையை ஓங்கிக் குத்திய போஷித் துறவி, ''அந்த அற்பப் பதர் நாகோதரன் எங்கே இருக்கிறான்? அவனை இங்கே இழுத்து வரச் சொல்லுங்கள்!'' என்று கூவினான்.

''அவன் இப்போது ஆதுரசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகிறான். ஆயினும் அவனை உடனே அழைத்து வரும்படி ஆள் அனுப்பி யிருக்கிறேன். இன்னும் சற்று நேரத்தில் வந்துவிடுவான்'' என்றார் வில்வேலி.

கார் மேகங்கள் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதுவது போன்ற பேரொலி. அந்த மதம் கொண்ட யானையின் பிளிறல் ஒலிதான் அப்படி இடியோசை போல் கேட்டது.

இருளை ஊடுருவிப் பார்த்தவாறு ஏதோ சிந்தனையில் இருந்த வில்வேலி சட்டென்று திரும்பி, ''ஆமாம்; அந்த அப்பாவி அகளங்க அடிகளை நீங்கள் நடுவழியிலே தீர்த்துக் கட்டிவிட்டு வந்த விவரம் பற்றி இதுவரை என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே?'' என்று இழுத்தாற்போல் வினவினார்.

இதைக் கேட்டுக் கடகடவென்று நகைத்த போஷித் துறவி பெருமை வழியும் குரலில் கூறினான்: ''எனக்கு நீங்கள் அனுப்பிய இரகசியச் சேதிப்படி எழெட்டு வீரர்களைத் துணைக்கு அழைத்துக்கொண்டு அந்தச் சிரவண பெள்குளத்துச் சமண சங்கத் தலைவரின் பல்லக்கைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தேன். பெருவளநல்லூரை அடைந்தபோது இருட்டும் வேளையாகி விட்டதால் அன்றிரவு அங்கேயே தங்கிவிட்டு மறு நாள் காலை புறப்படலாம் என்று அகளங்க அடிகள் சொன்னாராம். இரவுக் காலங்களில் சமணத் துறவிகள் பயணம் செய்வதில்லை அல்லவா? ஆனால், அவரை அழைத்து வந்த நம் பல்லக்குத் தூக்கிகள் அவ்வேண்டுகோளை ஏற்காமல் ஏதோ சாக்குப்போக்குச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து பயணமாகி யிருக்கிறார்கள். ஆலம்பாக்கம் ஏரிக்கு வடக்கே — பெருவளநல்லூர்ச் சாலையில் — பல்லக்கு வந்து கொண்டிருந்தபோது, அதுவரை அதைப் பின்தொடர்ந்து வந்த நான் ஏற்கனவே திட்டமிட்டபடி என் ஆட்களை ஏவி விட்டுப் பல்லக்கை மடக்கித் தாக்கும்படி கட்டளையிட்டேன். நம்முடைய திட்டம் அந்தப் பல்லக்குத் தூக்கிகளுக்கும் தெரியக் கூடாது என்பதா

லேயே அப்படி வேற்றாட்கள் தாக்கு வதுபோல் தாக்கச் செய்தேன். என்னு டைய வீரர்களுக்கும் பல்லக்குத் தூக்கி களுக்கும் கடுமையான சிலம்பச் சண்டை நடந்து கொண்டிருந்தபோது, நான் பல்லக்கினுள்ளிருந்த அகளங் கரை நையப் புடைத்துக் கழுத்தை நெரித்துச் சாலையோரம் தூக்கி எறிந்துவிட்டுப் பல்லக்கில் ஏறி அமர்ந் தேன். சண்டையிட்டுக் கொண்டிருந்த என் வீரர்கள் இருளில் ஓடி மறைந்து விடவே, விவரம் தெரியாத பல்லக்குத் தூக்கிகள், தொடர்ந்து தம் பயணத்தை மேற் கொண்டனர். பல்லவபுரம் அரண்மனையிலே அகளங்க அடிகளாக நான் வந்து இறங்கினேன்.''

இந்த நெஞ்சுறுத்தும் விவரங்களை ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்த வில்வேலி நீண்ட பெருமூச்சு விட்டு, ''ஹும்! கடுகளவு பயனுமின்றி ஒரு பெரிய மனிதரின் உயிரைப் பலி கொண்டுவிட்டோம்!'' என்று முனகினார்.

''பயனே இல்லாத பொருளாக நாம் மதிப்பது மனித உயிர் ஒன்றைத்தானே ஐயா?'' என்று சிரித்தான் போலித்துறவி.

அவனையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த வில்வேலி, ''முதலில் இந்த வேடத்தைக் கலையுங்கள். பிறகு மற்றவற்றைப் பற்றிப் பேசு வோம்'' என்று கரகரத்தார்.

''ஏன் இந்தக் கோலத்தில் என்னைப் பார்க்க உங்களுக்கே பிடிக்கவில்லையா?''

''நான் அப்படிச் சொல்லவில்லை. இந்தப் பவித்திரமான ஆடையையும் புனிதச் சின்னங்களையும் இன்னமும் அணிந்து கொண்டிருக்க வேண்டாமே என்றுதான் சொல்கிறேன்.''

''ஏதேது! தளபதியார்கூடப் பவித் திரம் புனிதம் என்றெல்லாம் பேச ஆரம்பித்து விட்டாரே! எப்போதிருந்து இதிலெல்லாம் நம்பிக்கை?''

''நம்பிக்கை உண்டோ இல்லையோ, ஆனால் இம்மாதிரி ஆடைகளும் சின் னங்களும், மனிதமனத்தை மாற்றும் சக்தி படைத்தவை என்பதில் மட்டும் எனக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டு.''

''உண்மைதான் ஐயா! கடந்த ஐந் தாறு தினங்களாக இந்தத் துறவி வேடத்தில் இருந்து வரும் நான் என்னை யறியாமலே ஏதோ ஒருவித மாறுத லுக்கு உள்ளாகிக் கொண்டிருப்பது போலத்தான் தோன்றுகிறது. அதை நினைத்து நானே சில சமயம் பயந்து கொண்டுமிருக்கிறேன்!'' என்று வெறுப் புடன் கூறிக் கொண்டே சிகையை அழுத்தி, மழுக்கிய தலைபோல ஆக்கிக் கொள்ள உதவிய தலை உறையையும், கையிலிருந்த மயிற்பீலிக் குஞ்சத்தையும், கமண்டலத்தையும், போர்த்தி யிருந்த காவியுடையையும் மண்டபத்தின் ஒரு மூலையில் வீசி யெறிந்தான்.

அவனும் வில்வேலியும் அங்கிருந்து எழுந்து விளக்கேற்றிய அரண்மனை முன்றிலை நோக்கி நடந்தனர்.


அத்தியாயம் ஐம்பத்தாறு

விநயாதித்தன்


யார் இந்த வாலிபன்? அவனுக்குச் சுமார் முப்பது வயது இருக்கும். சுட்ட செங்கல் நிறமாயிருந்த அவன் உடலின் ஒவ்வோர் அங்கமும் வாட்ட சாட்ட மான வளர்ச்சி பெற்றுத் திண்மைப் புடைப்புடன் காணப்பட்டது. குறுகத் தரித்த சுருண்ட கேசம் தலையில் கூடை போல் அடர்ந்திருந்ததால் அவனுடைய நெடிய தோற்றம் சற்றே அமுங்கினாற் போல் தோன்றினாலும் அவனது நீண்ட முகம் நிமிரும்போது அந்தக் குறை அத் தனை பெரிதாகத் தெரியவில்லை. நீண்ட முகத்துக்கு ஏற்ற தடித்த உதடுகள். கொட்டையெடுத்த முந்திரிப் பழத்தை உதடுகளுக்குமேல் ஒட்டி வைத்தாற் போன்ற மூக்கு. வீங்கிப் புடைத்த இமைச் சருமத்தின் அடியிலே ஒடுங்கிப் பளபளக்கும் சிறிய கண்கள் — என்றிவ் வாறு விளங்கிய அவன், கலகலவென்று சிரித்துக் கொண்டே கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''சளுக்கிய இளவரசர் விநயாதித் தரை இப்போதுதான் என்றால் மகிழ்ச்சி யுடன் பார்க்க முடிகிறது!'' என்று கூறி மெல்ல நகைத்தார் வில்வேலி.

இவ்வளவு நேரம் சமணத் துறவி வேடத்தி லிருந்த விநயாதித்தன், ''இல்லை, இல்லை! நீங்களும் என் தந்தை யாரும் சேர்ந்து என்னைப் பரதேசியாக்கி விடப் பார்த்தீர்கள்!'' என்று சொல்லி முகத்தைச் சுளித்தான். பிறகு அவசர மாகத் திரும்பி, ''அது சரி, ஐயா! பயனே இல்லாமல் ஒரு மனித உயிரைப் பலிகொண்டு விட்டோம் என்றீர்களே, அந்தக் காரியத்தை நீங்கள்தானே செய்யச் சொன்னீர்கள்? ஆந்திர இள வரசியின் இலட்சிய விஜயத்தை நமக் குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள் ளலாம் என்ற நமது முந்தைய திட்டத் தைக் கைவிட்ட பின், அந்தச் சிரவண பெள்குளத்துச் சமண சங்கத் தலைவரை அநாவசியமாக இந்த நாட்டுக்கு ஏன்



லிப்டன்
LAOJEE
லாவோஜி டீ
சிக்கனத்தின் சின்னம் சிறப்பின் சிகரம்
LIPTON'S
LAOJEE
THE DUST TEA
FOR THE HOTEL








எழுதுவதில்
கவர்ச்சியும்
இன்பமும்
பெறுவதற்கு
Iris
INKS
ஐரிஸ் இங்குகள்
5 மங்காத
நிறங்களில்



பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணா
ஸ்திரீகள் ஆரோக்ய
சௌபாக்யத்திற்கு
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்
சென்னை-17.

வரப் பண்ணினீர்கள்? அப்படி வந்தவரை என்னை விட்டுக் கொல்லச் செய்து அவரைப் போல் வேடந் தாங்கப் பணித்தீர்கள்? இவை யெல்லாம் தேவையேயில்லாத வீண் காரியங்கள் அல்லவா?'' என்று கேட்டான்.



புதிதாக வேலைக்கு வந்தவர் :- என்ன சார்; இந்த ஆபீசில் [illegible] சகஜமா?

''அவசரப்படாதீர்கள், இளவரசே! சளுக்கிய மாமன்னர் உங்களைவிட அறிவிலும் ஆற்றலிலும் வீரத்திலும் விவேகத்திலும் மூத்தவர். அவர் எந்த ஒரு காரியத்தையும் சிந்திக்காமல் செய்ய மாட்டார். பல்லவ நாட்டில் சமண சமயம் மறுமலர்ச்சி பெறுமாயின் அது நம் ஆட்சி உறுதிப்பாட்டுக்குப் பேருதவியாக இருக்கும் என்று எண்ணியே ஆந்திர இளவரசியை இந் நாட்டுக்கு வரவழைத்தோம். அதே நோக்கத்துடன்தான் அகளங்க அடிகளையும் இங்கு வரப் பண்ணினோம். ஆனால் இந் நாட்டு நிலைமைகளை ஊன்றிக் கவனித்தபோது அந்த முயற்சி வெற்றி பெறுதுபோல் எங்களுக்குத் தோன்றியது. ஏனென்றால், சுயாட்சி காலத்தில் மதமாற்சரியங்களாலும் கொள்கை வேறுபாடுகளாலும் பிளவுபட்டு விரோத குரோதத்துடன் வாழ்ந்து வந்த சைவர்களும் சமணர்களும் வைணவர்களும் பௌத்தர்களும் இப்போது வியக்கத் தக்க விதமாக ஒன்றுபட்டு ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல் நேசம் பூண்டு நிற்கிறார்கள். தேசிய நெருக்கடி உணர்ச்சி ஒன்றே இப்போது அவர்களிடம் தலை தூக்கி நிற்கிறது. பிற சமயத்தாரை விடச் சமணர்கள் தாம் நம்மைப் பெரிதும் வெறுக்கிறார்கள். தமது மாபெரும் பொது எதிரி என்று நம்மை அவர்கள் எதிர்க்கிறார்கள். இங்குள்ள திராமிள சமண சங்கத் தலைவரான சமந்தபத்திரர் என்பவரை நான் நேரில் சந்தித்துப் பேசிய போது இந்த உண்மை தெள்ளத் தெளிவாகத் தெரியலாயிற்று. எனவேதான் நாங்கள் முதலில் போட்ட திட்டத்தை உடனடியாக மாற்றிக் கொண்டோம். படை பலம் கொண்டு கைப்பற்றிய ஒரு நாட்டில் ஸ்திரமான ஆட்சியை நிலைநாட்ட முடியவில்லையென்றால் பக்கத்து நாடொன்றின் மீது பாயவேண்டும் என்பது அரசியல் தந்திரங்களில் ஒன்று. அப்படிப் பாய்ந்தால்தான் முதலில் கைப்பற்றிய நாட்டில் பயத்தை உண்டு பண்ண முடியும். அந்தப் பயத்தை அடிப்படையாகக் கொண்டு அங்கே நிலையான ஆட்சிக்கு வழிகோலிவிடலாம். இது தவிர, பல காலம் முயன்று கைப்பற்றிய நாடு கை நழுவிப் போய்விடாமல் இருக்க வேண்டுமானால் அதன் பக்கத்தில் மற்றொரு பலம் பொருந்திய நாட்டை விட்டு வைக்கக் கூடாது. அவ்வாறு விட்டு வைத்தால் அது என்றைக்கிருந்தாலும் ஆபத்தாக முடியும். இதுவும் தவிர, வெற்றி பெற்ற ஒரு நாட்டில் அதை வெற்றி கொண்ட படை வீரர்களை அதிக நாட்களுக்கு வெறுமனே கட்டிப் போட்டு வைத்திருப்பதும் கூடாது. இவையெல்லாம் உத்தேசித்துத்தான் நம் மன்னர்பிரான் விக்கிரமாதித்தர் இந்தப் பல்லவ நாட்டின் தெற்கு எல்லையில் பலம் பொருந்திய சாம்ராஜ்யமாக விளங்கும் பாண்டிய நாட்டின்மேல் படையெடுக்கத் தீர்மானித்தார். அதற்கான ஏற்பாடுகளிலும் இப்போது தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறார்...''

சளுக்கிய இளவரசன் சட்டென்று குறுக்கிட்டு, ''இதெல்லாம் எனக்குத் தெரிந்த விவரங்கள்தான் தளபதியாரே! சமண சமயத்தின் துணை கொண்டு நம் ஆட்சியை இங்கே நிலைநாட்ட முடியாதென்பது தெரிந்த பின்னும், அதற்காக வரவழைக்கப்பட்ட ஆந்திர இளவரசியை உடனடியாக வேங்கிக்குத் திருப்பி அனுப்பாமல் வைத்துக் கொண்டிருப்பதும், அவளுக்காகச் சிரவண பெள்குளத்துச் சமண சங்கத் தலைவரை வரப் பண்ணியதும் ஏன் என்றுதான் கேட்கிறேன்?'' என்றான் பொறுமை இழந்த குரலில்.

வில்வேலி இதைக் கேட்டு மெல்லச் சிரித்துவிட்டுச் சொன்னார்: ''காரணம் இல்லாமல் ஒரு கடுகைக்கூட அப்பால் தூக்கிப் போட மாட்டார் நம் மன்னர் பிரான் என்பது உங்களுக்குத் தெரியாதா? பாண்டிய நாட்டின்மேல் படையெடுக்க வேண்டுமென்ற திட்டம் உருவாகு முன்னே அந்தச் சமணத் துறவிக்கு நாங்கள் அழைப்பு அனுப்பிவிட்டோம். அவரும் உடனே புறப்பட்டு வருகிறார் என்னும் செய்தி எங்களுக்குக் கிடைத்தது. இந்நிலையில்

அவரைத் தடுத்து நிறுத்த இயலாது என்று தெரிந்துதான் உங்களை விட்டு அந்தப் பயங்கர நாடகத்தை நடத்தச் செய்தார் நம் சக்கரவர்த்தி. அதற்கு மற்றொரு முக்கிய காரணமும் இருக்கிறது. நம்முடைய அழைப்பின்பேரில் அச் சமண சங்கத் தலைவர் இங்கு வந்தாலும் நமக்குச் சாதகமாக நடந்து கொள்வார் என்பது நிச்சயமில்லை. இங்குள்ள நிலைமைகளை அறிந்து நமக்கு எதிராக அவர் திரும்பினாலும் திரும்பலாம். நமது சுய ரூபத்தை நாமும் அதிக நாட்கள் மூடி மறைத்து வைத்துக்கொள்ள முடியாது. நம்மை அவர் 'இனம்' கண்டு கொண்டால் நம்மீது வெறுப்படைந்து, தமக்கு மிகவும் நெருங்கிய தொடர்புடைய திரமிள சங்கத்தில் போய்ச் சேர்ந்துவிட முயற்சி செய்வார். சக்தி வாய்ந்த ஒரு மாபெரும் சங்கத்தின் தலைவரான அவர் இங்கிருக்கும் சமணர்களோடு சேர்ந்து நமக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவாரேயானால் அவற்றைச் சமாளிக்க நம்மால் இயலாது. தலைமறைவாயிருக்கும் பரமேசுவர வர்மன் அவரைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்டால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். பாண்டிய நாட்டின்மீது படையெடுக்கவிருக்கும் இந்த நேரத்தில் இங்கே அப்படியொரு சூழ்நிலை உருவாகவிடலாமா? எனவேதான் அந்தச் சமணத் துறவியைத் தீர்த்துக் கட்டிவிடுவது என்ற முடிவுக்கு வந்தோம். இனி ஆந்திர இளவரசியைக் கொண்டு சாதிக்க எண்ணிய காரியத்தைக் கைவிட்ட பின்னும் அவரை வேங்கிக்குத் திருப்பி அனுப்பாமல் இங்கே நிறுத்தி வைத்திருப்பதன் காரணத்தைச் சொல்கிறேன். ஆந்திர மன்னர் விஷ்ணுவர்த்தனர் நெடுங்காலமாகத் தம் மனத்தில் வைத்திருந்த ஓர் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகத் தம் அருமை மகளை இந் நாட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அந்தப் பெண்மணியும் அதே வேட்கையுடன் தன்னந் தனியாக இவ்வளவு தூரம் துணிந்து வந்திருக்கிறார். நாங்களும் அவரது விருப்பம் நிறைவேற உதவி புரிவதாக வாக்களித்தோம், வரவேற்றோம். அப்படிச் செய்துவிட்டுத் திடீரென்று அவரைத் திரும்பிப் போகும்படி சொன்னால் அதன் விளைவு என்ன ஆகும்? ஆந்திர இளவரசியாருக்கும் அவருடைய தந்தையான விஷ்ணுவர்த்தனருக்கும் நம்மீது மனக் கசப்பு ஏற்படும். அத்துடன், ஆந்திர நாட்டைப் பற்றிய நமது பிற்காலத் திட்டத்தை அந்தச் சிவிகைதூக்கி நாகோதரனின் மூலம் அறிந்திருந்தால் அக் கசப்பு உணர்ச்சி இன்னும் கடுமையாவதோடு அவர்களை அது எச்சரிக்கைப் படுத்தியும் விடும். இந்தப் பல்லவ நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு அதன் ஆட்சியை நிலைப்படுத்துவதற்காக நாம் அனைவருமே இங்கு தங்கி விட்டிருக்கிறோம். நம்முடைய சொந்தச் சளுக்கிய நாடு அங்கே போதிய பாதுகாப்பு இன்றி அமைச்சர் குழுவின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது. ஆந்திர மன்னரையே அதன் தாற்காலிகப் பாதுகாவலராக நியமித்து விட்டு வந்திருக்கிறோம். இந்நிலையில், நமது உள் நோக்கத்தை அவர் புரிந்துகொண்டால், நம்மைப் பழி வாங்குவதற்காகச் சந்தடியின்றி மிக எளிதாக நம் தாய்நாட்டையே கபளீகரம் செய்துவிடலாம். அப்படிச் செய்ய அவருக்குத் துணிவு இல்லையென்றால் வேறு யாராவது ஒரு பலம் வாய்ந்தவனைச் செய்யும்படி தூண்டிவிடலாம். மேலும், அவருக்கு இருப்பது ஒரே பெண். நம்மீது கொண்ட கோபத்தால் நம்மிடம் தெரிவிக்காமலே நமக்கு எதிரிகளாக இருக்கும் ஏதாவது ஒரு நாட்டின் அரச குடும்பத்தில் மண உறவு கொள்ள முயற்சி செய்வார். அப்படி ஓர் உறவு ஏற்பட்டுவிட்டால் அப்புறம் ஆந்திர நாட்டை நமது சளுக்கிய சாம்ராஜ்யத்துடன் இணைத்துக் கொள்வதென்பது சிரம சாத்தியமாகிவிடும். இதையெல்லாம் உத்தேசித்துத்தான் இளவரசி உத்தமசீலியை வேங்கிக்குத் திருப்பி அனுப்பாமல் இங்கேயே நிறுத்தி வைத்திருக்கிறோம். ஆனால் இன்றைய நிலையைப் பார்க்கும்போது நம் திட்டம் தவிடுபொடியாகி விடும்போல் தோன்றுகிறது.'' வில்வேலியின் குரல் கம்மியது.

இடுகாட்டு அமைதி நிலவிய அந்த அரண்மனை வட்டாரத்தை ஒரு குலுக்குக் குலுக்கிப் புரட்டி எடுப்பதுபோல் திடீரென்று அந்த யானையின் பிளிறல் ஒலி பயங்கரமாக எழுந்தது.

அதிர்ச்சியுற்ற விநயாதித்தன் ''என் ஐயா! எங்கிருந்து அந்தப் பிளிறல் ஒலி கேட்கிறது?'' என்று வினவினான்.

''அது ஒரு விந்தையான விஷயம். அதோ பாருங்கள், அந்தப் பாழடைந்த மண்டபத்தில் ஒரு யானை கட்டிப் போடப் பட்டிருக்கிறது. அது பல்லவ மன்னன் பரமேசுவர வர்மனுடைய பட்டத்து யானையாகும். அதன் பெயர் 'அரிவாரணம்'. காஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றியதும் அங்கிருந்து இதை இங்கே கொண்டு வருவதற்கு நாங்கள் பட்ட பாடு இருக்கிறதே, அது சொல்லுந் தரமன்று. இத்தனை மூர்க்காவேசமான யானையை நான் பார்த்ததே இல்லை. அதே சமயம் இதுபோன்ற புத்தியுள்ள ஒரு மிருகத்தை நான்

கண்டதுமில்லை. இங்கு வந்த நாள் முதல் இப்படித்தான் ஓயாமல் பிளிறிக்கொண்டும் அட்டகாசம் செய்து கொண்டும் இருக்கிறது. ஏதேதோ முயற்சி பண்ணிப் பார்த்தும் அதை அடக்கவே முடியவில்லை. பல நூறு யானைகளைப் பழக்கி வெற்றி கண்ட நம் யானைப் படைவீரர்கள் இந்த யானையின் அருகில் நெருங்கவே பயப்படுகிறார்கள். இறுதியில் இங்குள்ள ஓர் அடிமைப் பணியாள் அதை அடக்கி அமைதியுறச் செய்யும் வழியொன்றைக் காட்டினான். அது என்ன தெரியுமா? நந்திச் சின்னம் பொறித்த பல்லவ நாட்டுக் கொடியை அதன் கண்ணெதிரே காட்டினால் போதும்; உடனே பசுப் போல் சாதுவாகி அடங்கிவிடுகிறது. அடங்குவதோடு மட்டுமல்ல; அந்தக்கொடியை அலுப்புச்சலிப்பின்றித் தன் துதிக்கையை வளைத்தும் முன்னங் கால்களை மடித்தும் வணங்கிக் கொண்டே இருக்கிறது. * நந்திக் கொடியை மறைத்துவிட்டால் பழையபடி பிளிறி அட்டகாசம் செய்ய ஆரம்பித்துவிடுகிறது. நமது சளுக்கிய வராகக் கொடியைக் கண்டு விட்டாலோ அரண்டு அமளி துமளி செய்து விடுகிறது.''

''இப்படிப்பட்ட ஒரு பயங்கர யானையை இன்னமும் ஏன் உயிரோடு வைத்திருக்கிறீர்கள்?''

''நமக்குப் பிடிக்காத — நமக்கு அடங்காத — எதையுமே அழித்துவிட வேண்டியதுதான்! ஆனால், இந்த யானையைக் கொல்லாமல் வைத்திருப்பதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. பல்லவ மன்னனின் பட்டத்து யானையான இதை எப்படியாவது அடக்கியொடுக்கிப் பழக்கி அதன்மேல் நம் வீர மாமன்னர் விக்கிரமாதித்தரை ஏற்றிக் காஞ்சி நகர் வீதியிலே பவனியாகக் கொண்டு வர வேண்டும் என்பது என் ஆசை!'' — கடகட வெனச் சிரித்தார் வில்வேலி.

இந்தச் சமயம், அங்கே வேர்க்க விறுவிறுக்க ஓடிவந்து நின்றான் ஒரு சளுக்கிய வீரன். அவசரமாகத் தலைநிமிர்ந்த வில்வேலி, ''ஏனடா! எங்கே அந்தச் சிவிகைதூக்கி நாகோதரன்?'' என்றார்.

''நேற்றுக் காலையே அவன் ஆதுரசாலையை விட்டு வெளியேறி விட்டானாம் ஐயா!''

''என்ன! வெளியேறிவிட்டானா?''

''ஆம், ஐயா! அந்த மருத்துவ விடுதியின் தலைவர் அப்படித்தான் சொன்னார். உடனே இலவந்திகைப் பள்ளியிலும் விசாரித்தேன். யாருக்கும் அவனைப் பற்றித் தகவல் தெரியவில்லை.''

தளபதி வில்வேலி அவனை வெறித்துப் பார்த்தார்.

''இன்னொரு விஷயம்!... சிரவண பெள்குளத்துச் சமண சங்கத் தலைவரான அகளங்க அடிகள் அந்த ஆதுரசாலையிலே இருக்கக் கண்டேன்!''

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த வில்வேலியும் விநயாதித்தனும், ''என்ன சொன்னாய்? அகளங்க அடிகளையா பார்த்தாய்? அவரை எப்படி உனக்குத் தெரியும்?'' என்று ஒரே குரலில் கூவினர்.

''சிரவண பெள்குளத்துக்குப் போன பல்லக்குத் தூக்கிகளில் நானும் ஒருவன் என்பதை மறந்து விட்டீர்களா ஐயா?'' என்றான் வீரன் பணிவோடு.

வில்வேலியும் விநயாதித்தனும் ஒருவரை யொருவர் பார்த்து விழித்தனர். சற்று நேரம் கழித்து, ''சரி; நீ போகலாம்'' என்று அந்த வீரனை விரட்டிவிட்டுத் திரும்பிய வில்வேலி, ''இளவரசே, அகளங்கரைத் தீர்த்துக் கட்டிவிட்டதாகச் சொன்னீர்கள். ஆனால் அவர் அந்தத் திரமிள சமண சங்கத்தில் இருக்கிறாராமே?'' என்றார்.

திக்கித் திணறிய விநயாதித்தன், ''எனக்கும் அதுதான் விந்தையாக இருக்கிறது....'' என்று குழறினான்.

''சரிதான்; ஆந்திர இளவரசிக்கு நம்முடைய சதி நாடகம் அனைத்தும் தெரிந்து விட்டது! நேற்றுக் காலை அந்த ஆதுரசாலைக்குப் போன அவர் அங்கே உண்மையான அகளங்க அடிகளைப் பார்த்திருக்கிறார்! அதனால்தான் என்னிடம் அத்தனை அலட்சியமாகப் பேசியிருக்கிறார்! இந்த அரண்மனையில் தங்கியிருக்கச் சம்மதியாமல் பெருவள நல்லூர் சேதியக் கலைஞர் இல்லத்துக்குப் போக அவர் அனுமதி கேட்டதிலும் ஏதோ உட்பொருள் இருக்கிறது!'' என்றார் அடைத்த குரலில்.

''கவலைப்படாதீர்கள், தளபதியாரே! இப்போதே போய் அந்த அகளங்கரையும் சமந்தபத்திரரையும் பிடித்து வந்து இந்தக் கோட்டைச் சிறையில் அடைத்து வைக்கிறேன்'' என்று உறுமிக்கொண்டு எழுந்தான் விநயாதித்தன்.

''வேண்டாம்! அப்படிச் செய்தால் அது நாமே நம் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுக் கொண்டதுபோல் ஆகிவிடும்! தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கும் வீண் காரியத்தை நாம் ஏன் செய்ய வேண்டும்?'' என்றவாறு அலட்சியமாக எழுந்து நின்ற வில்வேலி, சளுக்கிய இளவரசனின் காதில் ஏதோ இரகசியமாகச் சொன்னார்.

அதைக் கேட்டு அதிர்ச்சியுற்றுத் திரும்பிய விநயாதித்தன், தொலை தூரத்தில் கருங் குன்றம்போல் நின்று பிளிறிக் கொண்டிருந்த அந்த யானையைப் பயப் பிராந்தியுடன் விழித்துப் பார்த்தான்.

(தொடரும்)

---

* இந்தக் காட்சியையே இவ்வார அட்டைப்படத்தில் சித்திரித்திருக்கிறார் ஓவியர் வினு.



tik-20
டிக்-20
மூட்டைப்பூச்சிகளைக்
கொல்லுகிறது
Geigy
கெய்கி
டயகினுன்
டாடா-பைஸன் தயாரிப்பு



காந்தரால்
கல்கெமிகோவின்
காந்தராலில் சுத்தமான
ஆலிவ் எண்ணெய்
கலந்திருக்கிறது
அதனுல்
கூந்தலின்
வளர்ச்சிக்கு
பல வகையிலும்
அனுகூலமாகிறது
Kantharol
VIDYARATI
ஸ்ரீ கல்கத்தா கெமிகல் கோ. லிட்.
தென் இந்திய ஆபீஸ் 149, பிராட்வே, சென்னை-1



5. தலை சுற்றல் மயக்கம்!

"வாங்கோ! வாங்கோ! என்ன புதுச்சேரியிலிருந்தா?" என்று வரவேற்றேன் நண்பரை.

நண்பரோ ஒரு தடியைக் கையிலேந்தி "லொட் லொட்" என்று ஊன்றியபடி, மற்றொரு கையால் மகனின் தோளை அணைத்தபடி தட்டுத் தடுமாறிக் கொண்டே வந்தார்.

என் வரவேற்புரைக்குப் பதிலும் சொல்லவில்லை. என் அசட்டுத்தனத்தை மறைத்தும் மறைக்காமலும் ஒரு சின்ன முறுவலை — சிரித்தும் சிரிக்காத தோற்றத்தை — யாவது பூண வேணுமே! அதுவுமில்லாமல் "ஆம், ஆம்" என்று முணுமுணுத்தபடி உள்ளே வந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

"என்ன புதுச்சேரியிலிருந்து வருகிறீர்களா? போலீசுக்குப் போன் பண்ணட்டுமா?" என்று கேட்டேன்.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? போலீசுக்குப் போன் பண்ணுவானேன்?" என்று வினவினார் நண்பர்.

குரலில் நடுக்கமோ (கமகங்கள்) இழுப்போ (குழைவு கார்வை) எதுவுமில்லை. கொஞ்சம் கருநிதான் குறைவாக இருந்தது. எனக்குச் சிறிது நிம்மதி ஏற்பட்டது.

"சந்தோஷம்! நடந்து வந்த கோலத்தைப் பார்த்து ஒரு சமயம்..."

"ஒரு சமயம்....?"

"ஒருசமயம் ஏதாவது ப்ரொஹிபிஷன் வகையாக.... அதுதான் புதுச்சேரி பக்கத்தில்...."

நண்பர் ஒருவித சலிப்புடன், "நாசமாய்ப் போச்சு, போமய்யா! அதெல்லாம் ஒன்றுமில்லை. நேற்று ஒரு நண்பர் வீட்டில் விருந்து. அவர்கள் கண்டதிலெல்லாம் தேங்காயை அளவில்லாமல் அரைத்துக் கலக்கி இருந்தார்கள். போதாக் குறைக்குத் தாளிதம் பொரித்தல், வறுத்தல் எல்லாம் தேங்காயெண்ணெயில். தேங்காய்ச் சாதம் — தேங்காய்ப் பாயஸம்.... ராத்திரியே ஒரு மாதிரி இருந்தது. காலையில் எழுந்தால் தலையைத் தூக்க முடிய வில்லை. ஒரே சுற்றல். ஆளைச் சுழற்றி அடிக்கிறது... நான் ஒரு பக்கம் நடந்தால்... வேறு பக்கம் கொண்டு தள்ளுகிறது. இந்த அழகில் நீங்களானால்..."

"ஏதோ அந்தக் காலத்திய நண்பர் என்று எண்ணி விட்டேன். மன்னிக்கவும். வாந்தி ஏதாவது.... "

"வந்தால்தான் தேவலையே! வயிற்றை ஏதோ சங்கடப்படுத்துகிறது. வாந்தி வர மாட்டேன் என்கிறது."

"ஆமாம், ஆமாம். சிலருக்கு இப்படித்தான். தேங்காய், தேங்காய் எண்ணெய் இவை ஒத்துக் கொள்வதில்லை. நிலக்கடலை எண்ணெய் வேறு சிலருக்கு ஒத்துக் கொள்ளாமல் இதே மாதிரி எதையோ பண்ணும்."

"போகட்டுமய்யா! இதற்கு என்ன செய்யலாம்? அதைச் சொல்லாமல் ஏதோ அகடவிகடம் பண்ணுகிறீர்களே!"

"ஒரு துண்டு சுக்கு, கொஞ்சம் ஜீரகம், கொஞ்சம் தனியா இவைகளை இட்டு ஒரு சட்டி வெந்நீரைக் காய்ச்சி வைத்துக்கொள்ளுங்கள். அவ்வப்போது ஒரு முழுங்கு —"

"என்ன...?"


"ஐயா! அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ் வீதம் கடக்கடக் குடித்து வாருங்கள். மற்றப்படி இன்றைய பொழுது உபவாஸம். படுக்கையை விட்டு எழுந்திருக்கவே கூடாது."

"அவ்வளவுதானு? போய் வரட்டுமா?"

"ஆஹா! புனராகமனுயச; ஸாயங்காலத்துக்குள் ஓரளவு சுமாராகும். அப்போது வெதவெதவென்ற ஜலத்தில் ஸ்நானம்...இரவு..."

"ஒரு வாய் ரசம் சாதம் சாப்பிடலாமா?"

"அடாடாடா! சோறு, சோறு! சோறு தானு சொர்க்கம்! இப்போதைய நிலைமை மாறி தெளிவு ஏற்பட்டு... பசியும் இருக்குமானுல்... சிறிது ஜீரகத்தையும் கருவேப்பிலையையும் கூட்டி வறுத்துப் பொடிசெய்து அதில் ஓர் அரை டீஸ்பூன் அளவை ஒரு கவளம் சாதத்துடன் கூட்டிப் பிசைந்து சாப்பிட்டு விட்டு மேலே முன் சொன்ன வெந்நீரைக் குடித்து விட்டுப் படுத்துத் தூங்குமய்யா. நாளைக் காலையில் நிலவரம் சரியாகும்."



"அப்படிப் பசி இல்லாவிட்டால்....?"

"களைப்பு ஏற்படாது ஸ்வாமி. வெந்நீர் செல்லச் செல்ல, விவர் நல்லபடி வர வர இந்தத் தேங்காயின் பித்தம் ஜெரிக்க ஜெரிக்கக் களைப்புநீங்கும். அப்படி ஒருகால் இரண்டாம் பக்ஷமாக இருந்தால்...."

"அதுதான் கேட்டேன். இருந்தால்..."

"சாதம் வடிக்கும் கஞ்சி இருக்கிறதே! அதில் வடித்தவுடன் கொஞ்சம் வெந்நீரும் சேர்த்து எடுத்து வைத்துச் சுடச் சுடக் கொஞ்சம் கொஞ்சம் குடியுங்கள்...."

சாரீரிகமான காரணத்தாலும் தலைசுற்றல், மயக்கம் ஏற்படலாம் என்று சொல்ல வந்

தேன். அவ்வளவுதான். இரவெல்லாம் கண் விழித்துக் கொண்டிருந்தவனுக்குக் காலையில் ஓரளவு இவ்விதம் தோன்றலாம். அதனுலெல்லாம் உடனே பிளட்பிரஷர் என்று சொல்லி விட முடியுமா? இவனைச் சற்றுப் படுத்துத் தூங்கச் சொன்னுல் போதும். அல்லது தண்ணீரில் ஸ்நானம் செய்தாலும் போதும். தலை சுற்றலும் மயக்கமும் தணிந்து போகும்.

மற்றெரு வகை தலை சுற்றல் உண்டு. என் தாயாருக்கு இது வருவதைக் கண்டிருக்கி றேன். ரயிலில் பிரயாணம் செய்தால்போதும்; பிரயாணத்தின் போது ''ஏன்தான் இந்த மரங்களெல்லாம் இப்படிச் சுற்றிச் சுற்றி வருகிறதோ!'' என்பாள். ரயில் ஒரு திசையை நோக்கிப் போய்க் கொண்டிருப்பது; அதனுல் மரங்களும் வீடுகளும் எதிர்த் திசையில் போவது போல் தோன்றுவது என்ற விதமான தெளிவு ஏற்படுவதில்லை. ஆயினும் ''இந்த ரயில் பிரயாணம்னுலே எனக்கு இப்படித் தான்'' என்பாள். அதோடு நிற்பதில்லை. ஊருக்குப் போய்ச் சேர்ந்த பிறகும் மூன்று நாட்கள் வரையில் ''இன்னும் அந்த ரயில்லே வர மாதிரியே இருக்கு. ஏன்தான் இந்தத் தாழ்வாரத்துக் கம்பமெல்லாம் சுற்றிச் சுற்றி வருகிறதோ!'' என்று சொல்லுவாள். இதற் காகப் பிளட்பிரஷர் என்று வைத்தியம் செய்யப் போமா? தானே ஒரு வைத்தியத்தையும் செய்து கொள்வாள். இஞ்சியைச் சிறிது நசுக்கி எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, தேய்த்து ஸ்நானம் செய்வாள். எப்படியோ மூன்று நான்கு தினங்களில் சரியாகி விடும். பஸ்ஸில் கொஞ்ச தூரம் போனுல் போதும். சிலருக்குத் தலை சுற்றல் மட்டுமில்லை. வாந்தி எடுக்கவும் படுத்த படுக்கையாகி விடவும் செய்யும். இதையெல்லாம் சரீரக் கூறு என்று சொல்லலாம். மொத்தத்தில், பேரிரைச்சலாலும், படுவெளிச்சத்தாலும் நரம்புகளுக்கும் ஆசயங்களுக்கும் அதிர்ச்சி ஏற்படுவது போல் வாகனங்களின் படுவேகத்தாலும் ஏற்படுவதுண்டு. இப்படித்தான் சாரீரிகமாகவும் மானசிகமாகவும் ஏற்படும் சில அனுபவங்களால் தலை சுற்றல் வருகிறது.

நாகரிக வாழ்க்கையில் வந்துள்ள சில அநுபவங்கள் காரணமாகவும், சந்தர்ப்பச் சூழ்நிலைகள் காரணமாகவும், ஆகார விஹாரங்கள் காரணமாகவும் — சாரீரிக மானஸிக இயக்கங்களின் வேறுபாடுகள் காரணமாகவும் தலை சுற்றலும் மயக்கமும் ஏற்படலாம். ஆனுல் இவை இன்று ஒவ்வொருவரும் சொல்லி வரும் இந்தப் பிளட் பிரஷர் — ரத்த அமுக்கம் அதிகரித்தல் அல்லது குறைவுபடல் என்ற காரணங்களாலும் தலைசுற்றல் மயக்கம் ஏற்படும். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த தலைசுற்றலைப் பற்றி நாமும் கொஞ்சம் விஸ்தாரமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியந் தானே! ஆகவே முதலில் இந்தத் தலை சுற்றல் ஏற்படுவதற்குக் காரணங்கள் என்ன என்பதைக் கவனிப்போம்.

1. பித்தாதிக்கத்தினுல் தலை சுற்றல் ஏற்படலாம்.

2. சொத்தைப் பல்லினுல் அடிக்கடி 'கிர்ர்' என்று தலைசுற்றல் ஏற்படலாம். சற்றைக்கெல்லாம் இது தானுகவே குறைந்து விடும்.

3. அஜீரணத்தினுல் தலை சுற்றல் ஏற்படும்.

4. சுரம் சரிவர இயங்காததால் தலை சுற்றல் ஏற்படலாம்.

5. கண்ணில் ஏற்படும் சில கோளாறுகள் காரணமாகவும் உண்டாகலாம்.

6. சரீரத்தில் ரத்தக் குறைவினுல் உண்டாகலாம்.

7. கொடுமையான மல பந்தத்தினுல் தலை சுற்றல் ஏற்படலாம்.

8. தூக்கம் கெட்டதாலோ அல்லது தூங்கினது போதாததாலோ உண்டாகலாம்

9. ரத்தத்தில் உள்ள சில தாதுப்பொருள்களின் மாறுபாட்டினுல் உண்டாகலாம்.

10. ரத்த ஓட்டத்தின் வேகமும் அமுக்கமும் அதிகரிப்பதால் உண்டாகலாம்.

இவற்றுள் கடைசியாகச் சொன்ன காரணத்தால் ஏற்படும் தலைசுற்றல், மயக்கம், பலஹீனம் சிறிது பேசினுலும் ஹிருதயத்தில் படபடப்பு — மூச்சுத் திணறல் தூக்கமில்லாமை — படுமோசமான பலஹீனம் இவற்றைத்தான் ப்ளட்ப்ரஷர் — ரத்த அமுக்கம் அதிகரித்த நிலை — என்பர். இப்படி இந்த ரத்தம் அமுக்கம் அதிகரித்ததற்குக் காரணம் என்ன? அதைச் சரிக்கட்ட என்ன செய்யலாம் என்ற வகையில் சிந்தனையைச் சிறிதும் செலுத்தாமல் — ''ரத்த அமுக்கத்தை மட்டும் குறைக்கிறேனடா, திருவாழத்தான்!'' என்று சிகிச்சை செய்வது சரியாகுமா?

இனி இக்காரணங்களை ஒவ்வொன்ருகக் கவனித்து அதனுலேற்படும் தலைசுற்றல் மயக்கங்களுக்குச் செய்து கொள்ளக் கூடிய பரிஹாரங்களையும் கவனிப்போம். (தொடரும்)

31

மார்ச்

1963

1963 மார்ச் 31 முடியவுள்ள
காலத்திற்கான

நான்காவது
மதிப்பீடு

காட்டும்
இலாபத்தில் பங்குபெற

உங்களுடைய ஆயுள் இன்சூரன்ஸ் ப்ரபோசல்களை முடிக்க வேண்டிய தேதியோ மேலே உள்ளது.

1963 மார்ச் 31ந்தேதியில் முழுக் காப்புத் தொகைக்கு (Full Sum Assured) நடைமுறையிலிருக்கும் இலாபத்துடன் கூடிய பாலிசிகள் அனைத்தும், நான்காவது மதிப்பீட்டின் விளைவாகக் கிடைக்கும் இலாபத்தில் பங்குபெற உரிமை உள்ளவை ஆகும்.

1963 மார்ச் 31ந்தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ முடிக்கப்பட்டு பாலிசிகளாக மாறியுள்ள ப்ரபோசல்கள் மட்டுமே போனசுபெறத் தகுதி யுடையனவாகும்.

நீங்கள் இன்ஷ்யூர் செய்துகொள்ள விரும்புகிறீர்கள் என்பதை நாங்கள் நன்கறிவோம். உங்கள் எண்ணத்தை உடனே செயல்படுத்தும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.


உங்களுடைய ப்ரபோசல்களை அனுப்பக் கடைசித் தேதி வரை தாமதப்படுத்தினால், போனசு பெற, குறித்த தேதியில் அவை முடிக்கப்படாமல் போகலாம். ஆகவே, உங்கள் முகவரை (ஏஜெண்டை) இன்றே நாடுங்கள். நீங்கள் அனுப்பும் ப்ரபோசல்கள் குறிப்பிடப் பட்ட தேதிக்கு முன்பே முடிக்கப்படுகின்றனவாவென உறுதி கொள்ளுங்கள்.


1963 மார்ச் 31ந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ குறைந்த தொகைக்குக் கட்டி முடிப்புச் செய்த (Reduced Paid-up) அல்லது காலாவதியாகிய பாலிசிகள் போனசு பெறத் தகுதியுடையனவாகா.

**இலாபத்துடன் கூடிய பாலிசியினை எடுத்திடுவீர்
இன்றே-இறுதி வார நெருக்கத்தைத் தவிர்ப்பீர்.**

ஆயுள் இன்சூரன்சு
போல ஆதரவு தருவது எதுவுமே இல்லை

ASP/LIC-1P-33


நான் தூங்கும் போது நீங்க எனக்கு நிறைய புடவைகள் வாங்கி வந்த மாதிரி சொப்பனம் கண்டேன்!
ஐயோ பாவம்! ஏன் அருவசியமா முழிச்சிண்டே!
உங்க வீட்டில் ராத்திரியிலே 'க்யாவ்' 'மியாவ்'ன்னு சப்தம் போடுகிறதே பூனை; அதன் காதைத் திருகி வெளியில் கொண்டு விடப்படாதோ!
நாய்: அவன் யார்? புதுசா இருக்கே!
குதிரை: அவன் தான் என் கொள்ளுப்பேரன்!
மனைவி: ஒரு பத்து ரூபாய் இருந்தாக் கொடுங்க. உங்களுக்குச் சம்பளம் வந்த வுடனே திருப்பிக் கொடுத்துடறேன்
சாமா


ஐடெக்ஸ்
கண் மை
அரவிந்த் பிந்தி
குங்கும சாந்து
EYETEX
அரவிந்த் லாபரட்டரீஸ்
தபால் பெட்டி 1415. மதராஸ் - 17


சிறந்த தரத்துடன் சிக்கனமும்
குடும்பத்தினர் அனைவருக்கும் கிடைக்கிறது
எத்தனை சிக்கனமானது! எத்தனை புத்துணர்ச்சி தருவது! இந்தப் பெரிய சைஸ் டால்க்கில் உங்களுக்கு பெயர் பெற்ற கால்கேட்டின் சிறிய தரம் கிட்டுகிறது.
எத்தனை நறுமண முடையது! எத்தனை நீடித்திருப்பது! ஸ்நானத்திற்கு பின்-வெளியே செல்லுமுன்-தாராளமாக உங்கள் உடலில் தூவிக்கொண்டு நளினமாய் விளங்குங்கள்.
எத்தனை சேர்த்தியானது! எத்தனை மிருதுவானது! கால்கேட் ஆல்-பர்ப்பஸ் டால்க்கை குழந்தை விரும்புகிறது. இளஞ்சருமத்திற்கு அது மிகவும் ஏற்றது.
COLGATE
All Purpose
TALCUM POWDER
கால்கேட்
ஆல்-பர்ப்பஸ் டால்க்
அபூர்வ மலர்களின் நீடித்திருக்கும் நறுமணங்கொண்டது!

அடங்காத பிள்ளை


சங்கரராம்

கருங்காலிப்பட்டிக்கு அதன் பெயர் ஒரு காலத்தில் பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு அதன் அருகில் இருக்கும் காடுகளில் ஒரு கருங்காலி மரத்தைக் கூடக் காண்பது அரிது. ஐம்பது அறுபது வருஷங்களுக்கு முன், தெரியாத்தனத்தால் ஆயிரக் கணக்கில் மரங்களை வெட்டிக் காட்டை அழித்து விட்டார்கள் என்றே கூற வேண்டும். அக்காலத்தில் மரத் துண்டுகளைச் சேகரித்து வைப்பதற்காகக் கட்டப்பட்ட ஒரு பெரிய ஓட்டுக் கொட்டகை ஒன்றே மிஞ்சியிருக்கிறது. அது முப்பதடி அகலத்துக்கு நூறடி நீளம் இருந்தது. அதன் முற்பகுதியைச் செப்பனிட்டு, குறுக்கே ஒரு சுவரை எடுத்து, இன்றைக்கு அதில் ஓர் ஆரம்பப் பள்ளி அமைக்கப்பட்டிருக்கிறது. பின் புறத்துக்குப் போவதற்குச் சுவரில் ஒரு கதவும் வைக்கப்பட்டிருக்கிறது.

இப்பள்ளியை வாத்தியார் சொக்கலிங்கம் வெகு திறமையுடன் நடத்தி வந்தார். அவர் குள்ளமாக இருந்ததால், குறும்புக்காரர்கள் அவருக்குக் குட்டை லிங்கம் என்று பெயர் வைத்திருந்தார்கள். ஆனால் வாத்தியார் சொக்கலிங்கம் அடக்கி ஆளும் திறமை படைத்தவர். மாணவர்களிலிருந்து, அவர்களுடைய பெற்றோர்கள் கூட அவரிடத்தில் வணக்கமாகத்தான் நடந்து கொள்வார்கள். ஆனால் அவருக்குக் கோபம் 'மூக்குக்கு மேல்' இருந்ததால், சில சமயங்களில் பலருக்கு அவர் மீது வெறுப்பு உண்டாகத்தான் செய்தது.

பள்ளியில் ஏறக்குறைய ஐம்பது சிறுவர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் பணிவுடன் நடந்து கொண்ட போதிலும், ஒருவன் மாத்திரம் அவருக்குத் தீராத தொந்தரவைக் கொடுத்துக் கொண்டிருந்தான். மாரி என்று அழைக்கப்பட்ட மாரிமுத்துவுக்கு வயது எட்டு தான். தகப்பனை இழந்தவன். தாயார் கூலி வேலை செய்து தான் பிழைக்க வேண்டியிருந்தது. ஆனால் இதைப் பற்றியெல்லாம் மாரிக்கு என்ன கவலை? தன் விளையாட்டிலும் குறும்புத்தனத்திலும் அவன் மகிழ்ந்து கிடந்தான். பக்கத்தில் இருக்கும் பையன் தன் பலகையில் எழுதியதை அழித்து விடுவான். இல்லா விட்டால், தலை மயிரைப் பிடித்து இழுப்பான். மற்றொரு சமயம் யாருடைய புத்தகத்தையாவது அவன் ஒளித்து வைத்து விடுவான். தன் பாடத்தை எப்பொழுதும் கவனிக்க மாட்டான். ஆகையால், அடிக்கடி அவன் வாத்தியாரிடம் பிரம்படிபடுவான். 'குட்டை' லிங்கத்துக்கும் அலுத்து விட்டது. அவனை எப்படிச் சீர்படுத்துவது என்றே அவருக்குத் தெரியவில்லை. அவனுடைய தாயாரோ, "ஐயா! உங்களண்டை ஒப்படைச்சிட்டேன்; நீங்க என்ன செஞ்சாலும் சரி. நீங்கதான் அவனை ஆளாக்க வேணும்" என்று முழுப் பொறுப்பை அவர் மீது போட்டு விட்டாள்.

ஒரு நாள் வாத்தியார் குட்டை லிங்கம் பள்ளியில் நுழையும் பொழுது, என்றும் இல்லாத ஓர் ஆரவாரத்தையும் கொண்டாட்டத்தையும் அவர் பிள்ளைகளிடம் கண்டார். அவர் வருகையால் அமைதி ஏற்பட்ட போதி



னும், குழந்தைகளின் மலர்ந்த முகங்களிலிருந்து அடிக்கடி அடக்க முடியாத சிரிப்பு பொங்கி வழிந்தது. வாத்தியாருக்கு ஒன்றும் புரிய வில்லை. ஆனால் சிறுவர்களின் பார்வை மாரியை நோக்கிச் சென்றதால், இந்தக் களிப்புக்குக் காரணம் மாரி என்றே உணர்ந்தார். "என்னடா மாரி! நீ என்ன செய்தாய்? ஒளிக்காமல் சொல்" என்றார் அவர்.

மாரியோ பேச முடியாமல் எழுந்து நின்றவாறு இருந்தான்.

வாத்தியார் பிரம்பை எடுத்தார்.

"வேண்டாம், ஐயா!" என்று கெஞ்சியவாறு, தன்னையறியாமல் இடுப்பை அணைத்துக் கொண்டிருந்த இரு கைகளை மேலே தூக்கினான். அதே சமயத்தில் ஒரு சின்னஞ் சிறு குருவி தன் காலுக்குக் கட்டப்பட்ட நூலுடன் பறந்தோடியது! காட்டுப்புறத்துப் பிள்ளைகள் ஆசிரியரையும் மதிக்காமல் கைகொட்டினார்கள். குட்டை லிங்கம் மாரியை அடித்து வழிக்குக் கொண்டு வர முடியாது என்பதை உணர்ந்தார். அவனோடு போகாமல் மற்றவர்களையும் அவன் கெடுத்து விடுவான் என்று அவர் பயந்தார். ஒரு கணம் யோசித்தார். பிறகு கதவைத் திறந்து இடிந்தும் இடியாமலும் குப்பை கூளங்கள் நிரம்பிக் கிடந்த கொட்டகையின் பின்புறத்தில் தள்ளிக் கதவைத் தாழ்ப்பாளிட்டார். மாரி கதறினான். "வேண்டாம், ஐயா! வேண்டாம், ஐயா! நான் இனிமேல் ஒன்றும் செய்ய மாட்டேன். எனக்குப் பயமாயிருக்குது" என்று கெஞ்சினான்.

"உனக்குப் பயம் வேறயா? சோறு தண்ணீர் இல்லாமல் ஒரு நாள் விழுந்து கிடந்தால் தான் உனக்குப் புத்தி வரும்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு, அவர் பிள்ளைகளிடம் வந்து விட்டார்.

மாரிக்கு அச்சம் ஏற்பட்டது என்று சொல்வதற்கில்லை. தனிமையை அவனால் பொறுக்க முடியவில்லை. குறும்புத்தனத்துக்கு ஏதாவது வழி இருந்தால் அதை அவன் மறந்திருப்பான். ஆகவே, சிறிது நேரம் அழுது கொண்டிருந்தான். பாழடைந்து கிடந்த அந்த இடம் பள்ளியை விடப் பெரிதாகவே இருந்தது. ஆனால் அதனுடைய மதிற்சுவர்களிலிருந்து புழுதி சரிந்தவாறே இருந்தது. அங்காங்கே சுவர்களில் சிறிதும் பெரிதுமாகத் துளைகளும் இருந்தன. ஒரு புறத்தில் கூரை பாழடைந்து போய் படர்ந்து நீளத்துக்குப் பல ஓலைகள் சாய்ந்து வைக்கப்பட்டிருந்தன. இரண்டு பெரிய ஆட்டுரல்கள் ஒன்றையொன்று பார்த்தவாறு, போகவும் வருவதுமாக இருந்தன. அவன் அவையுடைய பார்வையைச் சிறிது நேரம் கவனித்தான். பிறகு சலிப்புத் தட்டி விட்டது. கூரையை அண்ணாந்து பார்த்தான். அதன் உயரம் அவன் எண்ணத்துக்குத் தடை போட்டது. இருந்தும் சிறுநீர் கழிக்க அவனுக்கு அவசரம் ஏற்பட்டு விட்டது. எவ்வளவு முறையிட்டுக் கொண்டாலும் வாத்தியார் கதவைத் திறக்க மாட்டார் என்று அவனுக்குத் தெரியும். அதனாலேயே சுவரோரமாகச் சென்று உட்கார்ந்து கொண்டான். அங்கே சுவரில் ஒரு துவாரம் இருந்தது. அவன் கை சும்மாயிராமல் அதைத் தட்டியது. உடனே மண் பலபல வென்று உதிர்ந்தது. துவாரமும் இரு மடங்கு பெரிதாயிற்று. இப்பொழுது மாரி உண்மையாகவே பயந்து விட்டான். சுவர் இடிந்து கூரை தலை மேல் விழுந்து விட்டால் என்ன செய்வது!

இனி எப்பொழுதும் அப்பாழும் கொட்டகைக்குள் தள்ளப்படாத வழியைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். கதவு அடைக்கப்பட்ட குறுக்குச் சுவர் புதிதாகையால் அது விழாது என்ற தைரியம் வந்தது. உடனே கதவோரம் சென்று நின்று கொண்டான். இப்பொழுது ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆகி விட்டதால், மாரி என்ன செய்து கொண்டிருந்தான் என்பதைத் தெரிந்து கொள்ளக் குட்டை லிங்கம் மெள்ளக் கதவைத் திறந்தார். அவரைக் கண்டதும் மாரி, "ஓ"வென்று அழத் தொடங்கிவிட்டான். அச்சத்தாலும் துன்பத்தாலும் அவ்வளவு சீக்கிரத்தில் ஒடுங்கிப் போன அவன் முகத்தைக் காணக் குட்டை லிங்கத்துக்கே பரிதாபம் ஏற்பட்டது. "ஏன்டா, இந்தக் கஷ்டமெல்லாம் உனக்கு? எல்லோரையும் போல், நல்லதனமாக நடந்து கொண்டு உருப்படக் கூடாதா? இனிமேல் தப்பு செய்ய மாட்டாயே?" என்றார்.

"மாட்டேன், ஐயா! மாட்டேன் ஐயா!" என்று மாரி அழுதான்.

பாழடைந்த கொட்டகை மாரியை ஒருவிதமாக வழிக்குக் கொண்டு வந்து விட்டதென்று குட்டை லிங்கம் உள்ளூறச் சந்தோஷப்பட்டுக் கொண்டார்.

இரண்டொரு வாரங்கள் கழிந்தன. மாரியிடத்தில் உண்டான மாறுதல் அனைவருக்கும் வியப்பாகவே இருந்தது. ஆனால் இரத்தத்தில் தோன்றிய குணங்கள் அவ்வளவு எளிதாக மறைந்து விடுமா? ஒரு நாள் வாத்தியார் பள்ளிக்கு வரச் சிறிது நேரம் ஆகிவிட்டது. பிள்ளைகள் ஆனந்தமாகக் கொட்டமடித்துக் கொண்டிருந்தனர். மாரியின் உற்சாகம் கரை புரண்டு ஓடியது.

"தள்ளாதேடா, மாரி! மறுபடியும் ஜெயிலிலே போட்டுடப் போறே" என்றான் ஆண்டி.

ஆண்டி மாரியைவிடச் சிறிது பெரியவன். ஆனால், மாரியின் துணிச்சலும், மற்றப் பிள்ளைகள் அவன் மீது வைத்திருந்த மதிப்பும் ஆண்டிக்கு ஒரு விதமான பொறாமையை உண்டாக்கியிருந்தன.

"இதோ, பாரு, ஆண்டி! நீ. எனக்கு ஜெயில் ஜெயிலுன்னு சொன்னால், எனக்குக் கெட்ட கோபம் வந்துவிடும். — ஆமாம், சொல்லிப்புட்டேன்."

"என்ன செஞ்சிடுவே?" என்றான் ஆண்டி.

"உன் பல்லை உதிர்த்துடுவேன்."

"நீயா! எந்த மூலைக்குடா நீ எனக்கு? கோழிக் குஞ்சாட்டம் கழுத்தைத் திருகிடுவேன் — அப்பாலே ஜெயிலுக்குப் போக முடியாது. ஜெயிலு, ஜெயிலு" என்று வேணுமென்றே உரக்கக் கூவினான். கோபத்தைப் பொறுக்க முடியாமல் மாரி அவனுடைய கன்னத்தில் அறைந்தான். பிறகு அவன் அடிக்க, இவனடிக்கச் சண்டை முற்றி விட்டது. இப்பொழுது மாரியின் ஒரு குத்து எக்கச்சக்கமாக ஆண்டியின் கண்ணிமையின் மீது விழுந்து இரத்தம் வரச் செய்தது. ஆண்டி நடுங்கி அழ ஆரம்பித்து விட்டான். இந்தச் சமயத்தில், வீட்டில் உறவினர்களுக்கு விருந்தளித்துவிட்டு

வாத்தியார் குட்டை லிங்கம் வந்து சேர்ந்தார். எல்லாப் பிள்ளைகளும் ஒரே குரலில் விஷயத்தைக் கூறி வந்த போதிலும் வாத்தியார் நடைபெற்றதை யெல்லாம் ஒருவாறு தெரிந்து கொண்டார்.

''அடே, மாரி! இன்று நீ இந்தப் பள்ளியை விட்டுத் தொலைய வேண்டும். இல்லாவிட்டால் நானாவது இந்த ஊரை விட்டுப் போய் விட வேண்டும். சீ, சீ! சொரணை கெட்ட கழுதை! உன்னை என்னதான் செய்வது?'' என்று அவன் தலை மயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார், கொட்டகையின் பின்புறம் தள்ள.

''ஐயா! ஐயா! வேண்டாம்! கவரு இடிஞ்ச தலையிலே விழுந்திடும்.''

''விழுந்தால் செத்துப் போவேன்'' என்று கதவைத் திறந்து அவனை உள்ளே தள்ளித் தாழ்ப்பாளையும் போட்டு விட்டார்.

கதவோரம் நின்று கொண்டு மாரி புலம்புவதை அவர் இலட்சியம் செய்யவில்லை. பத்து நிமிஷங்களுக்குப் பிறகு, அருகிலுடைய விருந்தாளிகள், பள்ளி வழியாகவே ஊர் திரும்ப வேண்டியிருந்ததால், அவரிடம் மறுபடியும் விடை பெற்றுக் கொள்ள வந்தார்கள். வாத்தியாரும், சிறிது தூரம் சென்று வழியனுப்புவது போல், அவர்களைத் தொடர்ந்தார். அவர் சென்ற சில நிமிஷங்களுக்கெல்லாம் மாரி பெரிதாகக் கூச்சலிட ஆரம்பித்தான்.

''அய்யோ! அய்யோ! அய்யோ அப்பா—கதவை அய்யோப்பா—'' என்று கதறினான். அந்தக் குரலில் இருந்த வேதனை மற்றக் குழந்தைகள் உணர்ந்து நடுங்கினர். கதவைத் திறக்கத் தைரியமும் இல்லை.

மாரியின் கூக்குரல் சீக்கிரத்தில் அடங்கி விட்டது. பிறகு பேச்சில்லாமலும் போய் விட்டது.

குட்டை லிங்கம் வந்ததும், குழந்தைகள் ஆத்திரத்தோடு அவர்கள் கேட்டதை யெல்லாம் தெரிவித்தனர். குட்டை லிங்கம் பரபரப்புடன் கதவைத் திறந்தார். அங்கே மாரியைக் காணோம்! அவனுக்குப் பதிலாகப் பெரிய மலைப் பாம்பு நகர முடியாமல் விழுந்து கிடந்தது. அதன் உடல் இரண்டு மூன்று அளவுக்குப் பருத்துக் கிடந்தது. எல்லோரையும் கண்டதும் அது நகர முயன்றது.

குட்டை லிங்கத்துக்குத் தலையில் இடி விழுந்தாற்போல் ஆகி விட்டது. ''கடவுளே! மாரியைப் பாம்பு விழுங்கி விட்டதா என்ன!'' என்று தவித்தார். ''இன்னும் உயிர் இருக்குமா? ஆண்டவனே! தெருவிலே போகிறவர்களைக் கூப்பிடுங்கடா!'' என்று வாத்தியார் கைகளை உதறிக் கொண்டு தவித்தார்.

அடுத்த நொடியில் கும்பல் கூடி விட்டது. சிலர் பாம்பின் வயிற்றைக் கீற வேண்டும் என்றார்கள். ''என்ன வாபுறீங்க? பையன் இன்னுமா பிழைச்சிருப்பான்?'' என்றார்கள் சிலர். ''தாய்க்கு ஒரு பிள்ளை! இந்தக் குட்டையனையும் ஒரு மலைப் பாம்புக்கு இரை யாக்கணுமுங்க!'' என்றான் ஒருவன் கோபத்தோடு. தம் உயிருக்கு அபாயம் வந்து விட்டதை வாத்தியார் உணர்ந்து விட்டார். ''அட, நமக்கென்னத்துக்கு அந்த வம்பெல்லாம்? சர்க்காரு உயிருக்கு உயிரை வாங்கிடாது!'' என்றான் மற்றொருவன். அவ் வழியே சென்று கொண்டிருந்த தலையாரி



முதலாளி: ஏனய்யா லேட்டு?
சிப்பந்தி: வேறு ஒரு வேலை தேடப் போயிருந்தேன். அதனாலே சித்தே லேட்டாயிடுத்து சார்!

◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊

மூக்கன் இந்தச் சந்தடியைக் கவனித்து விட்டு அவனும் அங்கே வந்தான்.

''என்னாதுங்க?'' என்று அவன் விசாரித்த போது, குழந்தைகளெல்லாம் ''மாரியை மலைப் பாம்பு விழுங்கி விட்டது'' என்று கூச்சலிட்டார்கள்.

''எங்க வீட்டுப் பசங்களைக்கூட அப்படித்தான் பாம்பு விழுங்கிடிச்சு!'' என்றான் மற்றொருவன்.

''யாரைச் சொல்றீங்கடா? குப்பன் மகன் மாரியையா?''

''ஆமாம், ஆமாம்!''


''அட, கூறுகெட்டவங்களா! அதோ, அந்த இலந்த மரத்துலே அவன் பழம் உலுக்கிக்கிட்டு இருக்கானே!'' என்றான் தலையாரி மூக்கன்.

''என்னது! மெய்யாகவா?'' என்றார் குட்டை லிங்கம் வாத்தியார், பதைக்கப் பதைக்க.

''பின்னே பொய்யா சொல்றேன்? வாங்கய்யா!'' என்று மூக்கன் நூறு கெஜத்துக்கு அப்பால் இருந்த இலந்தை மரத்தண்டை அழைத்துக் கொண்டு போனான். மரத்தின் கிளையில் மாரி ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டிருப்பதை அனைவரும் கண்டார்கள். வாத்தியாருக்குப் போன உயிர் திரும்பியது. தாழ்மையுடனும் அன்புடனும், ''மெள்ள இறங்கி வா, அப்பா மாரி. அவசரப்படாதேடா, குழந்தை!'' என்று அவர் பரிவுடன் கூறியது மாரியின் உள்ளத்தைத் தொட்டது. நிதானமாக இறங்கி வந்தான்.

''பாம்பு நீ உள்ளே நுழையறதுக்கு முந்தியே அங்கே இருந்ததா?'' என்று வாத்தியார் வினவினார்.

''இல்லீங்க, ஐயா! பயிலு ஓலைங்க சாத்தி இருந்துதே. அதுக்குள் கூரை இருந்ததுங்க. அப்போ அந்தச் செவுத்திலே இருந்த ஒரு பெரிய தொளை வழியா மலைப் பாம்பு, மரவட்டையாட்டம் மெள்ள ஊர்ந்துகிட்டு வந்தது. நான் கத்திக் கத்திப் பார்த்தேன். நீங்க கதவைத் திறக்கலே. அப்பாலே எதிர்த்த சுவரிலே ஒரு சின்னத் தொளை இருந்தது. அதைக் காலாலே உதைச்சேன். பெரிசாயிட்டுது. அப்படியே புகுந்து வெளியே ஓடிட்டேனுங்க'' என்று அவன் பெருமையுடன் சொல்லிக் கொண்டான். வாத்தியார் குட்டை லிங்கத்துக்குப் பிறகுதான் நிம்மதி பிறந்தது.


இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை : சாந்தி (ஏர்கண்டிஷண்ட்)
பிராட்வே · சயானி
மதுரை: சிந்தாமணி
மற்றும் தென்னாடெங்கும்
ஸ்ரீ பாபு பிலிம்ஸ்
...அளிக்கும்...
ஏ.டி.கே
பிரொடக்ஷன்ஸ்
அறிவாளி
தயாரிப்பு – டைரக்ஷன்
ஏ.டி. கிருஷ்ணசுவாமி B.A.,
ஸ்ரீ பாபு பிலிம்ஸ்
RIGHTS CONTROLLED BY: RANA FILMS. SOLE PROP: P.M.A.N. NAGARATHINAM VIRUDHUNAGAR



மாதுவின் பூனை

வாசவன்

"மியாவ்!"

"சனியன், சனியன்!.... அடே ராமு!.... அந்தச் சனியனை எங்கேயாவது காட்டிலே கொண்டு போய் விட்டு விட்டு வாடா..... சாக்கிலே தள்ளிக் கட்டிண்டு போடா!"

ராமு சாக்கும் கையுமாக முன் கூடத்தை நோக்கிப் பார்த்தான்.

"பக்கத்தில் நெருங்கினாயோ கன்னத்தைத் திருப்பி வச்சிடுவேன். போடா! போய் அத்தையைச் சாக்கிலே கட்டிக் காட்டிலே கொண்டு போய் விட்டு விட்டு வா!..." மாதுவின் கூச்சல் வீட்டையே பிளந்தது.

அத்தை தீயை மிதித்தவள் போல் துள்ளி எழுந்தாள். முன் கூடத்துக்கு விரைந்தாள்.

அவளுடைய அருமை மருமான் மாது. அந்த வெள்ளை நிறப் பூனைக்குட்டியைத் தன் நெஞ்சோடு அணைத்து, கன்னம் படும்படியாகத் தேய்த்துக் கொஞ்சுவதைப் பார்க்கப் பார்க்க, அத்தைக்குப் பற்றிக் கொண்டு வந்தது. "அப் பீடையைக் கொண்டு போய் விட்டெறிந்து விட்டு வாடா மாது!"

"முடியாது, அத்தே! இதை வளர்க்கிறதுக்காகக் கொண்டு வந்திருக்கேன்!"

மாதுவா அப்படி எடுத்தெறிந்து பேசுபவன்? அதுவும் அத்தையிடமா? இந்த விவகாரத்துக்கு முன்னால்வரை அவள் உட்காரச் சொன்னால் உட்காருவான்; எழுந்திருக்கச் சொன்னால் எழுந்திருப்பான். அந்த மாது இப்போது அத்தைக்கு எதிராகப் போர்க் கொடியைத் தூக்கிக் கொண்டு நிற்கிறான்! 'முடியாதாமே?'

அத்தைக்கு மாதுவிடத்தில் கோபப்பட நினைத்தாலும் அது முடியாத காரியம். அப்பா இல்லாத பிள்ளை என்ற செல்லம், உலகம் தெரியாத கோமுவின் பிள்ளை என்ற இரக்கம், தன் நெஞ்சில் விட்டு வளர்த்த பிள்ளை என்ற பாசம், ஊருக்குப் பெரிய மிராசுதார் என்ற மரியாதை... இத்தனையையும் மனத்தில் வைத்துக் கொண்டு அவனை எப்படிக் கோபிக்க முடியும்?

பையனுக்குப் பன்னிரண்டு வயது ஆகிவிட்டது அல்லவா? மீசை முளைப்பதற்கு முன்னாலேயே அறிவு முளைத்து விட்டது. ஆனால் அந்த அறிவு கொம்பலைத்துக் கொண்டு போய் அத்தையை அல்லவா முட்டுகிறது?

அவளுக்குத் தன் தோல்வியை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள விருப்பம் இல்லை. "அடே மாதூ....!" குரல் முற்றிலும் மாறி ஒலித்தது.

"என்ன அத்தே?"

"புஸ்தகத்தைப் பிடிக்கிற கையிலே பூனையைப் பிடிக்கலாமாடா?"

"பிடிச்சால் என்னவாம்?"

"பாவம்டா!"

"பசுவை மட்டும் நாம் வளர்க்கலையா? அதுக்குப் புல் போட்டால் பால் தருகிறது. ஆதாயம் இருக்கிற விஷயமெல்லாம் புண்ணியம், ஆதாயமில்லாததெல்லாம் பாவமா?" மாது கேட்கிற கேள்விதானா?

அத்தைக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. ஆனால் பயமுறுத்தத் தெரிந்திருந்தது. "பூனை மயிர் உதிர்ந்தால் குடும்பத்துக்கு ஆகாதடா!"

"இதுவரையில் நம் குடும்பத்திலே பூனை வளர்த்ததில்லே; மயிரும் உதிர்ந்ததில்லே. அப்போ குடும்பத்துக்கு ஆகி வரவேண்டியதுதானே? நீ போன கருக்கிலே முக்காட்டைப் போட்டுண்டு வந்தே. அம்மா நம் குடும்பத்துக்கு வந்த அஞ்சாவது வருஷமே மஞ்சள் குங்குமத்தை இழந்தாள். இதெல்லாம் ஏன்னு கேட்கிறேன்!"

இவற்றுக்கெல்லாம் ஆண்டவனுக்குப் பதில் தெரியுமோ என்னவோ, அத்தை 'என்னத்தை'க் கண்டாள்?

"ஏன்டா இன்னைக்கு ஒரு மாதிரியாப் பேசறே மாது? யாரோ உன் மனசைக் கெடுத்து வச்சிட்டான்!"

அத்தை இதுவரையில் அழுததில்லை. இப்பொழுது கண்கள் கலங்கி விட்டன.

"நீ என்ன சொன்னாலும் நான் பூனைக் குட்டியை வளர்க்கத்தான் போகிறேன்." அடித்துப் பேசிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான் மாது.

"நான் உனக்கு வேணுமா, வேண்டாமாடா மாது?"

"வேணும்."

"பூனைக்குட்டி?"

"அதுவும்தான் வேணும்."

"பூனைக்குட்டி இருக்கிற இடத்திலே ஒரு நிமிஷம் கூட நான் இருக்க மாட்டேன்டா!"

> ''இந்தக் கூஜா ஐயாயிரம் வருஷத்துக்கு முந்தியது. இதில் சந்தேகமில்லை. நான் காரண்டி தருகிறேன். இது மாதிரி எத்தனையோ கூஜாக்களை நானே செய்து விற்றிருக்கிறேன்! தெரியுமா?''

''இருக்க வேண்டாம்! நீ உள்ளேயே இரு!''

''உள்ளேகூட இருக்க மாட்டேன்!''

''பிறகு?''

''காசிக்குப் போயிடுவேன்.''

''பேஷாப் போ!''

எப்படி உதறி எறிந்து விட்டான்?

அத்தைக்குக் கோபம் வரும்போதெல்லாம் 'காசிக்குப் போய்விடுவேன்' என்று சொல்வான். ஆனால் 'பேஷாய்ப் போயேன்' என்று யாராவது கழுத்தைப் பிடித்துத் தள்ளினால் போய்விடுவானோ? அது வெறும் பூச்சாண்டி காட்டுகிற கோபம்தான். அதற்கே பதறிவிடுவானே இந்த மாதுப் பயல்? 'நீ போகிறதா இருந்தால் என்னையும் அழைச்சிண்டு போயிடு. இல்லேன்னா நான் உன் கண்ணெதிரேயே பிராணனை விட்டுவிடுவேன்' என்கிறவன் தான் இப்பொழுது 'பேஷாப் போ!' என்று தன் நெஞ்சை நிமிர்த்தி விட்டுக் கொண்டு சொல்கிறான்!

அவன் காசிக்குத் தொலைந்து விடவேண்டுமென்று எத்தனை பேர்கள் எத்தனை காலமாக ஜபித்துக் கொண்டிருக்கிறார்கள்?

கோமு இந்த விட்டுக்கு மாட்டுப்பெண்ணாக வந்தபோதே அத்தைதான் கொடிகட்டி ஆண்டாள். அறியாப் பருவத்தில் ஒருவனுக்கு மாலையிட்டு அறியும் பருவத்திலும் அவனைப் பறிகொடுத்து விட்டு வந்தவள் அவள். கூடப் பிறந்தவன் பரம சாது. குடியானவர்களோடு மாரடித்து, மல்லுக்கு நின்று தானியங்களை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கக் கூடிய சாமர்த்தியம் இல்லாதவன். அத்தைதான் காரியத்தில் ஆண்பிள்ளையாக வேண்டியிருந்தது. கூடப் பிறந்தவனுக்குப் புத்திசாலித்தனம்தான் இல்லை. ஆயுளாவது கெட்டியாக இருக்கக் கூடாதோ? கோமு உண்டாகி இருக்கும்போது அவன் மண்டையைப் போட்டு விட்டான். இந்தப் பயல் மாது அப்பன் முகத்தைப் பார்க்காமல் பிறந்தவன்! கோமுவுக்குச் சாமர்த்தியம் பற்றவில்லை. இதனாலெல்லாம் தூக்கின கொடியை அத்தையால் கீழே போட முடியவில்லை.

கோமுவுக்குச் சாமர்த்தியம் இல்லை என்னும் அழுகுணித்தனமான அபிலாஷைகள் உண்டு. 'அத்தை காசிக்குப் போய்விட்டால் அந்தக் கொடியைத் தானும் கொஞ்ச நாட்கள் தூக்கிப் பார்க்கலாமே!' நினைத்தாலும், சொல்ல முடியாது. அத்தை உருட்டி ஒரு விழி விழித்தால் சமையற்கட்டில் போய்ப் பதுங்கி விடமாட்டாளா? அத்தையாகப் பார்த்து மனசு இறங்கிக் காசிக்குப் போகிற அந்த நல்ல நாளை ஊமைத்தனமாகவே எதிர் பார்த்துக் கிடந்தாள் கோமு. அத்தைக்கா அது தெரியாது?

குடியானவர்களுக்கும் அத்தை பேரில் எரிச்சல். அறுவடைக் களத்தில் தாளடி வைக்கோலை மேலாகப் பரப்பி உள்ளே கதிர்க் கட்டுக்களை விரித்து வைக்க விட மாட்டான். கண் பார்வை கொஞ்சம் விலகினால் பதர்க் குவியலோடு 'அறங்கை புறங்கை'யாக நெல்லையும் குவித்துச் சேர்க்கும் திருட்டுத்தனமெல்லாம் அவனிடம் நடக்காது. அவனாகப் பார்த்து, கலம், இரு கலத்தை அள்ளிக் கொடுத்தாலும் கொடுப்பானே தவிர, அயோக்கியத்தனத்துக்கு ரொம்பக் கண்டிப்பாக இருப்பான். அவர்களுக்கும் இந்த அத்தை ஒழிந்துவிட மாட்டானா என்று கவலை.

எதிர் வீட்டுக்காரன் புதுப் பணக்காரன். சிங்கப்பூர் சம்பாத்தியம். 'அந்தக் குடும்பம் எப்பொழுது கெடும், உதவி செய்கிற சாக்கில் உள்ளே நுழைந்து நிலங்களை எப்பொழுது ஏப்பம் விடலாம்' என்று ஒரு கண்ணைச் சாய்வாகத் திருப்பிக் கொண்டிருக்கிறான். அத்தை இருக்கிற வரையில் அந்தக் குடும்பம் கெடாது என்பதைக் கண்டிப்பாகத் தெரிந்து கொண்டு விட்ட அவன், ஊருக்கெல்லாம் வருகிறதே, இந்த அத்தைக்கு ஒரு சாவு வராதா?' என்று மூச்சுக்கு மூச்சு வயிறு பற்றி எரிந்து கொண்டிருக்கிறான்.

மளிகை மாணிக்கம் செட்டியாருக்கும் இதே வயிற்றெரிச்சல் உண்டு. அவர் கடையில் ரொக்க வியாபாரம் இல்லை. எல்லாம் கடன். எப்படி? விவசாயிகள் மகசூலை அடிப்படையாகக் கொண்டு வேண்டுமென்கிற சாமான்களை வாங்கிக் கொள்ளலாம். வருஷத்துக்கு ஒரு தடவை நிலுவையைச் செலுத்தினால் போதும். அதற்கு அவர் அதிகமாக ஆதாயம் ஒன்றும் வைத்துக் கொள்வதில்லை. 'கடவுளுக்குக் கண்ணு அவிந்து விட்டது? பூலோகத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாரே!' அதனால் சாமான்களுக்கு ஒட்டிக்கு இரண்டு ரெட்டை விலை போடுவார். இருபது ரூபாய்க்கு ஒரு கலம் வட்டி. இவ்வளவுதான். இந்த உலகம் இருக்கிற இருப்பிலே இது என்ன அதிகமா? பத்து ரூபாய்க்குச் சாமான் கொடுத்தால் வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் காத்திருந்து, களத்துக்கே வண்டியை ஓட்டிக் கொண்டு போய், ஐம்பது ரூபாய் நெல்லை அளந்து வருகிறார். மனிதனை விட்டுத் தள்ளுங்கள்! அவன் ஒன்றுக்கு ஐந்து பங்காகக் கொடுக்கப் பிறந்தவன். எல்லாம் ஏழுமலை ஆண்டவன் செயல் என்று வானத்தை நோக்கிக் கரம் கூப்புகிறாரே, அந்த ஒன்றுக்கே கொடுக்கலாம், ஐம்பதும், நூறும்.

'இது ஏழுமலை ஆண்டவன் செயல் இல்லை. மாணிக்கம் செட்டியாரின் அடாவடிச் செயல்' என்று ஊரில் புரட்சியை ஏற்படுத்தியவன் அத்தை. அவனுக்குக் கோபம் மூக்குக்கு மேலே காத்துக் கொண்டிருக்கும். அயோக்கியத்தனத்துக்கு அவன் பரம எதிரி. ஆனால் நெஞ்செல்லாம் கருணையாய்ச் சுரந்திருக்கும். விவசாயிகள் வேண்டும் என்கிற பணத்தை முறி எழுதிக் கொடுத்து வாங்கிப் போகலாம். வட்டி கிடையாது; ஆனால் களத்திலேயே நெல்லாக அளந்து கொடுத்துவிட வேண்டும் என்ற புரட்சியோடு அவர்கள் மீட்சிக்கும் வழி செய்தான். அதனால் மாணிக்கம் செட்டியாரின் வியாபாரம் வியாதியோடு படுத்து. தொண்டைக்கும் நெஞ்சுக்குமாக இழுத்துக் கொண்டிருக்கிறது!

சமைக்கும்போதே இளைப்பாறலாம்

இந்த அற்புத மண்ணெண்ணெய் அடுப்பு கண்டு பிடிக்கும் வரையில் சமையல் என்றாலே மிகக் கஷ்டமான காரியம் என்று கருதப்பட்டு வந்தது. இப்பொழுது நீங்கள் சமைக்கும்போதே இளைப்பாறலாம். கரி உடைக்கும் கஷ்டமோ அடுப்பூதும் சிரமமோ, கண்ணில் புகை மண்டுதலோ இல்லை. சமையலறையில் புகைக்கரி பிடிக்காது. இந்த அடுப்பு துப்புரவானது. எளிதானது. எளிமையானது.

- தூசி, தும்பு, புகை, சத்தமில்லை
- சிக்கனமும் பாதுகாப்புமுள்ளது
- ஸ்பேர் பாகங்கள் கிடைக்கும்



காஸ் ஜனதா

மண்ணெண்ணெய் அடுப்பு

கலையான சமையல் — கலப்பமான சமையல்

தயாரிப்பாளர்கள் :

தி ஓரியண்டல் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

77, பௌபஜார் தெரு, கல்கத்தா - 12

உங்கள் சருமத்தை சுத்தமாக வையுங்கள்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தால் முகப் பருக்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும் வழவழப்பாகவும் மாக மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடர்ம் (Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள், கட்டிகள் செந்நிறத் தழும்புகள் மேலாகப் பரவும் படை, படர் தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும் பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளையும், கிருமிகளையும் அழித்தாலன்றி உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப் பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் அது இருக்கச் செய்யும் என்ற பூர்ண நம்பிக்கையுடன் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள்.

மலிவு விலையில் விற்பனையாகிறது மற்றொரு சிறந்த நூல்

இதுவரையில் இந்த அளவில், இந்த குறைந்த விலையில் வெளிவராதது

உலகப் பெரியார்கள்

(வாழ்வாங்கு வாழ்ந்த ஆன்மீக ஞானிகள், அறிஞர் பெருமக்கள், அரசியல் தலைவர்கள், மாவீரர்கள் செயல் வீரர்கள் இவர்கள் பலரின் வரலாற்றுச் சித்திரங்கள்—கருத்துக் குவியல்கள் — தெள்ளிய நடை)

மூவர்ண அட்டை

ஆசிரியர் : **S. P. இராமச்சந்திரன்**

பக்கங்கள் 160 — விலை ரூ. 1-00

எமது ஏனைய சிறந்த மலிவு விலை நூல்கள்

உலக அறிவு (Quotations)	ரூ. 1-00
நானூற்பது (சங்க நூல்)	ரூ. 1-00
தனிப்பாடல் திரட்டு	ரூ. 1-50

மீனாட்சி பதிப்பகம்

புதுக்கோட்டை

> ஒவ்வோர் ஆத்மாவும் உள்ளே தெய்வத்தன்மை நிரம்பப் பெற்றதாகும். உள்ளடங்கி யிருக்கும் இந்தத் தெய்வத் தன்மையை அகத்திலும் புறத்திலும் உள்ள இயற்கை வேகங்களை அடக்கி ஆள்வதன் மூலம் வெளிப்படுத்துவதே மானுடனின் இலட்சியமாகும்.
>
> **— ஸ்வாமி விவேகானந்தர்**

மாணிக்கம் செட்டியார் அத்தைக்கு மண்ணை வாரித் தூற்றினார். பிறகு என்ன? தம்மிடம் நல்லபடியாக வந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்களைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிய அவளைப் போற்றவா செய்வார்?

இத்தனை செய்தும் இந்த விவசாயிகளுக்கு நன்றி உண்டா? மாணிக்கம் செட்டியாருக்கு விளைந்ததை யெல்லாம் கொட்டிக் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். களத்தில் களவாணித்தனம் நடக்க விடாமல் அத்தை கண்டிப்பாக இருந்ததுதான் அவர்களுக்குப் பிடிக்கவில்லை!

எங்கு திரும்பினாலும் அவளுக்கு எதிர்ப்பு! வீட்டிலிருந்து வெளியில் உள்ளவர்கள் வரை அவள் ஒழிந்துவிட மாட்டாளா என்று கரித்துக் கொட்டுகிறார்கள். இத்தனைக்கும் அவள் செய்த கொடுமை என்ன? அணைக்க வேண்டிய சமயத்தில் அணைத்து உதைக்க வேண்டிய சமயத்தில் உதைத்தாள். சிங்கப்பூர் பணக்காரன் கொட்டாவி விட வகை வைக்காமல் குடும்பத்தைக் காத்தாள். மாணிக்கம் செட்டியாரின் அடாவடியிலிருந்து விவசாயிகளைக் காத்தாள். இதற்காக அவளுக்கு ஆளுக்கு ஆள் குழி வெட்டுகிறார்களே!

அத்தைக்கு எல்லாம் தெரியும். எல்லாவற்றையும் இந்த மாதுவுக்காகத்தானே பொறுத்துக் கொண்டாள். இவன் தலையெடுத்து வெளியில் ஒரு சிங்கம்போல உலவி வரும் காலத்தை எதிர்பார்த்துத் தானே அவளுக்கு வெட்டி வைக்கப்பட்டிருக்கும் குழிகளில் விழாமல் நடமாடிக் கொண்டிருக்கிறாள்?

இன்று இவனும் சொல்லிவிட்டான், 'காசிக்குப் பேஷாப் போ' என்று. அதுவும் சும்மா போகக் கூடாதாம். பேஷாகப் போக வேண்டுமாம்!...

'இன்னிக்குத்தான் என் நிலை தெரியறது. நான் இந்தப் பூனைக்குட்டியை விடக் கேவலமானவள். இதுக்கு அத்தையை இழக்கிறதுக்கு ஒரு மாது இருக்கிறான். எனக்கு யார் இருக்கா?' நினைத்த மாத்திரத்திலேயே அத்தைக்குப் பொங்கிக் கொண்டு வந்தது. கேவிக் கேவி அழுதாள். அங்கே நின்று கொண்டிருந்தவர்களுக்கு ஒரே பிரமிப்பு!

அத்தை விருட்டென்று உள்ளே போனாள். திரும்பும்போது அவள் கையில் ஒரு துணி மூட்டை யிருந்தது. கோமு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். தன் உரிமைக்காகத் தவம் கிடந்தவள் இல்லையா அவள்?

மாது குழம்பிப் போயிருந்தான். அத்தையின் நெஞ்சில் வளர்ந்தவன் அவன். அத்தையைப் பிரிந்திருக்க முடியுமோ? ஆனால் அவன் இந்தப் பூனைக்குட்டியைக் காட்டில் கொண்டு போய் விடச் சொல்கிறானே!

வேலைக்காரன் ராமுவுக்கு நிஜமாகவே கலக்கம். பெற்ற பிள்ளையைப்போல் அவளுக்கு அவனிடம் எவ்வளவு கனிவு? வேலைக்காரன் தானே என்று ஒரு நாளாவது அவனுக்குப் பழையது போட்டதுண்டா? சனிக்கிழமை எண்ணெய் ஸ்நானம் செய்யா விட்டால் அவனை இலேசில் விடுவாளா? அவளா இன்று அநாதை போல் வெளியேறிக் கொண்டிருக்கிறாள்? அழுகையும் கண்ணுமாய் அத்தைக்கு எதிரே போய் நின்றுகொண்டான். ''அத்தை! நீங்க பெரியவா. மாது சின்னப் பிள்ளை. அவன் தெரியாமல் சொன்னதுக்காக நீங்கள் காசிக்குப் போயிடறதாக இருந்தா, எனக்கு ஒரு வழியைச் சொல்லிட்டுப் போங்கோ'' என்று தேம்பினான்.

அத்தை கலக்கத்துடன் சிரித்தாள். ''நான் ஏண்டா காசிக்குப் போறேன்? உணர்ச்சிகளை யெல்லாம் கட்டுப் பொசுக்கிச் சாம்பலா வாரி எறிந்து விட்டு இந்த வீட்டுக்கும் ஊருக்கும் உழைச்சவள்டா நான்! காசிக்குப் போயா நான் புண்ணியம் தேடணும்? எங்கேயோ போறேன்! எப்படியோ போகிறேன்!'' என்று கூறிக் கொண்டே தெருவில் இறங்கினாள்.

சிங்கப்பூரான் வாசலில் கொட்டாவி விட்டுச் சிரித்தான்.

அதைப் பார்த்து விட்ட அத்தை, தெருவிலிருந்து மீண்டும் வாசற்படியேறிப் போய் நின்றுகொண்டாள். கையிலிருந்த மூட்டையைத் தூக்கி வீட்டுக்குள் வீசினாள். சிங்கப்பூரானை எரித்துவிடுவது போல் பார்த்தாள். ''டேய், புதுப் பணக்காரா! நான் தொலையறதுக்கு முன்னாலேயே நீ கொட்டாவி விட ஆரம்பிச்சிட்டியா? உங்களிடத்திலேயாடா மாதுவை விட்டு விட்டுப் போவேன்? டேய், மாது! கொண்டாடா உன் பூனைக் குட்டியை. ஒரு பிராணியை வளர்க்கிறதனாலே இந்தக் குடும்பம் கெட்டுப் போறதுன்னா பேஷாப் போகட்டும். ஆனால் இந்தச் சிங்கப்பூரானாலே இந்தக் குடும்பம் கெட்டுப் போகிறதை நான் பார்த்திண்டிருக்க மாட்டேன்'' என்று கம்பீரமாகப் பேசிய அத்தையின் கையில் மாது கொடுத்த பூனைக் குட்டி பட்டு நூலாய் இழைந்தது.

சிங்கப்பூரானும் தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மாணிக்கம் செட்டியாரும் தொள்ளாயிரத்துத் தொண்ணூறாவது தடவையாக மூக்கறுபட்டார்கள்!

கோமுவைக் காணவில்லை!

மாது அத்தையின் அணைப்பில் சொக்கிப் போயிருந்தான்.

ராமுவுக்கு ஏகப்பட்ட சந்தோஷம். அந்தச் சந்தோஷத்தைப் புகையாய்க் கக்கி விடக் கொல்லை மறைவிடத்தைத் தேடிக் கொண்டு ஓடினான்.

அத்தை அதிகாரம் செய்யவே பிறந்தவள். எல்லோரையும் ஆளப் பிறந்தவள். கேவலம் இந்தப் பூனைக் குட்டியால்தானா அவளை அசைத்துவிட முடியும்?

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

சிறந்த அமிலநாசினியும், மலமிளக்கியும்



நம்பிக்கை

ஒவ்வொரு துறையிலும சில தயாரிப்புகள்தான்
சிறந்த குணமும், பல வருடங்களாக நம்
பிக்கையானதாகவும் பெயர் பெற்று உயர்ந்த இடம்
பெற்றிருக்கின்றன. இந்த நம்பிககையான தன்
மைதான் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உலகில்
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டும் 75
வருடஙகளுக்கு மேலாக சிபார்சு
செய்யப்பட்ட உலகமறிந்த
தாயரிப்பும் ஆகும்.

அதிகாரம் பெற்ற தயாரிப்பாளர்கள்:

டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபாக்சரிங்) பிரைவேட் லிமிடெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon